திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மார்ச் 2021

விலை ரூ.5/-



ஸ்ரீநிவாசமங்காபுரம்

ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

2021 மார்ச் 02 முதல் 10 வரை

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருமலையில் 19-02-2021 அன்று ரதசப்தமி முன்னிட்டு நடைபெற்ற சப்த வாகன சேவை

















அத$_2$வ்யவஸ்தி$_3$தாந்த்$_3$ருஷ்ட்வா
த$_4$ார்தராஷ்ட்ராந் கபித்$_4$வஜ: |
ப்ருவ்ருத்தே சஸ்த்ரஸம்பாதே
த$_4$நுருத்$_3$யம்ய பாண்ட$_3$வ: ||

அரசே! இதன் பின்னர், அனுமக்கொடியை உடைய அர்ஜுனன் அணிவகுத்துப் போர் புரியத் தயாராய் நிற்கின்ற திருராஷ்டிர குமாரர்களையும், அவர்களைச் சார்ந்தவர்களையும் பார்த்து, அப்பொழுது ஆயுதங்களை விடுக்க முனைகின்றபோது வில்லை நிமிர்த்தி கொண்டார்.

– ஸ்ரீமத் பகவத் கீதை 1–20

அருடரு மடியர்பான் மெய்யை வைத்துத்
தெருடர நின்ற தெய்வநா யகநின்
னருளெனுஞ் சீரோ ரரிவையா னதென
விருள்செக வெமக்கோ ரின்னொளி விளக்காய்
மணிவரை யன்ன நின்றிரு வுருவி
லணியம ராகத் தலங்கலா யிலங்கி
நின்படிக் கெல்லாந் தன்படி யேற்க
வன்புட னின்னோ டவதரித் தருளி
வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்
தீண்டிய வினைகண் மாண்டிட முயன்று
தன்னடி சேர்ந்த தமருனை யணுக
நின்னுடன் சேர்ந்து நிற்குநின் றிருவே.

பாகவதர்கள் மீது, மெய்யாக ஒழுகுந்தன்மையை இட்டு, ஞானத்தை அருள முற்பட்டு நின்ற, தெய்வ நாயகனே! எமக்கு இருள் ஒழியும்படி, ஒப்பற்ற இனிய பிரகாசத்தையுடைய தீபம் போன்றவனாய், இந்திரநீலபர்வதம் போன்ற உன் அழகிய திருமேனியில் திருவாபரணங்கள் அமர்ந்து நிற்கின்ற திருமார்பில், மாலையாக பிரகாசித்துக் கொண்டு உன் பிரகாரங்களுக்கெல்லாம், தன் பிரகாரங்கள் ஒத்திருக்குமாறு, அன்புடன் உன்னோடு அவதரித்தருளி, பிரார்த்திக்கும் உரைகளைக் கேட்டு மறுபடியும் அவ்வுரைகளை கேட்குமாறு செய்து திரண்ட கர்மங்கள் ஒழிந்து போக முயன்று தன் திருவடிகளை அடைந்த பாகவதர்கள் உன்னை அடையும்படி உன் கருணையெனும் குணமே, ஒப்பற்ற பெண் வடிவுகொண்டது என்னும் படி உன்னொடு சேர்ந்து நிற்கின்ற உனக்கும் பெருமையைத் தருபவளான பிராட்டியே அருள் புரிவாள்.

- ஸ்ரீதேசிகப்பிரபந்தம்-347









திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை"

*"மானிட சேவையே மாதவன் சேவை" எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி.தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943-ஆம் ஆண்டு ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஸ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாண மஸ்து திட்டம், ஸ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை" யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

**திட்டத்தின் நோக்கங்கள் :**

1) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி, இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத் தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.

2) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம் படுத்துவது, குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர் ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.

3) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங் களின் போதும், தீப்பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போதும் விரைவான உதவி களை மேற்கொள்ளுதல்.

4) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக் கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.

5) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.

6) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வச தியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சா யத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர் வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதி நவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம் பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.

8) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை வளர்த்து இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.

9) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மண மக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.

10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.

11) மேலே விவரித்த இலட்சிய சாதனங்களில் இலா பம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் பார்ப்பது.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை நன்கொடையாளர்களுக்கு :**

1) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-

2) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்விதத் தகவலும் இன்றி ஸ்ரீவாரி உண்டிக்கணக்கில் செலுத்தப் படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்குபவர்கள் - "செயலாட்சித் தலைவர், ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயரில் காசோலை / வங்கி கேட்பு வரைவோலையை "பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி - 517 507" எனும் முகவரிக்கு அனுப்பவும்.



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மலர் 51

இதழ் 10

மார்ச் 2021

## உள்ளுறை

சிறப்பு ஆசிரியர் :
Dr. K.S. **ஜவஹர் ரெட்டி,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
பிரதான ஆசிரியர் :
**பேராசிரியர்** K. **ராஜகோபாலன்,** பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்),
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**

*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**

நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri_helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்

பக்கம்

**சரணாகதி கத்யத்தில் பெரிய பிராட்டி** 7
- திரு. பி.எஸ். திருமலை, சென்னை.
**வேடனுக்கு முக்தி தந்த திருவைகாவூர் திருத்தலம்** 12
- திரு. பனையபுரம் அதியமான், சென்னை.
**தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்** 16
- திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.
**மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்...** 19
- ஸ்ரீ. உ.வே.அ. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவரங்கம்.
**திருமழிசை ஆழ்வார் போற்றும் திருவேங்கடம்** 23
- திரு. ஸ்ரீநிவாசன், பரமகுடி.
**பகவத் கீதை–இளைய சமுதாயம் : கீதை பண்பாட்டுடன் முன்னோக்கிச் செல்** 25
- திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா.
**ஸ்ரீமஹலக்ஷ்மி தாயார்** 31
- திருமதி பிரேமா வரதன், புதுதில்லி.
**108 திவ்யதேச வைபவம் – திருச்சிரீவரமங்கலம்** 34
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.
**அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச்செயல் : கூறைப்புடவையின் முக்கியத்துவம்** 38
- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.
**அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** 41
- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.
**ஸ்ரீமத்பாகவத கதை சாகரம் – முப்புர அசுரர்களை அழித்தது** 45
- டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர்.
**ஆயுர்வேதம் : சூரிய கிரணங்கள்** 49
- திருமதி உஷா, திருப்பதி.
**நீதிக்கதைகள் : ஞானம் பிறந்த கதை** 51
- திரு. பா.பூ. பாலாஜி ஷர்மா, பாப்பாரப்பட்டி.
**சித்திரக்கதை : அர்ஜுனன் தபசு** 52
- திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா.
**புதிர் : வினா–விடை** 54
- திரு. என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்.

### அட்டைப்பட விளக்கம்

**முன்னட்டை :** ஸ்ரீதேவி பூதேவி உடனுறை ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி (உற்சவர்) – ஸ்ரீநிவாசமங்காபுரம்.

**பின்னட்டை :** ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி (உற்சவர்) – கபில தீர்த்தம், திருப்பதி.



உங்களுடன்...

# பங்குனி உத்திரத் திருநாள்

பாரதத் திருநாட்டின் பெருமைகளுக்கு அடையாளங்களாகத் திகழ்பவை தெய்வீக வழிபாடுகளாகும். இவ்வகை வழிபாடுகளில் விண்ணில் இருந்து வலிமை யான கதிர்வீச்சுகளுடன் பூமியை இயக்கும் பல நட்சத்திரங்களில் பங்குனி மாதத்தில் வருகின்ற "பங்குனி உத்திர திருநாளும்" சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. தமிழ் மாதங்களில் ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு நட்சத்திரத்திற்கு முதன்மையான இடம் அளித்து விழாக்களை நடத்துவதும், விரதம் இருப்பதும் நம் பழக்கவழக்கமாகக் கொண்டுள்ளோம். இவற்றில் பங்குனி மாத உத்திர நட்சத்திரத்திற்கு மட்டும் அதிக சிறப்பு உள்ளது. பங்குனி உத்திரத் திருநாள் சைவ ஆலயங்களிலும், வைணவ ஆலயங்களிலும் ஒரு சேர கொண்டாடப்படுகின்றது.

இந்த சிறப்பிற்கான தலையாய பெருமை மனித குலத்திற்கே தாயாய் விளங்கும் மகாலக்ஷ்மி தாயாரின் அவதாரம் நிகழ்ந்த தினம் பங்குனி உத்திரமேயாகும். அமிர்தம் பெற வேண்டி தேவர்களும், அசுரர்களும் மந்தர மலையை மத்தாகவும், வாசுகி எனும் நாகத்தினை கயிறாகவும் கொண்டு, பரந்தாமன் கூர்மாவதாரம் கொண்டு மந்தர மலையினை தாங்க பாற்கடல் கடையப்பட்டது. அதிலிருந்து ஆலகால விஷம், காமதேனு, கற்பக விருட்சம், ஐராவதம் வெளியே வர, இவற்றுடன் மனித குலத்தினை உய்விக்க அஷ்ட ஐச்வர்யங்களையும் அள்ளித் தர, பொற்றாமரை மீது அவதரித்தாள் அன்னை மகாலக்ஷ்மி தாயார். தாயார் அவதரித்த அந்நாள் பங்குனி உத்திரமாகும். தாயாரின் வாழித் திருநாமம் தொடங்கும் போதும் ***"பங்குனியில் உத்திரநாள் பார் உதித்தாள் வாழியே"*** என்று பங்குனி உத்திரத்தைச் சொல்லியே தொடங்கப்படுகிறது. பங்குனி உத்திர நாளில் தாயாரும் பெருமாளும் சேர்த்தி உற்சவம் கண்டருளுவர். அந்த நாள் ஸ்ரீவைஷ்ணவ உலகெங்கும் பொன்னாளாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த பங்குனி உத்திரத் திருநாளில் தான் தெய்வத் திருமணங்களும் அதிகளவில் நடைபெற்றதாக புராணங் கள் கூறுகின்றன. சிவபெருமானுக்கும், பார்வதி தேவிக்கும் பங்குனி உத்திரத் திருநாளில் தான் திருமணம் நடைபெற்றதாக புராணங்கள் கூறுகின்றன. இது குறித்தே திருஞான சம்பந்தரும் ***"பலி விழாப் பாடல் செய் பங்குனி உத்திர நாள், ஒலி விழாக் காணாதே போதியே பூம்பாவாய்"*** என்று பாசுரமிடுகின்றார். மேலும், இந்த பங்குனி உத்திர நாளில் தான் ஸ்ரீராமபிரானுக்கும் சீதா தேவிக்கும் திருக்கல்யாணம் நடந்தேறியது. ஸ்ரீவில்லிபுத்தூரிலே அவதரித்த ஆண்டாள் நாச்சியாருக்கும் ஸ்ரீரங்க நாதருடன் திருக்கல்யாணம் நடந்தது இந்த பங்குனி உத்திரம்தான்.

அதே போன்று முருகப் பெருமானும் தெய்வானையை மணந்தது பங்குனி உத்திர நன்னாளில்தான். முருகப் பெருமானின் மற்றொரு நாயகியான ஸ்ரீவள்ளி அவதாரம் நிகழ்ந்ததும் பங்குனி உத்திர நாளில்தான். பரதன், லட்சுமணன், சத்ருக்னன், இந்திரன் இவர்களுக்கும் திருமணம் நடந்ததும் ஒரு பங்குனி உத்திர நாளில்தான்.

பங்குனி உத்திர நாளன்று சில ஆலயங்களில் தீர்த்தவாரியும் நடைபெறும். இந்த புனிதமான பங்குனி உத்திர நாளில் தான் அனைத்து புண்ணிய தீர்த்தங்களும், திருமலையில் உள்ள தும்புரு தீர்த்தத்தில் இணைவதாக ஐதீகம். எனவேதான் அன்றைய நாளில் திருமலையில் உள்ள தும்புரு தீர்த்தத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புனித நீராடி திருவேங்கடமுடையானை தரிசித்து பலன் பெறுகின்றனர்.

சிறப்பு வாய்ந்த இந்த பங்குனி உத்திர நன்னாளில் திருமணமாகாத கன்னிப் பெண்கள் விரதம் இருந்து ஆலயங்களில் நடைபெறுகின்ற தெய்வங்களின் திருக்கல்யாண வைபவத்தை தரிசித்தால் அவர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும் என்பதும் காலந்தொட்டே வருகின்ற நம்பிக்கையாகும்.

க த்யத்ரயத்தில் முதலில் வருவது சரணாகதி கத்யம். அதில் முதலில் பிராட்டியை முன்னிடுவது முதல் சூர்ணிகை. இது த்வயத்திற்கு வியாக்யானம் ஆகும். சரணம் புகும் ஜீவாத்மாவுக்கு சரணம் புக யோக்யதை உள்ளது. கண்ணழிவற்ற உபேயருசியும், உபாயமும் அத்யவஸாயம் உண்டானபடியாலே, அதனடியாக பிராட்டி திருவடிகளில் சரணம் புகுகிறார்.

சீக்ஷா வல்லியில் *''மாத்ருதேவோ பவ பித்ருதேவோ பவ ஆசார்ய தேவோ பவ அதிதிதேவோ பவ''* என்கிறது. இவை முறையே ஜகந்மாதாவான பிராட்டியையும், அழிவற்ற தந்தையான அச்சுதனனையும் (அறியாதன அறிவித்த) ஆசார்யனையும், விருந்தாகும் பெருந்தக் கோரான ஸ்ரீவைஷ்ணவர்களையும் தெய்வமாகக் கொள்வாயாக என்கிறது. வால்மீகி, இராமாயணத்தை சீதாதேவியின் பெருங்கதை இராமாயணம் என்கிறார்.

*''அச்வபூர்வாம்''* என்று தொடங்கும் ஸ்ரீஸூக்தம் சர்வ வ்யாபியான பகவானை முன்னிட்டு இருப்பவளும் சரீரமாகிற (அல்லது) ஓம்காரமாகிற ரதத்தில் நடுவில் இருப்பவளும், கஜத்தின் நாதத்தினால் திருப்பள்ளி உணருமவளான ஸ்ரீதேவியை அருகில் அழைக்கிறேன். என் விஷயத்தில் பீதி அடையட்டும் என்கிறது.

விஷ்ணுவிற்கு செல்வமாயிருப்பவளாய், இறையும் அகலகில்லாதவளுமான இந்த பிராட்டி நித்யையே, எப்படி பகவான் ஸர்வவ்யாபியாய் இருக்கிறானோ, இவளும் ஸர்வவ்யாபியாய் இருக்கிறாள் என்கிறது விஷ்ணு புராணம்.

*''பகவந் நாராயணாமபிதாநுரூப ஸ்வரூபரூப குணவிபவைச்வர்ய ஸீலாத்யநவதிகாதி ஸயாஸயங்க் யேய கல்யாணகுணகணாம் பத்மவநாலயாம் பகவதீம் ஸ்ரீயம்தேவீம் நித்யாநபாயிநீம் நிரவத்யாம் தேவதேவ திவ்யமஹிஷீம் அகிலஜகந்மாதரம் அஸ்மந்மாதரம் அஸரண்யஸரண்யாம் அநந்யஸரண: சரணமஹம் ப்ரபத்யே''*

பகவானான நாராயணனுக்கு இஷ்டமாகவும், தகுந்ததாகவும் உள்ள ஸ்வரூபம், ரூபம் (ரூப),குணம், விபூதி, ஐச்வர்யம், சீலம் முதலான எல்லையற்ற மேன்மையுடையவையும், கணக்கற்றவையுமான கல்யாண குணங்கள், இவற்றை உடையவளும், பத்ம

# சரணாகதி கத்யத்தில் பெரிய பிராட்டி



வனத்தை இருப்பிடமாக உடையவளும், பூஜிக்கத் தக்கவளும், எப்போதும் (எம்பெருமானை விட்டு) அகலகில்லாதவளும், தோஷமற்றவளும் தேவதேவ னான எம்பெருமானுடைய திவ்யமஹிஷியும், எல்லா உலகிற்கும் தாயாய் இருப்பவளும், (விசேஷமாக) எனக்கு தாயாய் இருப்பவளும், கதியற்றவர்களுக்கும் கதியாய் இருப்பவளுமான ஸ்ரீதேவியை (வேறொரு) கதியற்ற அடியேன் சரணமடைகிறேன் என்கிறார்.

ஸ்ரீமந் – என்னும்போது இவளை விஷ்ணுபத்நீ என் கிறார். அபிமத என்பதால் எம்பெருமானுக்கு அபிமதை யாயிருக்கை. அநுரூப என்பதால், ராஜாக்கள் நீசஸ்த்ரீ கள் காற்கடையிலே துவளுவது போல அபிமதமாகிலும் அநநரூபமாயிருப்பன உண்டு. அவ்வாறு இல்லாமல் நம்மாழ்வார் அருளியபடி "உனக்கேற்கும்" என்று அநநுரூபமாயிருக்கை. அவனுக்கு இவள் ஸ்வரூபம் அபிமதையாயிருக்கை. இவன் ஸ்வரூபம் அவள் ஸ்வரூபத்திற்கு தாரகமாயிருக்கும்.

இராவணன் மாயாசிரஸ்ஸை காட்டியபோதும், இந்திரஜித் மாயாசீதையைக் காட்டியபோதும் மெய் யென்று பிரமிக்கச் செய்தே, அந்யோந்யம் தரித்திருந்த இடம் ஸ்வரூபஸத்தையாலே, அநுரூபமாவது, இவளு டைய ஸ்வரூபம் அவனோடொக்க சொல்லலாம் படியிருக்கை.

*''த்வம் மாதா ஸர்வலோகாநாம் தே₃வதே₃வோ ஹரி:பிதா ।*
*த்வயைதத் விஷ்ணுநா சாம்ப₃ஜக₃த் வ்யாப்தம் சராசரம் ॥''*

தாயே! எல்லாவுலகுக்கும் நீ அன்னை, தேவ னாகிய ஹரி தந்தை. உன்னாலும் விஷ்ணுவா லும் இவ்வுலகம் வ்யாபிக்கப் பட்டுள்ளது என்கிறது விஷ்ணு புராணம். "பிராட்டியே! தேவரீர் இராம பிரானுக்கு தகுந்தவராகவும், தர்மபத்நீயாகவும், கீர்த்தி மிக்கவராகவும் இருப்பவர். என்னை தூது அனுப்புவீர். நான் இராமனிருக்குமிடம் செல்வேன்'' என்று அனுமான் கூறுவதுபோல (இராமாயணம் – யுத்த காண்டம்), இவளுடைய ஸ்வரூபம் அவனோடொக்க சொல்லலாம்படியிருக்கிறது.

ரூபமாவது விக்ரகம், ஸ்வரூப குணங்களை சொல்ல வேண்டியிருக்க, விக்ரகத்தை சொல்லிற்று. ஸ்வரூபத்திற்கும் ஸ்வரூப குணங்களுக்கும் பிரகாச மாகையாலே, ஸ்வரூபம் அபிமதம் என்றால் ரூபம் அபி மதம் என்னுமிடம் சொல்லவேண்டா, அதுதான் ஸ்வ ரூபாஸ்திதி அபிமதம்.

*''அகலகில்லேன் இறையும்''* என்னும்படி அவன் தானும் மேல்விழும்படியிருக்கை. *''மாமலர் மங்கை மண நோக்கமுண்டான்''* என்ற அவனுக்கு *''உண்ணும் சோறும் பருகும் நீரும்''* இவள் வடிவே இருப்பது. இது அநுரூப மாகையாவது – சீலம், வயஸ், வ்ருத்தம், துல்யமா யிருக்கை.

விஷ்ணுபுராணம் – (92) (60) – புநச்ச – என்ற சுலோ கத்தில் பகவான் ஆதித்யனாக அவதரித்தால் பிராட்டி பத்மையாகயிருக்கிறாள். பரசுராமனாக அவதரித்தால், பிராட்டி தரணியாக அவதரித்தாள். எம்பெருமான் சக்ர வர்த்தி திருமகனாக (இராகவனாக) அவதரித்தால், பிராட்டி சீதையாக அவதரித்தாள்.

எம்பெருமான் கிருஷ்ணனாக அவதரித்தால், பிராட்டி ருக்மிணிப் பிராட்டியானாள் என்கிறது. அவன் தேவனாய் இருக்கும்போது இவளும் தேவதேஹம் எடுக்கிறாள்.

மனிதனாகும் போது அவளும் மனுஷியாகிறாள். விஷ்ணுவின் தேஹத்திற்குத் தகுந்ததாக தன் தேஹத்தை அமைத்துக் கொள்கிறாள். எம்பெருமான் விஷ்ணு பொருளாயிருப்பவர். பிராட்டி (பொருளைச் சொல்லும்) சப்தமா யிருப்பவள். இவள் நியாய சாஸ்த்ரமாயிருப்பவள். ஹரியானவர் நியாயமாக இருப்பவர். பகவான் ஞானமாயிருப்பவர். இவள் அதற்கு உபகரண மான புத்தியாயிருப் பவள். அவர் தர்மமா யிருப்பவர். இவள்



அதை சாதிக்கும் நற்கருமமாயிருப்பவள். *''புந்நாமா - பகவாந் ஹரி: ஸ்த்ரீ நாம்நீ லக்ஷ்மீ''* என்ப தால் புல்லிங்க பதார்த்தங்கள் அவனதாயும், ஸ்த்ரீலிங்க பதார்த்தங்கள் இவளதாயும் இருக்கை.

*''ஸர்வாந்போகாந் பரித்யஜ்ய''* என்று சர்வ போகங் களையும் விட்டு காடேறப் புறப்பட்டாள் என்கையால், லீலோபகரணங்களும் போகோபரணங்களும் அவன் விபூதியிலும் விஞ்சியிருக்கை. *''முற்றிலும் தூதையும் முன்கைம்மேல் மென்பூவையும் விட்டகன்ற செழுங் கோதை''* என்னுமவையும், ஸ்ரக்சந்தனாதிகளும், இவை ஸாமான்யமாயும் அந்தப்புர பரிகரமுமாயிருக்கும்.

ஐச்வர்ய – சகல பதார்த்தத்துக்கும் நியமன ஸாமர்த்யம். த்ரிவித சேதநர்களையும் நியமிக்கும். ஈஸ்வரனை ப்ரணியித்வத்தாலே நியமிக்கும். ஈஸ்வரனை ரக்ஷணாகுணமாக நியமிக்கும்.

ஸீலம் – அசோகவனத்திலுள்ள ராக்ஷஸிகள் பக் கல் பிரசித்தம். இராவணனைக் குறித்து *''மித்ரபௌமயிகம் கர்த்தும்''* பிராட்டி கூறுகிறாள்.

"நீ உன்னுடைய குடியிருப்பை விரும்பினாயாகில், கோரமான வதத்தை விரும்பாமலிருந்தாயாகில், இந்த புருஷசேஷ்டரான இராமபிரானை நண்பனாகக் கொள் வது நல்லது" என்கிறாள். *''விததஸ்...''* ஸ்ரீராமபிரான் தர்மத்தை அறிந்தவராகவும், சரணடைந்தவர்களிடம் வாச்சல்யம் உடையவராகவும் பிரசித்தமானவர். நீ உயிர் வாழ விரும்பினாயின், அவருடன் உனக்கு நட்பு ஏற்பட்ட டும் என்று பிராட்டி இராவணனிடம் கூறும் வார்த்தை. *''பவேயம் ஸரணம் ஹிவ''* என்று த்ரிசடை கனவு கண்டு கூறியதை அடுத்து லஜ்ஜை நிரம்பியவராய், கணவனின் ஜயத்தைக் கேட்டு ஆனந்தம் அடைந்தவளான பிராட்டி "அக்கனவு உண்மையானால் உங்களுக்கு நான் அடைக் கலம் ஆகிறேன்" என்று உரைத்தாள். ராஷஸிகளின் அச்சத்தை நீக்கினாள். அதேசமயம் அநுமானிடம் *''பாபாநாம் வா ஸுபா₄நாம் வா வத₄ார் ஹாணாம் ப்லவங்கம| கார்யம் கருணமார்யேண நகஸ்சிந் நாபராத் யாதி₄ ||''* வானரனே! பாவிகளாய் இருந்தாளும், நல்லவராய் இருந்தாலும், கொல்லத் தக்கவர்களாய் இருந்தாலும், நல்லவனாய் இருப்பவன் அவர் திறத்து கருணை காட்ட வேண்டும். உலகில் குற்றம் செய்யாதவன் ஒருவனு மில்லையே!" என்று திருவடியிடம் வார்த்தை கூறினாள்.

அநவதிகாதிஸய – இவை தான் அபரிச்சேத்யமா யிருக்கும். அஸங்கேய – எண்ணிறந்திருக்கை, கல் யாண – அழகியதாயிருக்கை, அவன் குணங்களுக்கு "க்ரோதமாஹாயத்" என்றபடி. கோபத்தில் ஏறிட்டுக் கார்யம் கொள்ள வேணும் என்ற தசையுண்டு. அது தானும் இவளுக்கில்லை. பத்மவநாலயாம் – "சர்வ மங் கள வாஸிநீச" சகலவஸ்த்துக்களையும் தன் சம்பந்தத் தால் பரிமளமாக்குகை, நிரதிசயபோக்யதைக்கு சொல் லிற்று. பரிமளமே வடிவெடுத்தாற்போல் இருப்பது.

யஜுர்வேத காடகத்தில் – "ஈஸாந – தேவீபுவநஸ் யாதி பத்நீ" – உலகிற்கு ஈஸ்வரியாகவும் ஸர்வாதிக னுக்கு பத்நீயாகவும் இருப்பவள். பகவதீம் – பகவத் ஸப்தம் பூஜ்யவாசி, பத்மவநாலய ாம் பகவதீம் – தன் வழி யாக அவனைப் பற்றினால் குற்றம்பாராதபடி அவனை தன் போக்யதையாலே துவக்கிப் பொறுப்பிக்குமவள். ஸ்ரியம் – தன்னைப் பற்றி ஸர்வமும் உண்டாம்படியாய், தான் அவனைப் பற்றி உளள். தேவீம் – "நித்யாநபாயி நீம்" விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ – அவனுண்டான நித்யஸம் ஸ்லேஷத்தால் அபாய மின்றியிருக்கை.

தேவதேவதி வ்யமஹிஷீம் தேவர்க்கும் தேவனோடொக்க அபிஷிக்தையானவள். அகில ஜகந்மாதரம் – ஸார்வ பௌமன் மஹிஷீ. தன்ப்ரஜை மடியிலே ஏறப்புக்கால் அணைத்து உச்சி முகக்கும். இது ப்ரஜைகள் பக்கல் ப்ராப்தியிறே ஜீவிப்பது. "அகில" ஸப்தத்தில் தாமும் அடங்கியிருக்க செய்தேயும். அகில ஜகத்தும் ஒரு தட்டும், தாமும் ஒரு தட்டுமாக இருப்பதை எம்பெருமானார் கூறுகிறார். தன் பக்கல் வாத்ஸல்யம் கண்டதால்



விசேஷித்து அஸ்மந்மாதரம் என்கிறார். அஸரண்ய ஸரண்ய – நம் குற்றங்களைப் பொறுத்து, உகக்கும் குணங்களை உடையவள்.

*“விதி$_3$தஸ் ஸ ஹி த$_4$ர்மஜ்ஞும் சரணாக$_3$தவத்ஸல:।*
*தேந மைத்ரீ ப$_4$வது தே யதி$_3$ ஜீவிதுமிச்ச$_2$ஸி ॥”*

இராவணா! ஸ்ரீராமபிரான் தர்மத்தை அறிந்தவராகவும், சரண் அடைந்தவர்களிடம் வாச்சல்யம் உடையவராகவும், பிரசித்தமானவராகவும், நீ உயிர் வாழ விரும்பினாயாயின் அவருடன் நட்பு உண்டாகட்டும் என்று குற்றத்தோடே பொறுக்குமவள். “செய்தாரேல் நன்று செய்தார்” என்னுமவர் சீறி, கையும்வில்லுமானவரும் இவள் திருவடிகளிலே புகலாயிருக்கும். சரணம் என்ற உத்தியைப் பற்றி சரண்யர் அவர்.

*“ஸ பித்ரா ச பரித்யக்தஸ் ஸுரைஸ்ச ஸமஹர்ஷிபி$_4$।*
*த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணம் க$_3$ த: ।*
*ஸ தம் நிபதிதம் பூ$_4$மௌ ஸரண்ய: ஸரணாக$_3$தம்*
*வத$_4$ார்ஹமபி காகுத்ஸ்த$_2$: க்ருபயா பர்யபாலயத்॥”*

காகாஸுரன் தன் தந்தையினாலும், தாயினாலும், மஹரிஷிகளுடன் கூடிய தேவர்களாலும் கைவிடப்பட்டவனாய் மூன்று உலகங்களையும் சுற்றித் திரிந்து அந்த இராமனையே சரணமடைந்தான். சரணமடைந்தவனும் பூமியில் விழுந்தவனுமான அவனை கொல்லத் தகுந்தவனாய் இருந்த போதிலும், சரணமடைய தகுந்தவனான ஸ்ரீராமபிரான் தன்பிரகள அருளாலே காப்பாற்றினான். கிருபை.

பகவத் விஷயத்திற்கும் புறம்பாய் இருப்பாருண்டோ எனில், அநந்ய ஸரணமஹம் – அநந்ய ஸரணணாகிறாள் என்கிறாள். அநந்ய ஸரணர்க்கும் ஸரண்யரான தேவர் திருவடிகளையே உபாயமாக அத்யவிக்கிறேன். நீர் அகில ஜகன் மாதாவாகையாலே, அபேக்ஷா நிரபேக்ஷமாக பரிக்ரஹிக்கும் தேவர்க்கும் பரிக்ரஹித்தாலல்லது நிற்கவொண்ணாத படியான அபேக்ஷதையைப் பண்ணினேன். இதில் பிராட்டியின் ஸரண்யதையையும், அதுக்கடியான ஊற்று வாயையும் அநந்யகதித்வத்தையும் சொல்லி, அவள் திருவடிகளிலே சரணம் புக்கு நின்றார்.

*“அநவதி$_4$ காதிஸயப்ரியப$_4$க$_3$வத$_3$நுப$_4$வஜநிதாநவதி$_4$ காதிஸய*
*ப்ரீதிகாரிதா ஸேஷாவஸ்தே$_2$ாசிதா ஸேஷதை கரதிரூப।*
*நித்யகைங்கர்யப்ராப்த்யபேக்ஷயா பாரமார்த்தி$_2$கீப$_4$ க$_3$வச்சரணார*
*விந்த$_3$சரணாக$_3$திர் யத$_2$ாவஸ்தி$_2$தா அவிரதாऽஸ்து மே॥”*

–2வது ப்ரகரணம்.

இனி, பிராட்டி “உமக்கு அபேஷத மென்?” என்று வினவ, கைங்கர்ய ருசியும் ப்ரபத்திநிஷ்டையும் எனக்கு உண்டாக வேணும் என்கிறார் எம்பெருமானார், எம்பெருமான் திருவடிகளில் சரணம்



புகுவது அவனிடத்தில் கைங்கர்யம் செய்வதற்குத் தான். அதற்கு மேலும், ஒருவன் ஓரிடத்துக்குச் செல்ல, முதலில் நினைப்பதுபோல், கைங்கர்யம் செய்ய எம்பெருமானிடத்து ருசி ஏற்பட வேண்டும். அதுமட்டுமல்லாமல், எம்பெருமான் அருள் புரிவான் என்ற மஹா விச்வாசமும் ஏற்பட வேண்டும். அவற்றை தனித்தனியே பெற வேண்டும் என்பது சில அதிகாரி விசேஷணங்கள் உண்டு என்பதால், இதுக்கு முன்பு இவர்க்கு (எம்பெருமானார்க்கு) இல்லையெனில் என்றால், தனக்கு இருப்பினும் நைச்யானு சந்தான முறையில் இல்லை என்று நினைத்திருந்து அருளுகிறார்.

அர்த்தம் என்பது ப்ரயோஜனத்தைக் குறிக்கும். மேலும், மெய்யைக் குறிக்கும். இது பரமபக்தியாம்போது அதனுடைய அக்குத் மத்வம் சொல்லுகிறது. பக்தி விஷயமாய் போது திருவடிகள் பரமப்ரயோஜநம், திருவடிகள் விஷயமாம்போது பக்தி அக்ருத்மையாகும். குணங்களும் போக்யமாயிருந்தால் பரமபக்தி ஜநகம். பகவத் சரணாரவிந்தம் என்பது விக்ரஹவஸ்தையால் வந்த போக்யதையைச் சொல்கிறது. “யுகள”

## திருப்பதி சுற்றுப்பகுதிகளில் உள்ள தி.தி.தே. ஆலய அமைவிடம் திருப்பதி ஆர்.டி.சி. பேருந்து நிலையத்திலிருந்து கி.மீ.களில்

1) ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருச்சானூர்...05 கி.மீ.
2) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், ஸ்ரீநிவாச மங்காபுரம்...12 கி.மீ.
3) ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம், திருப்பதி...01 கி.மீ.
4) ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலயம், திருப்பதி...2.3 கி.மீ.
5) ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயம், திருப்பதி...03 கி.மீ.
6) ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்பளாய குண்டா...18 கி.மீ.
7) ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம், நாகுலாபுரம்...65 கி.மீ.
8) ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், நாராயணவனம்...37 கி.மீ.
9) ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி ஆலயம், கார்வேடி நகரம்...48 கி.மீ.
10) ஸ்ரீகோதண்டராமாலயம், ஒண்டிமிட்டா, கடப்பா மாவட்டம்...116 கி.மீ.

என்பது சோத்தியைக் குறிப்பிடுகிறது. வேறொரு விஷயத்தை உடைத்தன்றிக்கே இருக்கை. மேலும், அதிக்ரமத்திருக்கை (நித்யமாயிருக்கை). ஸம்ஸ்லேஷ, விஸ்லேஷ ஸுகதுக்க கராம்படியான ப்ரேம விசேஷம் பரபக்தியாகும்.

பரக்ஞானம் என்பது இதனுடைய விபாகதசையான ஸாக்ஷாத்காரம். பரமபக்தி என்பது க்ஷண காலமும் விஸ்லேஷத்தை பொறுக்கமாட்டாத நிலை. ஞான கர்மங்களால் நன்கு பக்குவப் பட்டு, பக்தி ஏற்பட்டு, பின் பரபக்தியாகிறது உபாஸகனுக்கு. ஆனால் இவருக்கு அந்த நிலையிலே பகவத் அநுக்ரஹம் நிற்கிற படியால் மேலுள்ள நிலைகளை வேண்டுகிறார்.

க்ருத – இவற்றாலே பண்ணப்பட்ட பரிபூர்ணமாகையாவது – ஸ்வரூப, ரூப, குணவிபூதிகளனைத்தும் ஒரே சமயத்தில் அநுபவிக்கும் விஷயமாகையும் தொடர்ச்சியாகவும் அழியாமலும் இருப்பதாகும்.

அதனை விஸதமாக பரக்ஞான தசையில் அநுபவம்; விஸததரமாவது – பரக்ஞானதசையில் அநுபவம்; விசததமமாவது பரமபக்தி தசையில் அநுபவம். அநந்யப்ர யோஜநம் அநுபவத்தினால் வரும் சந்தோஷம் உள்ளார்ந்த அன்பு (ப்ரீதிகார்யமாகவும்) வேண்டா. இது தன்னடையே அமையும். கடைசி காலத்தில் (அந்திம தசையில்) சரீரம் இருக்கும்போது நிலையில் அர்ச்சிராதி கதியில் அனுபவிக்கும் அனுபவம்.

சேஷியான உனக்கு எழுந்தருளியிருக்கும் திருமாளிகையாகவும் திருக்கண் வளர்ந்தருளுகிற படுக்கையாகவும், சிம்மாசநமாகவும் பாதுகையாகவும் மற்றும் பலபடியாகவும் ஆகின்றவையாய், அந்தந்த காலத்துக்கு ஏற்றபடி உனக்கு அடிமைப்பட்டவையாய் பல சரீரங்களாலே சேஷன் என்று சொல்லப்படுகிற திருவனந்தாழ்வானின் நிலைபடியே எல்லா நிலையிலும் உன் அபிநிவேசத்தை உடைத்தாயிருக்கை.

விட்டுப்பிரியாத, கைங்கர்யப்ராப்தியால் பூர்ணமான விஷயமானபடியால் உபாய பௌஷ்கல்யம் சொல்கிறது. சரணாரவிந்த என்பதால் பரம உபாயத்வம் சொல்லப்படுகிறது. சரணாகதி: ஸலக்ஷணமாயிருக்கை.

உபாயந்தரங்களுடைய உபாயமில்லாமல் புத்தி பூர்வமாக அத்தைபற்றுகைபோல, அதாவது பற்றி விடுகையன்றிக்கே, பற்றுகையும் அன்றிக்கே; ஸ்நாத்வா புஜ்ஜித என்னுமாபோல, விட்டுப் பற்றுகை. இருந்தபடியே என்பதால் ரஹஸ்ய மாகையாலே நேராக வெளியிடா தொழிகிறார். அநந்யகதியாயிருக்கும் எனக்கு யாவத்ப்ராப்தி விச்சேதமின்றிக்கே ஒழிய வேண்டும் என்கிறார்.

பிராட்டியும் “அஸ்துதே” – உமக்கு அப்படியே உண்டாயிருக்க “தயைவ ஸர்வம் ஸம்பத்யதே” – அப்படிப்பட்ட உபாயந்தன்னாலேயே பரபக்தி தொடக்கமாகக் கைங்கர்யமிருக்க நடுவுள்ள தயை உண்டாகக் கடவது என்று அருளினார்.

– திரு. பி.எஸ். திருமலை, சென்னை,
80560 76879

சோழ வளநாட்டின் மகாசிவராத்திரி தலம் – பூமி தேவி வழிபட்ட திருத்தலம் – பிரம்மா, அக்னி வழிபட்ட திருக்கோயில் – வேடனுக்கு மோட்சம் தந்த தலம் – எமதர்மன் வழிபட்டு பேறு பெற்ற தலம் – துவாரபாலகர்கள் இடம் பெறாத திருக்கோயில் – கையில் கோலேந்திய தக்ஷிணாமூர்த்தி கோலம் கொண்ட கோயில் – திருஞானசம்பந்தர் தேவாரம், அருணகிரிநாதர் திருப்புகழ் பாடல் பெற்ற தலம் – மரண பயம் நீக்கும் ஆலயம் என பல்வேறு பெருமைகளும் பெற்ற தலமாகத் திகழ்வது திருவைகாவூர் திருக்கோயிலாகும்.

**மகாசிவராத்திரி தலங்கள் :**

மகாசிவராத்திரி தலங்களாகப் போற்றப்படுபவை திருகோகர்ணம், திருப்பருப்பதம் எனும் ஸ்ரீ சைலம், திருக்காளத்தி என்ற வரிசையில் சோழ வளநாட்டில் ஒரே தலமாகத் திகழ்வது திருவைகாவூர் ஆகும்.

**தல வரலாறு :**

ஒரு சமயம் தவநிதி என்ற முனிவர் திருவைகாவூர் ஆலயத்தில் தங்கியிருந்து வழிபட்டுக் கொண்டிருந்தார். அப்போது மான் ஒன்றை வேட்டையாட, வேடன் ஒருவன் துரத்தி வந்தான். தப்பி ஓடிய அந்த மான் ஆலயத்திற்குள் புகுந்து தவநிதி முனிவரிடம் தஞ்சமடைந்தது. அதனால் முனிவரும் அபயம் அளித்தார். இதனால் கோபம் கொண்ட வேடன், முனிவரைத் தாக்க தயாரானான். அடியவரின் துயர் தீர்க்கும் இறைவன் புலி உருவம் கொண்டு வேடனைத் துரத்தினார். உயிருக்கு பயந்த வேடன் அங்கிருந்த மரத்தின் உச்சியில் ஏறிக் கொண்டான். புலியோ மரத்தடியிலேயே நின்று கொண்டிருந்தது. வேடனும் வேறு வழியின்றி மரத்தின் உச்சியில் ஏறிக் கொண்டான். பசியும் பயமும் அவனை வாட்ட இரவு வந்தது. களைப்பினால் தூங்கி கீழே விழாமல் இருக்க மரத்தில் இருந்த இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்து கீழே போட்டுக் கொண்டிருந்தான். அன்று இரவோ மகா சிவராத்திரி நாளாகும். பறித்துப் போட்ட இலைகள் வில்வ மரத்து இலைகள். அனைத்தும் புலி வடிவிலிருந்த சிவபெருமான் மீது அர்ச்சனைகளாக விழுந்து கொண்டிருந்தன. இதனால் ஊண் உறக்கமின்றி சிவனை வழிபட்ட புண்ணியம் அந்த வேடனுக்குக் கிடைத்தது. அதனால் இறைவன் வேடனுக்கு மோட்சம் அளித்து அருளினார். இந்நிலையில் விடிந்தால் வேடனுக்கு அவனது ஆயுள் முடியும் காலமும் வந்து விடுகின்றது. பொழுது விடிந்ததும் வேடனின் உயிரைப் பறிக்க எமன் ஆலயத்திற்குள் நுழைகின்றான். துவாரபாலகர்களை நோக்கி சிவபெருமான் , எமனை தடுத்து வேடனை காத்திட ஆணையிடுகின்றார். அவர்கள் அதனை சரிவர நிறைவேற்றவில்லை. உடனே தன் பக்தனான வேடனைக் காத்திட தட்சிணாமூர்த்தி வடிவில் தோன்றிய இறைவன், கையில் கோல் ஏந்தி எமனை விரட்டினார். இதற்கிடையே நந்திதேவர், தன்

# வேடனுக்கு முக்தி தந்த திருவைகாவூர் திருத்தலம்



திரு. பனையபுரம் அதியமான்,
சென்னை, 94448 00935



சுவாசத்தினால் எமனை உள்ளே நுழையாமல் தடுத்தார். இந்த ஐதீகத்தை நினைவுபடுத்தும் வகையில் நந்தி வாயிலை நோக்கும் வகையிலும், தக்ஷிணா மூர்த்தி கையில் கோல் ஏந்திய நிலையிலும் காட்சி தருகின்றனர். ஆணையை நிறைவேற்றாத துவார பாலகர்கள் ஆலயத்தில் இடம் பெறவில்லை.

சிவபெருமானின் கோபத்திற்கு ஆளான எமன், இறைவனை பணிய ஆலயத்திற்கு எதிரே தனி தீர்த்தம் அமைத்து நீராடி வழிபட்டு பேறு பெற்றான். இதனை உறுதிபடுத்தும் விதமாக ஆலயத்தின் எதிரே பிரம்மாண்ட எம தீர்த்தம் அமைந்திருப்பதை இன்றும் காணலாம்.

இதே போல அக்னியும் தீர்த்தம் அமைத்து வழிபட்டதால் அக்னியின் தேயும் தன்மை நீங்கிய தாகவும், பிரம்மன் வழிபட்டு தன் படைப்புத் தொழிலை மேம்படுத்திக் கொண்டதாகவும் புராணம் கூறுகின்றது.

சிவனும் பார்வதியும் கைலாயத்தில் இருந்து தென்னாட்டிற்கு வந்தபோது காவிரியின் வடகரையில் மிகச் செழிப்பாக அமைந்திருந்த திருவைகாவூர் தலத்தில் எழுந்தருளியதாகவும் தலவரலாறு கூறுகின்றது.

இதனை அறிந்து பூமாதேவி வணங்கி பூமியை அழிவிலிருந்து காக்க உபாயம் கேட்டபோது இறைவன், இத்தலத்தில் வில்வ மரமாக நின்றதாகவும், இங்கு தவம் புரிந்து வழிபட்டதாகவும் கூறப்படுகின்றது. இதனால் இத்தலம் வில்வவனம் என்றும், இங்கு உறையும் இறைவன் வில்வவனேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

இதே போல சிவராத்திரியன்று தூங்கிய குழந்தையின் நகையை ஒருவன் திருடியபோது அக் குழந்தையை கொலை செய்து விட்டதாகவும், அடியாரின் பிரார்த்தனைக்கு இணங்க அந்த குழந்தையை மீண்டும் உயிர்ப்பித்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் மகவருளீசுவரர் என்ற பெயரும் இறைவனுக்கு உண்டு.

இதே போல கண் பார்வையற்ற பிராமணர் ஒருவர் இறைவனை வழிபட்டு கண்ணொளி பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

**கல்வெட்டுகள் :**

இவ்வாலயம் சுமார் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இதனை உறுதிப்படுத்தும் விதமாக கி.பி. 1914ஆம் ஆண்டு தொல்லியல் ஆய்வு அறிக்கையில் 12 கல்வெட்டுகள் சுட்டிக் காட்டப் பட்டுள்ளன. இவற்றின் மூலம் பல்லவ மற்றும் சோழ மன்னர்களின் திருப்பணி விவரங்களை நம்மால் அறிய முடிகின்றது.

கி.பி.868 மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் திருப்பணி மேற்கொண்டதை அறிய முடிகின்றது. முதலாம்

## ஸ்ரீகோதண்ட ராமர் ஆலயம், ஒண்டிமிட்டா, கடப்பா

ஆந்திர மாநிலத்தில், கடப்பா மாவட்டத்தில், கடப்பாவிலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் ஒண்டிமிட்டா கிராமம் அமைந்துள்ளது. திருமலை யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களுக்கு கடப்பா ஒரு நுழைவு வாயிலாக திகழ்வதால் தேவுனி கடபா (கடவுளின் நுழைவுவாயில்) என்று அழைக்கப்படுகிறது. திருமலை யாத்திரை செல்கின்ற யாத்திரிகர்கள் தேவுனி கடபா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேசப் பெருமாள் ஆலயத்தையும், ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராமர் ஆலயத்தையும் தரிசித்த பின்னரே யாத்திரையைத் தொடர்கின்றனர். இவ்வாறு முறையாக தரிசித்தால் தான் திருமலை யாத்திரை நிறைவு பெறும் என்று பக்தர்கள் நம்புகின்றனர்.



## ஸ்ரீசீதாராம திருக்கல்யாணம்



ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராமர் ஆலயத்தில் ஸ்ரீராமநவமி பிரம்மோத்சவம் ஸ்ரீராமநவமி அன்று துவங்கி பத்து நாட்களுக்கு சிறப்பாக நடைபெறுகிறது. இந்த ஆலயத்தில் மட்டும் ஸ்ரீசீதாராம திருக்கல்யாணம் இரவு நேரம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. ஆந்திர மாநில அரசு நடத்தும் பிரம்மோற்சவம் மற்றும் திருக்கல்யாண வைபவங்களுக்கு அரசு சார்பில் ஆந்திர மாநில முதல்வர் பட்டு வஸ்திரங்களையும், முத்யால தலம்பராலு என்று அழைக்கப்படும் முத்துக்களையும் ஆலயத்திற்கு எடுத்து வருவார். (தலம்பராலு என்பது மங்கள அட்சதையைக் குறிக்கும். தெய்வீக திருக்கல்யாண உற்சவங்களின்போது அட்சதையுடன் நல்முத்துக்களைப் பயன்படுத்துவதால் இது முத்யால தலம்பராலு என்று அழைக்கப்படுகிறது.)

வால்மீகி இராமாயணம் சீதா கல்யாண வைபவத்தை விவரித்துள்ளபடி வாக்தானம், கன்யா தானம், மாங்கல்ய தாரணம் போன்ற பல சடங்குகள் முறையாக இரவு 8.30 மணி முதல் 10.30 மணி வரை நடைபெறும். இந்த திருக்கல்யாணத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீகோதண்டராமரின் அருளைப் பெறுகின்றனர். இந்த உற்சவங்களின் போது பக்தர்களுக்கு திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் அனைத்து வசதிகளையும் சிறப்பாகச் செய்து வருகிறது.

குலோத்துங்கன் (கி.பி.1110) காலத்தில் கருவறை மண்டபம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் இவற்றை கருங்கல் கொண்டு திருப்பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மேலும், இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1138), இரண்டாம் இராஜராஜன் (கி.பி. 1157 மற்றும் 1163), மூன்றாம் குலோத்துங்கன் (கிபி 1198 மற்றும் 1211), மூன்றாம் இராஜேந்திரன் (கி.பி. 1251) ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் இவ்வாலயத்தில் நிறைந்துள்ளன.

### இலக்கியங்கள் :

இவ்வாலயத்தின் சிறப்புகளை திருஞான சம்பந்தர் தனது திருவைகாவூர் திருப்பதிகத்தில் 11 பாடல்கள் மூலமாக விவரித்துள்ளார். *''ஏழையடி யாரவர்கள் யாவை சொன சொன்மகிழும் ஈசனிட மாந்...''* என்ற வரிகள் மூலம் ஏழை அடியார்கள் பாடும் பாடல்களைக் கேட்டு மகிழும் இறைவன் என்கின்றார்.

இதேபோல திருநாவுக்கரசர் தமது திருத் தாண்டகத்தின் ஆறாம் திருமுறையில், *''வெஞ்சமாக் கூடல் மீயச்சூர் வைகா வேதீச்சுரம் விவீச்சுரம் வெற்றியூரும்...''* எனக் குறிப்பிடுகின்றார். இதே போல பெரிய புராணத்திலும் *''விசய மங்கையினிடமகன்று மெய்யர்தாள் அசைவில் வைகாவினிலணேந்து பாடிப் போந்து இசைவளர் ஞானசம்பந்த ரெய்தினார்...''* எனத் திருஞானசம்பந்த நாயனார் புராணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அருணகிரி நாதர் தனது திருப்புகழில், *''நாதகீத மலர்த்துளி பெற்றளி கோடுலாவிய முத்து நிரைத்த வைகாவூர்''* எனக் குறிப்பிடுகின்றார். வில்வாரண்ய க்ஷேத்திர மகாத்மியத்தில் இத்தலம் பெருமை படுத்தப்பட்டுள்ளது. வேலைய்ய தேசிகர் அவர்கள் 346 தமிழ் விருத்தங்களில் புராணம் இயற்றியுள்ளார். இவரின் மாணவர் தா. சிவலிங்கம் பிள்ளை அவர்களும் இறைவன் மீது பாடல்களை இயற்றி கி.பி. 1894 ஆம் ஆண்டில் இங்கு அரங்கேற்றி இருக்கிறார்.

### ஆலய அமைப்பு :

இராஜகோபுரம் இல்லாத எளிய நுழைவு வாயில். உள்ளே நுழைந்ததும் இடது புறம் தலமரமான வில்வ மரங்களையும், தீர்த்த கிணற்றையும்



தரிசித்து விட்டு, வாயிலை நோக்கும் விதத்திலே அடியார்களை வரவேற்கும் நந்திதேவரை காண்கின்றோம். இவரைத் தாண்டி சிறிய கோபுரத்துடன் மேற்கு பிரகாரத்தின் தென் மூலையில் வலம்புரி விநாயகரும், நடுநாயகமாக ஆறுமுகப் பெருமானும் அமைந்துள்ளனர்.

வடக்கு பிரகாரத்தில் சர்வஜன ரட்சகி எனப்படும் வளைக்கை நாயகியின் தனி ஆலயம் அமைந்துள்ளது. அன்னையின் தோற்றம் மிகவும் எழிலானது. அதனால் தான் என்னவோ தாயைப் பிரிய மனமில்லாத சேயாக, ஒரு விநாயகர் அமர்ந்திருக்கிறார். இவரை தரிசித்து சண்டிகேஸ்வரரை வணங்கிய பிறகு கிழக்கே சென்றால் நடராஜப் பெருமானுக்கு தெற்கு நோக்கிய தனிக் கோயில் அமைந்துள்ளது. இதில் சிவகாமி மற்றும் மணிவாசகரின் சிலையும் உள்ளது. இந்த நடராஜப் பெருமானின் கீழ் பிரகாரத்தில் ஒரு சுரங்கப்பாதை இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மகா மண்டபத்தில் நுழைந்ததும் வலது புறத்தில் உள்ள சப்த லிங்கங்கள் தரிசித்து விட்டு அர்த்த மண்டபத்தினுள் நுழைகின்றோம். அங்கேயோ துவார பாலகர்கள் இடத்தில் விஷ்ணுவும் பிரம்மாவும் நிற்கும் அபூர்வ கோலத்தை காண முடிகின்றது. இறைவன் ஆணையை நிறைவேற்றாத துவார பாலகர்கள் இவ்வாலயத்தில் இடம் பெறாதது அரிய நிகழ்வாகும்.

வடபுறத்தில் கையில் வீணை ஏந்திய தட்சிணாமூர்த்தியை தரிசிக்க முடிகிறது. அலங்கார மேடையில் மேற்குப் புறத்தில் உள்ள மேடையில் விஷ்ணு, பிரம்மா, மோட்சம் பெற்ற வேடன், அவனை தேடி வந்த வேடத்தி ஆகியோரின் சிலைகளும் ஒருங்கே அமைந்துள்ளன. அர்த்த மண்டபத்தில் அமைந்துள்ள சிறிய நந்திதேவரும் வாசலை நோக்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. இவற்றைக் கடந்து உள்ளே சென்றால் அற்புத தோற்றத்திலே வில்வவனேஸ்வரர் காட்சி தருகின்றார். இவரே திருவைகாவூருடைய மகாதேவர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

சுயம்பு வடிவான இவரை தரிசிக்கும் போது இவரின் திருவிளையாடல்கள் அனைத்தும் நம் கண் முன்னே நம் நினைவில் நிழலாடுகின்றன. கருவறைச் சுற்றில் விநாயகர், அகத்தியர், தட்சிணாமூர்த்தி, மேற்கே கஜசம்ஹாரமூர்த்தி, வடக்கே பிரம்மன், அர்த்தநாரீஸ்வரர், மகிஷாசுரமர்த்தினி, பைரவர் முதலான தெய்வத் திருவடிவங்கள் அமைந்துள்ளன.

**தலம், தீர்த்தம் :**

தல மரம் வில்வம், தீர்த்தம் கொள்ளிடம் (ஆறு), எம தீர்த்தம் (குளம்), அக்கினி தீர்த்தம் (கிணறு) மற்றும் பிரம்ம தீர்த்தம் என மூன்று தீர்த்தங்கள் அமைந்துள்ளன.

**விழாக்கள் :**

மாசி மாதத்தில் வரும் மகா சிவராத்திரி விழாவே இவ்வாலயத்தில் முக்கிய விழாவாகும். அன்று இரவு சிறப்பு நான்கு கால பூஜையும், அமாவாசையன்று பஞ்சமூர்த்தி புறப்பாடும், தீர்த்தவாரியும் வெகு சிறப்பாக நடைபெறும்.

**அமைவிடம் :**

இத்திருத்தலம் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டத்தில் அமைந்துள்ளது. கும்பகோணத்தில் இருந்தும், சுவாமி மலையிலிருந்தும், பாபநாசத்தில் இருந்தும் நகரப் பேருந்துகள் மூலம் எளிதில் திருவைகாவூர் வரலாம். இதனைச் சுற்றி பல்வேறு தேவாரத் தலங்கள் அமைந்துள்ளன. மரணத்தைக் கண்டு அஞ்சாத மனிதர்களே இல்லை. அந்த வகையிலேயே மரண பயம் நீக்கி மோட்சம் தரும் திருவைகாவூர் இறைவனை மகாசிவராத்திரி காலத்தில் வணங்குவது கண் கண்ட மருந்தாகும் என்றால் அது மிகை அல்ல.





# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்

சென்ற இதழின் தொடர்ச்சி...

*''பதக கௌஸ்துபதார!*

*சரிகெய கந்தர....'*

கௌஸ்துபமணி முதலிய (ஆரங்களை) மாலைகளை தம் கழுத்தில் அணிந்து அழகாகவும் ஒளி மயமாகவும் காட்சி தருகின்ற திருவேங்கடவன் நம்பினவரை கை விடாமல் அருள் புரிவார். கருணாமூர்த்தி. முதல், இடை, கடை ஆனவன். மூவுலகங்களில் உள்ளவர்களால் துதிக்கப்படுபவரான திரிபுவனேசன். ஸ்வாமி புஷ்கரணியின் அருகே ஸ்ரீதேவி பூதேவி சமேதர ராக புரந்தர விட்டலனான திருவேங்கடமுடையான் ஆண்டுதோறும் நடைபெறும் பிரம்மோத்சவத்தில் ஒளி மயமாகக் காட்சி தருகிறார்.

சுயம்புவாக எழுந்தருளிய ஸ்ரீநிவாசரின் திவ்ய மங்கள விக்ரகத்தின் அழகை, நாட்டியத்திற்கு ஏற்றவாறும், தாளத்திற்கு அனுகூலமாகவும், பாடகர்களுக்கு இனிமை தரக்கூடியதாகவும், படிப்பதற்கு பேரானந் தத்தைத் தரக்கூடியதாகவும் கீர்த்தனைகள் எழுதப்பட்டவை. எளிமை யான சொற்களால் இனிமையாகப் பாமரர்களும் பாடிக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளன.

*''நின்ன திவ்ய மூரிதய கண்ணு தணிய நோடி...''*

கண்ணார உன் திவ்ய மங்கள வடிவத்தைப் பார்த்து மனம் குளிர்ந்தேன். இனி இப்பூமியில் எனக்கு எவ்வித பயமும் இல்லையென்று திருவேங்கடவனைப் புகழ்ந்தார்.

பலப்பிறவிகளில் செய்த புண்ணிய பாவங்களால் இந்த மலையை அடைந்து ஸ்வாமியின் திருக்குளத்தில் நீராடி, ஜபம், தவம் செய்து, வராஹ மூர்த்தியை தரிசித்து திருவேங்கடவனின் ஆலயத்தின் மஹாத்வாரத்தை அடைந்து, ஸ்வாமியை வணங்கி, ஆலயத்தை வலம்

வந்து ஸ்வாமியை துதித்து அதன் பின் தங்கத்தால் செய்யப்பட்ட கருடக் கொடிக் கம்பத்தைப் பார்த்து ஆனந்தமடைந்தேன்.

*"நோட்ட நேரடநே த்வாரதாந்டி போகுதலி*
*தட்டணீயம் பஹு ஜனதலி ||"*

பின்னர் உள்ளே உள்ள இரண்டாவது வாயிலை தாண்டி பக்தர்களின் கோவிந்த நாம ஸ்மரணையின் நடுவே உள்ளே சென்று ஏழுமலையானைக் கண்ணாரக் கண்டு மனம் மகிழ்ந்து என் பாவங்கள் எல்லாம் அழிய வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன்.

*"சிரதல்லி ரவிகோடி தேஜதிந்தெசேவந்த*
*வர கிரீடபு குண்டல..."*

கோடி சூரியனின் ஒளியைப் போன்று பிரகாசிக்கும் கிரீடத்தை அணிந்திருந்த தலையையும், குண்டலங்களைத் தரித்த செவிகளையும், வைஜெயந்தி முதலிய மாலைகளை அணிந்த கழுத்தினையும், சங்கு சக்கரங்களை தரித்த கரங்களையும், மணிகளால் செய்யப்பட்ட கடிசூத்திரத்தையும், பட்டாடைகளை அணிந்திருந்த உடலையும், கமலம் போன்ற திருவடிகளையும் உடைய ஸ்வாமியைக் கண்டேன்.

*"இக்ஷு சாபனபிதனெ பக்ஷீந்த்ர வாஹனனெ*
*லக்ஷ்மி பதி கமலாக்ஷனே!"*

ஏழு உலகத்தை தம்முள் அடக்கியுள்ள மன்மத ஜனகனே பக்ஷீந்த்ர வாகனா, லக்ஷ்மிபதி, கமலாக்ஷா, அக்ஷயா, அஜசுரேந்த்ராதி வந்திதா, ஜகன்னாதா, இரட்சிப்பவனே, என்னைக் காப்பாற்றுவாயாக ஸ்வாமி என்கிறார்.

*"உரககிரி அரசு நிம்மசரணகளு கண்டம்யேலே*
*உரககரிவ்யாக்ர சிம்ஹ!"*

உம் திருவடிகளைக் கண்டபின், யானை, சிங்கம், அரசன், திருடன், நெருப்பு, தேள் முதலியவற்றினால் ஏற்படக் கூடிய அச்சங்கள் எல்லாம் என்னிடமிருந்து விலகி விட்டன. என்னைக் காப்பாற்றும் பொறுப்பு உன்னுடையதே, மன்மதனை விட மிகுந்த அழகையுடைய ஸ்வாமி புரந்தர விட்டலா, நீ அனைவரையும் காப்பாற்றும் அருளாளன்.

*"இந்து நானேநு சுக்ருதவ மாடிதெனோ*
*மங்கள மஹிம வேங்கட பந்த மனெகெ"*

இக்கீர்த்தனையில் ஸ்ரீநிவாசர் அற்புதமான அலங்காரத்துடன் கூடி, கருடனின் மேல் வந்த அழகை வர்ணிப்பது, அதாவது கண் முன் கருட உத்ஸவமே நடைபெறுவது போல இருந்தது.

புரந்தர தாசர் ஸ்ரீநிவாசரைப் பற்றி, தான் தெரிந்து கொண்டவற்றை, கேட்டவற்றை, அனைவருக்கும் தெரிவித்து, ஸ்வாமியை அபர வாசுதேவன் என்றும், அன்றைய ஸ்ரீராமச்சந்திரன், என்றும் மூவுலகங்களையும் காப்பாற்றும் வகையில் வேங்கட மலையில் எழுந்தருளிய திருவேங்கடமுடையான் உள்ளார் என்றும் புகழ்கிறார்.

*"நின்னநெ நம்பிதெ நீரஜனயன!*
*என்ன பாலிசோ இந்திர ரமண!..."*

கௌதம முனியின் சாபத்திற்கு உள்ளாகி கல்லாகிய அகல்யை, ஸ்ரீராமரின் பாதம் பட்டவுடன் சாபவிமோசனம் அடைந்தாள் எனும் வரலாற்றினை கேட்டு, அந்த இராமன் நீயே என்று நினைத்து உன்னை நம்பினேன். ஹே நீரஜனயன! என்னைக் காப்பாற்றுக ஓ இந்திரா ரமணா!

*"பலவந்த உத்தான பாதாராயன மகன..."*

வலிமை பொருந்திய உத்தான பாதராஜாவின் மகனான துருபனை அவனுடைய சித்தி சிறிதும் கருணையின்றி காட்டிற்கு அனுப்பினார். அப்பொழுது உமக்காக பக்தியுடன் தவமிருந்த அவனுக்கு துருவ நட்சத்திரம் என்ற பதவியைத் தந்து அருள் புரிந்தாய் என்று தெரிந்து கொண்டேன்.



## ஒண்டிமிட்டா ஆலய இருப்பிடம்

மாவட்டத் தலைநகரான கடப்பாவிலிருந்து 35 கி.மீ. தொலைவிலும், திருப்பதியிலிருந்து 116 கி.மீ. தொலைவிலும் ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராமர் ஆலயம் அமைந்துள்ளது. காலை 5.15 மணி முதல் இரவு 8.30 மணி வரை பக்தர்களின் தரிசனத்திற்காகத் திறந்து வைக்கப்படும். இவ்வாலயத்தை திருமலை திருப்பதி யாத்திரை மேற்கொள்கின்ற பக்தர்கள் சென்று தரிசித்துப் பலன் பெறலாம்.



*"சுரநரலோகதிபுண்யத ஜனரன்னு..."*

இந்த உலகத்தில் புண்ணியம் செய்தவர்களைக் காப்பாற்றுவதற்காகவே நீர் லக்ஷ்மி தேவியுடன் வைகுண்டத்தை விடுத்து இந்த சேஷாசலத்தில் எழுந்தருளியுள்ளாய் என்று அறிந்து கொண்டேன்.

புரந்தரதாசர் ஸ்ரீநிவாசரின் அனுக்கிரகத்தினால் பிறந்ததனால் தான் முழு பக்தியுடன் ஸ்வாமியை அதிக அளவில், மேன்மேலும் தரிசித்து வந்தாரோ என்று தோன்றுகிறது. ஏதாவது காரணத்தால் ஸ்வாமியை தரிசிக்க முடியவில்லையென்றால் அந் நாட்களில் மனம் கலங்குவார். ஸ்வாமியின் தரிசன பாக்கியம் கிட்டாததால் வருந்தி பாடிய பாடல் இது.

*"ஈ ஜீவனித்து பலவேனு! செலுவ*
*ராஜீவலோசனன நெனயத (நோடத) பாபிதனு*
*வினலி"*

திருவேங்கடவனை நினைத்து, உன்னைக் காணாத இந்த பாவியின் உடலில் உயிர் இருந்தாலும் யாதொரு பயனும் இல்லை என்று வருந்தி பாடினார்.

*"உரகாத்ரியலி சந்த்ர புஷ்கரணி மொதலாத..."*

புண்ணிய திருக்குளத்தில் நீராடி, அங்குள்ள திருவேங்கடவனை காணாதவன், உடலில் உயிர் இருந்தாலும் பிணத்திற்கு சமம். யாதொரு பயனும் இல்லை என்கிறார். ஸ்வாமியின் தரிசனம் கிட்டாத போது எவ்வாறு வருந்துகிறாரோ, அந்த ஸ்வாமியை தரிசித்த பிறகும் தன்னை மறந்து மெய்சிலிர்த்து மிக்க மகிழ்ச்சி கொள்வார். பரவசமடைந்து பாடி மகிழ்வார்.

*"நின்ன நோடி தன்யனாதெனோ ஹே ஸ்ரீநிவாச!*
*நின்ன நோடி தன்யநாதெ என்னமனோ நயனகீக*
*இன்னு தயமாடு சுப்ரசன்ன ஸ்வாமி ஸ்ரீநிவாசா!"*

உம்மைக் கண்டு மனம் மகிழ்ந்தேன் ஸ்ரீநிவாசா, என் மனதில் உம் அழகைக் கண்டு மகிழ்ந்தேன். என் மேல் கருணை காட்டுவாயாக ஸ்ரீநிவாசா என்று பாடினார்.

*"பக்ஷிவாஹன லக்ஷ்மிரமண லக்ஷ்மி நின்ன*
*வக்ஷதல்லி*
*ரக்ஷக சிக்ஷக தக்ஷ பாண்டவ பக்ஷ கம*
*லாக்ஷ ரக்ஷிசு கருணிசு!!"*

பக்ஷி வாகனனான லக்ஷ்மீபதி! உன் வக்ஷஸ் தலத்தில் லக்ஷ்மி தேவியைக் கண்டேன். ரக்ஷிப்பவன், தண்டிப்பவன். தக்ஷன, பாண்டவனின் பக்கம் இருப்ப வன். கமலக்கண்ணா எமக்கு அருள் புரிவாயாக.

*"தேச தேச திருகிநானு ஆசெபத்தநாதெ ஸ்வாமி*
*தாசநல்ல வேநோ ஜக! தீச! ஸ்ரீச ஸ்ரீநிவாச!"*

தேச தேசங்களில் திரிந்து திரிந்து உம் மீது மிகுந்த பக்தியைக் கொண்டுள்ளேன். ஸ்வாமி நான் உன் தாசன்! ஹே ஜகதீசா! ஸ்ரீநிவாசா! எம்மை காப் பாற்று.

*"கந்து ஜனக கேளு என்ன அந்தரங்க*
*ஆசெயன்னு*
*அந்தரவில்லதே பாலிசய்ய! ஸ்ரீகாந்தா*
*ஸ்ரீநிவாச புரந்தரவிட்டலா"*

மன்மத ஜனகா, என் மனக்கோயிலில் உள்ள விண்ணப்பத்தைக் கேட்டு அருள்புரிவாயாக ஸ்ரீகாந்தா! ஸ்ரீநிவாசா! புரந்தர விட்டலா!! என்று வேண்டுகிறார்.



சென்ற இதழின் தொடர்ச்சி...

# மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்...

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ
ஸ்ரீ.உ.வே.அ.கிருஷ்ணமாசார்ய
ஸ்வாமி, திருவரங்கம்,
98842 89887.

கந்தாடை இராமாநுஜ ஐயங்காரைப் பற்றி "திருமலை ஒழுகு" தரும் செய்திகள் :

கந்தாடை இராமாநுஜமுனி கி.பி. 15ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், திருமலைக்கு ஏறும் படிகளைச் சீர்திருத்தினார். செல்வன் என்பானொரு இடையனே திருமலையின் படிகளை முதன் முதல் அமைத்தவன் ஆவான். மட்லகுமார அநந்தராய னும் அப்படிகளை ஒழுங்கு செய்து, அடியார்கள் ஏறுவதற்கு வசதி செய்வித்தான்.

இவ்வாறு அமைக்கப்படுவதற்கு முன், யாத்திரிகர்கள், ஆழ்வார் தீர்த்தக்கரை வழியாகவே பெரிய ஏற்றத்தாலை (காலி கோபுரம்) வரையில் சென்றனர் என்பர். அதனால்தான், இன்றும் ஆழ்வார் தீர்த்தத்தில் நீராடிய பின், மலை ஏறும் வழக்கம் உள்ளது போலும். தொண்டைமான் சக்கரவர்த்தி அத்தீர்த்தக் கரையிலுள்ள நரசிங்கர் சந்நிதி வழி யாக ஒரு பிலத்துள் நுழைந்து வேங்கட வாணனை வணங்கி வந்தான் என்றும், அவ்வழிப் பெருமானா லேயே காட்டப்பட்டது என்றும் திருமலை ஒழுகிலிருந்து அறியப்படுகிறது.

"கந்தாடை இராமாநுஜ ஐயங்கார் என்றொரு சாத்தாத ஸ்ரீவைஷ்ணவர், உடையவரிடம் பரமவைராக்ய நிஷ்டராய்ப் பரம பாகவதோத் தமராய், ஸ்பர்சவேதி (நினைத்த மாத்திரத்தில் ஆட்கொள்ளவல்ல வித்யை) என்கிற வித்யை பலிக்கும் படியான வாக்யாதிகராய் இருக்குமவர், ஸ்ரீரங்காதி க்ஷேத்ரங்களிலே அநேக கோபுர மண்டப ப்ராஸாதிகளைக் கட்டிவைத்து, ஔபசாரியஸாம் ஸ்பர்சிக ஆப்யவஹாரிக (உபசாரமாகச் செய்யப் படும் சாமரம் வீசுதல் முதலான கைங்கர்யங்களை யும், திருமேனிக்கான திருமாலை தொடுத்தல் முதலான கைங்கர்யங்களையும், மனதிலே தியானித் தல் முதலான) கைங்கர்யங்களையும் நடப்பித்துக் கொண்டு வரும் காலத்துக்கு முன்பு ஒரு கால விசேஷத்திலே திருமலையிலே செல்வன் என்றொரு இடையன் பசுமந்தைக் கூட்டி மேய்த்துக் கொண்டி ருக்கிறவனுடைய ஸ்வப்நத்திலே திருவேங்கட முடையான், ஓரிடத்திலே நிக்ஷேப மிருக்கும்படியைச் (புதையல் இருக்கும் படியை) சொல்லி, அந்தத் திரவியத்தை எடுத்துத் திருமலை அடிவாரத்துக்கும், திருச்சுகனூருக்கும், நாமிருக்கும் இடத்துக்குமாகச் சேவாபரர்க்கு ஸுகமாக ஏறி வரும்படிக்கு வழியை உண்டாக்கிப் படிகளையும் கட்டென்று நியமிக்கை யாலே, அவனும் ஸ்வப்நத்தைக் கண்டு ப்ரீதனாய் அப்படியே அந்த நிக்ஷேபத்தை எடுத்து ஸரஸமாக (சுலபமாக) வழி உண்டாக்கிப் படிகளையும் கட்டி வைத்தான்.



சில காலம் சென்றவாறே வழியிலுள்ள படிகள் சிதிலமாயிருக்க, அப்போது கந்தாடை இராமாநுஜ ஐய்யங்கார் அந்தப் படிகளை வாங்கி விஸ்தாரமாய் ஸு்த்ருடமாகக் (உறுதிபட) கட்டி வைத்தும், முன்பு நைமிசாரண்ய வாஸிகளான ரிஷிகள், மார்க்கண்டேயாதி பரமரிஷிகள், திருவேங்கட யாத்ரை பண்ணும்போது மார்க்க மத்தியிலே அழகிய சிங்கர் ப்ரத்யக்ஷமாய் அவர்களுக்கு சேவை பிரசாதித்தாரென்று மார்க்கண்டேய புராணத்தில் வேங்கடாசல மஹாத்மியத்திலே இருக்கையாலே, அந்த அழகிய சிங்கர் எழுந்தருளியிருந்த குகையா னது ஒரு படுசியிலே (பள்ளத்தில்) இருக்கையாலே, ஒருவருக்கும் இறங்கி ஏற யோக்யமல்லாமை யாலே, அந்த ஸ்தலத்தைப் பரிஹரித்துக் குகைக்குத் தக்ஷிண பாகத்திலே மார்க்க மத்யத் திலே எல்லாரும் சேவிக்கும்படிக்குக் கோயில் கட்டி, அழகியசிங்கரைத் திருப்ரதிஷ்டை கொண்டருளப் பண்ணி நித்யம் திருவாராதனம் நடக்கும் படிக்குக் கட்டளை பண்ணியும்,

முன்பு, எம்பெருமானார் திருவேங்கட யாத்ரை பண்ணின பொழுது திருமலை நம்பியும் அனந்தாழ்வானுமாகத் திருவேங்கடமுடையான் பிரசாதமான மாம்பழங்களைக் கொண்டு எதிரே வந்து எம்பெருமானார்க்கு சமர்ப்பிக்க, அவரும் அந்த பழங்களை வாங்கி “ப்ராப்தமாத்ரேண புஞ்ஜீயாத் ப்ரஸாதம் பாவனம் ஹரே” என்கிற படியே அமுது செய்தருள, அந்தப் பழங்களின் கொட்டைகள் அங்கே விழுந்து முளைத்து வர்த் தித்துப் பல பர்யந்தமாகையாலே (மரம் வளர்ச்சி யுற்று மாம்பழங்களைத் தந்திட அந்த இடமானது பல மாமரங்களைக் கொண்ட சோலையாக மாறிட...), தத் ஸந்தான பரம்பரா ப்ராப்தமான மரங்களிருக்கிற ஸ்தலத்திலே ஒரு கோயிலைக் கட்டி எம்பெருமானாரை, அர்ச்சாரூபேண திரு ப்ரதிஷ்டை கொண்டருளப் பண்ணினார் கந்தாடை இராமாநுஜ முனி.

திருவேங்கட யாத்திரைப் பண்ணுகிற பரம பாகவதர்களுக்கு குளிர், வெயில், மழை ஆகியவை களால் ஏற்படுகின்ற துன்பத்தினைப் போக்கு வதற்காக மண்டபங்களை நிர்மாணித்தும், குளங்களை வெட்டுவித்தும் பணிகள் பல செய்தார். அவைஷ்ணவர்களான தேவதாந்தரபரர்களால் திருமலைக்கு ஆபத்து நேரிடாவண்ணம் திருமலை அடிவாரத்திலே முன்பு திருமலை நம்பி எம்பெருமானார்க்கு ஸ்ரீராமாயணத்தின் பொருளை உரைத்திட திருவேங்கடமுடையான் ஸந்நிதியின் சமீபத்திலே லக்ஷ்மீ நரஸிம்ஹனைப் பிரதிஷ்டை பண்ணுவித்தார்.

முன்னொரு காலத்தில் தொண்டைமான் சக்கர வர்த்திக்கு சேவை சாதித்தருளின திருவேங்கட முடையானுக்கு அவர் எந்த இடத்தில் சேவை தந்த ருளினாரோ, அந்த இடத்தில் ஒரு மண்டபம் கட்டுவித் தும் திருவேங்கடமுடையானுடைய திருவடிகளுக்கு அருகில் அனந்த கருட விஷ்வக் சேனாதிகளை பிரதிஷ்டைப் பண்ணுவித்தார்.

திருவேங்கடமுடையான் சந்நிதியிலே ஆழ்வார் கள், எம்பெருமானார், ஆழ்வார் திருமகளா ரான ஆண்டாள் ஆகியோருக்கு திருநட்சத்திர மஹோத்ஸ வங்கள் எம்பெருமானார் சந்நிதியிலே நடக்கும்படி ஏற்பாடுகளைச் செய்தார். செண்பகத் திருச்சுற்று திருவீதியின் தெற்குப் பகுதியில் பொலி வீடு பொடு வித்தார் (கோயிலுக்கு விடப்பட்ட ஊர் மற்றும் பல நிவந்தங்களை கல்லிலே எழுதி வைக்கப்படும் மண்டபத்தை நிர்மாணித்தார்).

கீழ்த்திருப்பதியில் கோவிந்தராஜன் திருக் கோயிலுக்கு புறம்பாக எம்பெருமானார்க்கு கோபுர பிரகாரங்களுடனே ஒரு மண்டபத்தைக் கட்டுவித்து அதிலே எம்பெருமானாரை திருப்பிரதிஷ்டை செய்தருளினார்.

கோவிந்தராஜன் சந்நிதிக்கு அலங்காரமாய் மழையாலும், வெயிலாலும் பாதிக்கப்படாததாய் தெற்கு நோக்கி துவார பாலகர் மண்டபத்திற்கு கீழாய் பெரியதாக ஒரு கருட மண்டபத்தைக் கட்டுவித்தார்.

வைகானச ஆகமவிதிப்படி முன்பிருந்த திருவனந்த பெருமாளுக்கு உண்டான பலிபீட (கருட) த்வஜஸ்தம்பங்களை நீக்கி விட்டு, காலை மாலை வேளைகளிலே திருவாராதனம் மட்டும் நடக்கும்படி பண்ணி திருவைகாசித் திருநாள், திருஆனித் திருநாட்களில், காலை மாலை வேளைகளில் கோவிந்தராஜன் திருவீதி எழுந்தருளும்போது எம்பெருமானாரும் திருவீதியில் எழுந்தருளுமாறு ஏற்பாடுகளைச் செய்தார்.

## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT

## SAPTHAGIRI

(MONTHLY)
FORM IV
*See Rule 8*

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | TIRUPATI |
| 2. Periodicity of its Publication | : | Monthly |
| 3. Honorary Editor | : | **Dr. K.S. Jawahar Reddy,** I.A.S., Executive Officer, TTD |
| 4. Printer's Name | : | **Sri. P. Rama Raju,** M.A., |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Spl. Officer (Publication & Press), T.T.D., Tirupati. |
| 5. Editor & Publisher's Name | : | **Prof. K. Rajagopalan,** Ph.D. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Chief Editor, Sapthagiri T.T.D. Journal, Tirupati. |
| 6. Name and address of individuals who own the News paper and partners or share holders holding more than one percent of the Total Capital | } | Board of Trustees represented by the Executive Officer on behalf of T.T.D., Tirupati |

*I, K. Rajagopalan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

TIRUPATI
Date : 28-2-2021

**(Sd.) K. Rajagopalan**
*Signature of the Publisher*

திருவீதிகளில், எம்பெருமானார் எழுந்தருளும் போது அவருடைய ஆச்ரமாநுரூபமாக (அவருடைய ஸந்யாஸாச்ரமத்தை கருத்தில் கொண்டு) காவிக் குடை பிடிக்கும்படி ஏற்பாடுகள் செய்தார்.

மேலும், உத்ஸவ காலங்களில் கோவிந்தராஜ னோடு எம்பெருமானாரும், ஆழ்வார் திருமகளாரும் எழுந்தருளும் முறைமையை ஏற்படுத்தி வைத்தார்.

திருவைகாசித் திருநாளில் நம்மாழ்வார் திரு நக்ஷத்திர உத்ஸவத்தின்போது எம்பெருமானாரை அவருடன் திருவீதி எழுந்தருளப் பண்ணுவித்ததோடு மட்டுமல்லாமல் அவர்கள் முன்னராக ஸ்ரீவைஷ்ணவர் கள் இயலை அனுஸந்திக்கும் படிக்கும், இயல் நடுவாக ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவர்களும் திருக்கோர்வை கோர்த்துக் கொண்டு இயல் அனுஸந்திக்கும்படி யும் ஆழ்வாரோடு அரையர், தாளமும் கையுமாய் சேவித்துக் கொண்டு வரும்படிக்கும் திருமலை நம்பி, அனந்தாழ்வான் திருவம்சத்தவராய் உள்ள ப்ரஹ்ம வித்துக்கள், ஆசார்ய பதம் நிர்வஹிக்கும் படி பூர்ணாதிகாரிகளான இருவரும் இயலுக்கு இரண்டு பார்சுவத்திலும் (பக்கத்திலும்) திருக் கோர்வை இன்றிக்கே சேவித்துக் கொண்டு வரும் படிக்கும், திருக்குரவை முன்னாக உத்தமாச்ரமி களும் திரிதண்ட ஹஸ்தர்களாய் அநுஸந்திக்கும் படிக்கும், இன்னமும் உச்சிநங்களான அனேக ஸ்ரீவைஷ்ணவ தர்மங்களை உத்தரிப்பித்தும் நடப் பித்தும் வந்தார். (திருமலை ஒழுகு 1953 ஆம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தா ரால் பதிப்பிக்கப்பெற்ற ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ர தாய க்ரந்தமாலா எண்.4).

தீரம், வண்மை, மனதைக் கவரும் அவயவங் கள் ஆகியவற்றை உடைய அழகிற் சிறந்தவரான கோவிந்த ராஜருக்கு நாச்சிமார்களுடைய சேர்த் தியிலே உன்னத ஸ்தானம் வேண்டுமென்று தம்மு டைய பேராலே "ராமாநுஜ சரணாலயம்" என்று எப்போதும் எழுந்தருளும்படிக்கு திவ்ய ஸிம்ஹா சனம் பண்ணி வைத்தார்.

திருக்கொட்டாரத்தையும், இரண்டு கருவூ லங்களைக் கட்டுவித்தும் இவைகளை வளைத்து ஒரு திருமதிளும், திருக்கோபுரமும் கட்டுவித்தார். திருக்கோபுரத்திலே எழுந்தருளியிருக்கும் திரு வாழியாழ்வானை சேவிப்பதற்கும், திருவா ராதனங்கள் சமர்ப்பிப்பதற்கும் உதவும் பொருட்டு கீழ் மண்டபமும், மேல் மண்டபமும் கட்டுவித்தார். கோவிந்த ராஜனுக்கு வைகாசி மஹோத்ஸவ முடிவில் சைத்யோபசாரமாக ஊஞ்சல் விழா கொண்டாடும்படிக்கு திருக்கோபுர வாசலிலே ஒரு உறியடி மண்டபம் கட்டுவித்தார்.

தொடரும்...

தி.தி.தே. குறித்த தகவல்கள் அறிவதற்கு, திருப்பதி யில் இரயில் நிலையம், ஆர்.டி.சி. பேருந்து நிலையம், அலிபிரி பேருந்து நிலையம், சத்திரங்கள், அலிபிரி டோல்கேட், ரேணிகுண்ட்டா இரயில் நிலையம் மற் றும் விமான நிலையம் போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட தி.தி.தே. தகவல் மையங்களை அணுகுங்கள்.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 55



**தொகுப்பு :**
**திரு. எஸ். ராஜகுமார்,**
**சென்னை, 8124930259**

புதிருக்கு விடை அறிய
26ம் பக்கம்
பார்க்கவும்...

### இடமிருந்து வலம்

1. பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் ஆகிய மூவரும் சந்தித்துக் கொண்ட இடம்....(7)
4. மோட்ச புரிகளில் ஒன்று....(2)
8. மனிதனை ஏழரை ஆண்டுகள் பிடிக்கும் கிரகம்.....(2)
11. கருட புராணத்தை முனிவர்களுக்கு உபதேசித்தவர்....(6)
14. கொக்கு வடிவில் வந்த பகாசுரனை கிருஷ்ணர் வதம் செய்த இடம்....(6)
15. வைகுண்டத்தில் பெருமாளுக்கு சேவை செய்பவர்கள்.....(8)
16. அரையர் சேவை நடைபெறும் தலங்களில் ஒன்று.....(8)
18. யசோதையாக மாறி கண்ணனை தாலாட்டியவர்....(6)

### வலமிருந்து இடம்

02. பிரம்மாவிற்கு கோயில் உள்ள இடம்....(4)
04. பார்வதி தேவியின் மறு உருவம்...(2)
06. மார்கழி மாதம் வளர்பிறை ஏகாதசி....(8)
09. ஸ்ரீபெரும்புதூரில் நிறுவப்பட்டுள்ள இராமாநுஜர் ...(9).
10. காளியனை அடக்குவதற்காக கிருஷ்ணன் ஏறிய மரம்....(7)
12. கிருஷ்ணர் அவதரித்தபோது தேய்பிறை அஷ்டமியாக இருந்தாலும் வானில்....(5) பிரகாசித்தது.
17. அனுமன் படுத்திருப்பது போல் காட்சி தரும் மலை....(8)
19. சந்திரனின் பிரகாசம் நீங்கும்படி சபித்தவன்....(4)
21. நம்மாழ்வார் மட்டுமே மங்களாசாசனம் செய்த திருத்தலம்....(8)

### மேலிருந்து கீழ்

03. திருநாங்கூரில் உள்ள பதினோறு திவ்ய தேசங்களில் ஒன்று.....(9)
05. விருந்தாவனத்தில் உள்ள பன்னிரண்டு வனங்களில் ஒன்று...(6)
07. கடவுளும், ஆன்மாவும் வேறு என கொள்கை உடையது....(4)

### கீழிருந்து மேல்

13. கிருஷ்ணரை “ஸ்ரீ நாத் ஜச்” என்று அழைக்கப்படும் தலம்...(4)
16. ஸ்ரீரங்கநாதர் நாபியில் பிரம்மா இல்லாத தலம்....(5)
17. உற்சவர் தாயார் கோயிலை விட்டு வெளியே வராத தலம்....(6)
20. கிருஷ்ணரை ரோகிணி தினமும் வழிபடும் தலம்......(7)

# திருமழிசை ஆழ்வார் போற்றும் திருவேங்கடம்

– திரு. ஸ்ரீநிவாசன்,
பரமகுடி, 94425 78967

*சென்ற இதழின் தொடர்ச்சி...*



திருமலையில் யானை மட்டுமல்ல! இயற்கையில் அறிவு குறைந்த பற்பல பொருட்களும் நித்ய சூரிகளைப் போலவே பேரறிவு பெற்று இறைவனுக்குத் தொண்டுகள் செய்வதை அடுத்த பாடலில் கூறு கிறார் ஆழ்வார்.

“நல்ல நீலமணி போன்ற திருநிறத்தையும் நற்பண்புகளையும் உடைய திருவேங்கடவன் வாழும் ஊர் திருமலை! நீலமணி போன்ற விலை மதிப்பற்றவன்! நம் முந்தானையில் முடிந்து கொள்ள லாம்படியான, பெருங்கருணை கொண்டவன்! உலகில் உள்ள மணிகளில் உள்ள கடினத்தன்மையும், சிறிய உரு வமும் கொண்டவை. இவையெல்லாம் இல்லாத திருமால் நன்மணிவண்ணன் ஆகிறான். அவன் திருமலையாகிய ஊரில் கோயில் கொண்டுள்ளான். அரசனது பாதுகாப்பிற்கு உறுப்பாகிறபடி யால் ஊர் எனப்படும். தாழ்ந்தார்க்கும் முகம் கொடுத்து அவர்களைக் காப் பாற்றும் திருமலையையே ஊர் எனக் கொண்டான். இங்கு யாளிகளும் சிங்கங் களும், தங்களுக்குள் இடையேயுள்ள இயற்கையான பகைகளை மறந்து ஒன்றாக இறைவனுக்குப் பணி செய்கின்றன. அறிவு மழுங்கிக் கிடக்கும் பொன்னும், மணியும் இறையருளால் திருமாலுக்குப் பணி செய்யும் படியான பேரறிவு பெற்று விளங்குகின்றன.

இப்படிப்பட்ட ரத்தினங்கள் அருவிகளுடன் கலந்து உருண்டு விழப்பெற்ற காடு களும், குரங்குகளும், வேடுவர்களும் நித்திய சூரிகளைப் போல இறைப்பணி செய்யும் திருமலையில் பரமபதத்தில் வாழும் நித்திய சூரிகளும் வணங்கிப் போற்றுகின்றனர்.

நித்ய முக்தரைக்காப்பாற்றும் பரமபதத்தை விடச் சாமானியர்களை நித்ய சூரிகளாக்கும் வேங்கடமே சிறந்ததன்றோ!” என்று பாடுகிறார் திருமழிசை யாழ்வார்.



*“நன்மணி வண்ணனூர் ஆளியும் கோளரியும்*
*பொன் மணியும் முத்தமும் பூமரமும் - பன்மணி நீ*
*ரோடு பொருதுருளும் கானமும் வானரமும்*
*வேடுமுடை வேங்கடம்”* –நான்முகன் திருவந்தாதி 47

அடுத்த பாடலில் நித்திய சூரிகள் தொழுவதும் சாமானியர்களின் நோய்களைத் தீர்ப்பதும் திருமலையே! என்று கூறுகிறார்.

உண்மையான பக்தியுடன் நித்ய சூரிகள் ஆகிய விண்ணோர் தொழுவதும் அழியாத பாவங்களையும் உடம்பைப் பற்றிய நோய்களையும், போக்கடிக்க வல்லதும் ஆகியது திருமலையாகும். அசுரர்களை அழிக்க தனது சக்கர ஆயுதப் படையைப் பிடித்துத் தேவர்களைக் காத்தருளும் எம்பெருமானின் மலையும் திருமலையாகும்.

இறைவனைத் தொழுவதில் இரண்டு வகை உண்டு. தமக்கு வேண்டிய பலன்களை நினைத்துக் கொண்டு தொழுவது ஒரு வகை. இது பொய்யானது. நித்ய சூரிகளோ இத்திருமலையை மட்டுமே கண்டு தொழுகிறார்கள். இது மெய்யானது. எனவே தான், *''மெய்ம்மையால் விண்ணோர் தொழுவதும்!''*என்றார். நாம் செய்த பாவ புண்ணியங்களை அநுபவித்தே தீர வேண்டும். இப்பாவங்கள் காரணமாக வரும் நோய்களைத் தீர்ப்பதும் திருமலை ஆகும். இத்தகைய திருவேங்கடமே நமக்குக் காப்பு எனப் பாடுகிறார் ஆழ்வார். அப்பாசுரம் இதோ:

*''வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்*
*வேங்கடமே மெய்வினை நோய் தீர்ப்பதுவும் - வேங்கடமே*
*தானவரை வீழத்தன் ஆழிப்படை தொட்டு*
*வானவரைக் காப்பான் மலை''*

–நான்முகன் திருவந்தாதி 48

திருமழிசையாழ்வார் போற்றும் திருமலை சென்று திருவேங்கட நாதனைச் சேவித்து, அவனுக்கே அடிமை பூண்டு வாழ்வோமாக!

முற்றும்...

# இராமாயணத்தில் ஸ்ரீராமர்

**சனாதன சமய இலக்கியத்தில் ஸ்ரீமத்ராமாயணம் ஆதி காவியமாக உலக பிரசித்தம். அம்மகாகாவியம் பாரதத் திருநாட்டின் பண்பாட்டிற்கு மூலம். ஸ்ரீமத்ராமாயணக் கதை மலைகள் மண் இருக்கும் வரை, நதிகள் பாயும் வரை அனைத்துலகத்திலும் பரந்து இருக்கும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த மகா காவிய நாயகன் புருஷோத்தமனான ஸ்ரீராமச்சந்திரன் அவரது நாம உச்சரணையே ஒரு வேடனை மகா கவியாக மாற்றியது. ஆதி கவியாக ஆக்கியது.**



**புருஷோத்தமனான ஸ்ரீராமரின் பித்ரு வாக்கிய பரிபாலனம். ஒரு இல், ஒரு வில், ஒரு சொல் என்னும் நியம நிஷ்டை. நட்புக்கு இலக்கணம், சிஷ்டரக்ஷணை, பிறன் மனை நோக்கா பேராண்மை, உதாரகுணம்... அங்ஙனே சீதா பிராட்டியின் கற்பின் மேன்மை, பொறுமை, சகிப்புத்தன்மை, தாயன்பு, தசரதனின் புத்ர பாசம், பரதாதிகளின் சகோதர பாசம், லக்ஷ்மணனின் கைங்கர்யமும் ஸ்ரீராமரின் சேவகனான ஆஞ்சநேயனின் ஸ்வாமி பக்தி பராயணத்வம், சகஜமான உழைப்பும், குறையில்லா பிரம்மச்சரியமும், பக்தர்களின் மீது அளவு கடந்த அன்பு... இங்ஙனே உலகினை உய்விக்க உதவும் நற்குணக்குவியல் இங்கில்லாது வேறெங்கு பரிமளிக்கும். இவ்வளவு சிறப்பு குணங்களுடன் ஸ்ரீராமன் உத்தம புருஷனாய் உதாரணமாய் நின்றார். அனேக நற்குணங்கள் கொண்டவராய் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி திகழ்ந்தார். ஸ்ரீமத்ராமாயணம் நித்திய பாராயண நூல் ஆனது.**




# கீதை பண்பாட்டுடன் முன்னோக்கிச் செல்

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ், 6304428489

பகவத்கீதையின் பெயர் அறியாத இந்தியர் இருக்கமாட்டார்கள். இந்தியர் மட்டுமல்ல, அந்நிய தேசத்தினரும் கீதையைக் குறித்து அறிந்துள்ளனர். கீதை வாசிப்பதற்கும், கீதை பண்பாட்டிற்கும் வேறு பாடு உண்டு. பகவத்கீதையை தெரிந்து கொள்வதோ அல்லது படிப்பதோ கீதை அத்யயனம் எனில் அதனை வாழ்க்கையில் கடைபிடிப்பது கீதை பண்பாடாகின்றது.

ஸ்ரீகிருஷ்ண பகவான் கீதையை போதிக்கும் போது சீடனாக அர்ஜுனன் கீதையின் தகவல்களை சிறப்பாக கிரகித்துக் கொண்டான். இது அத்யயனம் கீழ் வருகின்றது. இதனை ஞானம் என்பர். கீதை ஞானம் என்பது இதுவே. ஆனால், எப்பொழுது கீதை ஞானம் நடைமுறையில் கடைபிடிக்கப்படுகிறதோ அது விஞ்ஞானம் அல்லது நடைமுறை ஞானம் அல்லது கீதை பண்பாடு ஆகின்றது.

கீதை உபதேசத்திற்குப் பிறகு இறுதியாக அர்ஜுனன் தன் கருத்தினை தெரிவிக்கும் போது “கிருஷ்ணா! என் மோகம் விலகி விட்டது. நான் சுயநினைவிற்கு வந்து விட்டேன். நான் இப்பொழுது அமைதி நிலையடைந்தேன். என் சந்தேகங்கள் எல்லாம் தீர்ந்து விட்டன. நீ கூறும்படியே இனி செய்கின்றேன்” என்றான்.

அதாவது கீதையின் உபதேசங்களை அவன் கிரகித்துக் கொள்வதற்கு தயாராக இருந்தான். பகவத் கீதையை கடைபிடிக்கும் பயிற்சி துவங்கி விட்டாலே அது அற்புதமான முடிவுகளை நமக்கு அளிக்கின்றது. எனவே, இது போன்ற பயிற்சியே நம் பண்பாடாக அழைக்கப்படுகின்றது.

பண்பாடு என்றால் என்ன? வழியில் சென்று கொண்டிருக்கும் ஒருவன் கோயில் வந்தவுடன் ஒரு நொடிப் பொழுது அங்கு நின்று வணங்கி விட்டு செல்வது அவன் பண்பாடாகும்.

பிறந்த நாளன்று குழந்தைகள் புது ஆடைகள் அணிந்து பெற்றோரை வணங்குவது அக்குழந் தைக்குக் கற்றுக் கொடுக்கப்பட்ட பண்பாடு. பெரியோர்களுக்கு மரியாதை அளிப்பதும் பண் பாடே ஆகும். இவ்வாறாக அந்தந்த சூழ்நிலைக் கேற்ப நாம் யாருடைய ஊக்குவிப்பும் இன்றி சில நற்செயல்களையும் செய்கின்றோம். இதுதான் நம் பண்பாடாகும். அதே போன்று பகவத் கீதையில் கூறப் பட்டுள்ளவற்றை நாமும் நம் அன்றாட வாழ்க்கையில் கடைபிடித்துக் கொண்டே வந்தால் அது கீதை பண்பாடாகி விடுகின்றது.

பகவத் கீதையில் கூறப்பட்டுள்ள சிலவற்றினை பக்தர்களும் செய்து கொண்டே உள்ளனர். உதாரணத்திற்கு, “என்னை நினை, என்னை பூஜி, என்னை வணங்கு” என பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ண பகவான் கூறுகின்றார்.

பக்தர்களும் அவற்றினை கடைபிடிக்கின்றனர். இதுவே கீதை பண்பாடாகும். எனவே, ஸ்ரீகிருஷ்ண பகவான் கீதையில் பல தகவல்களை கூறியுள்ளார்.அவை, அனைத்தினையும் கடைபிடித்தால் முழுமையான வெற்றிகள் கிடைக்கும்.

பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ண பகவான் "அர்ஜுனா! முதலில் இந்த இதய பலவீனத்தை விடுத்து உடனே எழு" என மிகவும் கம்பீரமாகக் கூறுகின்றார். கீதைபண்பாட்டினை கடைபிடிக்க வேண்டுமெனில் இந்த முதல் தகவலை அனைவரும், முக்கியமாக இளைஞர்கள் பயிற்சி செய்தல் வேண்டும். இது எளிதானதல்ல. எனவே, விடாமுயற்சியுடன் முயற்சி செய்தால் கண்டிப்பாக வழக்கமாகி விடும். அப்போது நீங்கள் கீதை பண்பாட்டிற்குள் நுழைந்தது போன்றதாகும்.

இந்த முதல் செய்தியில் ஸ்ரீகிருஷ்ண பகவான் இரண்டு தகவல்களைக் கூறுகிறார். ஒன்று இதய பலவீனத்தை விடுதல், இரண்டாவது தன் செயலிலேயே ஒன்றியிருத்தல். போர் புரிய வந்த அர்ஜுனன் உறவினர்களால் நிறைந்திருந்த எதிர் சேனையை கண்டவுடன் சக்தியற்றவனாக பலவீனனானான். அவன் நிற்க முடியாமல் அமர்ந்து விட்டான்.

அப்போது பகவான் முதல் உபதேசமாக "இதய பலவீனத்தை விடுத்து எழுந்து நில்" என்றார். அதாவது இந்த கீதை உபதேசத்தின் வாயிலாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில் மனம் உறுதியுடன் இருத்தல் வேண்டும். தன் செயலிலேயே ஒன்றியிருத்தல் வேண்டும்.

சாதாரணமாக மனிதன் பயப்படக்கூடியவனாகவே இருப்பான். பயத்தை முயற்சிகளின் வாயிலாக விலக்குதல் வேண்டும். முக்கியமாக இளைஞர்களுக்கு நுழைவுத்தேர்வு, நேர்முகத் தேர்வு, அனைவரின் முன்பாக பேசுதல் போன்றவை பயத்தை உண்டாக்குகின்றன. மனவலிமையின்மையே இவற்றிற்கு காரணமாகும். இதய பலவீனத்தை விடுதல் வேண்டும் என பகவான் கூறிய வார்த்தையை அடிக்கடி கூறுதல், நினைவில் கொள்ளுதல், ஒரு காகிதத்தில் எழுதி சுவற்றில் ஒட்டி வைத்தல், கணினியில் தட்டச்சு செய்து அவ்வப்போது பார்த்தல் போன்றவை அந்த துர்குணத்தைப் போக்க துணை புரியும்.

இதனால் புதியோருடன் பேசுவதற்கு தைரியம் உண்டாகுதல், எச்செயலுக்கும் முன் செல்லுதல், மெதுவான செயல்களும் வேகமாகுதல், சந்தேகமிருந்தால் நேரடியாகவே கேட்டல் போன்றவை இதய பலத்தை அதிகரிக்கும்.

இவ்விதமாக கீதை உபதேசத்தினை கடைபிடிக்க முயற்சிப்பதே கீதை பண்பாடாகும் இதன் வாயிலாக மேற்கொள்ளும் முயற்சி வாழ்க்கையில் நாம் விரும்பியவற்றை அடைய வழிவகுக்கிறது. வருடத்தில் குறைந்தது ஐந்தாறு கீதை உபதேசத்தினை வாழ்க்கையில் கடைபிடித்தால் கீதைபண்பாட்டின் வாயிலாக வாழ்க்கையில் மேன்மையுண்டாகும்.

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 55க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | க் | கோ | வி | லூ | ர் | க | ஷ் | 2 பு | | 3 தி |
| | ளி | 4 கா | சி | த | கா | ஏ | ட | ண் | 5 கு | 6 வை | ரு |
| 7 து | 8 ச | னி | மே | ரு | தி | த | ந் | க | மு | 9 தா | க் |
| வை | | ரா | | ம் | ர | ம | ப | ம் | த | 10 க | கா |
| த | ம் | வா | 11 சூ | த | மு | னி | வ | ர் | வ | டி | வ |
| ம் | க | த் | | மி | ண | ர் | 12 பௌ | | ன | கு | ள |
| க | ங் | 13 நா | | 14 க | தி | ர | வ | ன | ம் | ர் | ம் |
| ட | ர | 15 நி | த் | தி | ய | சூ | ரி | க | ள் | னா | பா |
| பா | 16 ஸ்ரீ | வி | ல் | லி | பு | த் | தூ | ர் | | ன் | டி |
| ப் | | | லை | ம | ழ் | வா | து | ந் | ரு | 17 ம | |
| ரு | 18 பெ | ரி | யா | ழ் | வா | ர் | | ன் | ச | ட் | 19 த |
| 20 தி | | | | ன் | ப | ர் | மா | ழ் | வா | ரு | 21 தி |


திருமலை திருப்பதி தேவஸ்தானம்
திருமலையப்ப ஸ்வாமி
தெப்போத்ஸவம்
24-03-2021 முதல் 28-03-2021 வரை



# ஸ்ரீமஹாலக்ஷ்மி அஷ்டோத்திர சத நாமாவளி

ஓம் ப்ரக்ருத்யை நம:
ஓம் விக்ருத்யை நம:
ஓம் வித்யாயை நம:
ஓம் ஸர்வ பூதஹிதப்ரதாயை நம:
ஓம் ச்ரத்தாயை நம:
ஓம் விபூத்யை நம:
ஓம் ஸூரப்யை நம:
ஓம் பரமாத்மிகாயை நம:
ஓம் வாசே நம:
ஓம் பத்மாலயாயை நம: (10)
ஓம் பத்மாயை நம:
ஓம் ஸூசயே நம:
ஓம் ஸ்வாஹாயை நம:
ஓம் ஸ்வதாயை நம:
ஓம் ஸூதாயை நம:
ஓம் தன்யாயை நம:
ஓம் ஹிரண்மய்யை நம:
ஓம் லக்ஷ்ம்யை நம:
ஓம் நித்ய புஷ்டாயை நம:
ஓம் விபாவர்யை நம: (20)
ஓம் அதித்யை நம:
ஓம் தித்யை நம:
ஓம் தீப்தாயை நம:
ஓம் வஸூதாயை நம:
ஓம் வஸூதாரிண்யை நம:
ஓம் கமலாயை நம:
ஓம் காந்தாயை நம:
ஓம் காமாயை நம:
ஓம் க்ஷீரோதஸம்பவாயை நம:
ஓம் அனுக்ரஹபதாயை நம: (30)
ஓம் புத்தயே நம:
ஓம் அனகாயை நம:
ஓம் ஹரிவல்லபாயை நம:
ஓம் அசோகாயை நம:
ஓம் அம்ருதாயை நம:
ஓம் தீப்தாயை நம:
ஓம் லோகசோக விநாசின்யை நம:
ஓம் தர்மநிலயாயை நம:
ஓம் கருணாயை நம:
ஓம் லோகமாத்ரே நம: (40)
ஓம் பத்மப்ரியாயை நம:
ஓம் பத்மஹஸ்தாயை நம:
ஓம் பத்மாக்ஷ்யை நம:
ஓம் பத்ம ஸூந்தர்யை நம:
ஓம் பத்மோத்பவாயை நம:
ஓம் பத்ம முக்யை நம:
ஓம் பத்மநாபப்ரியாயை நம:
ஓம் ரமாயை நம:
ஓம் பத்மமாலாதராயை நம:
ஓம் தேவ்யை நம: (50)

ஓம் பத்மின்யை நம:
ஓம் பத்ம கந்தின்யை நம:
ஓம் புண்யகந்தாயை நம:
ஓம் ஸுப்ரஸன்னாயை நம:
ஓம் ப்ரஸாதாபிமுக்யை நம:
ஓம் ப்ரபாயை நம:
ஓம் சந்த்ரவதனாயை நம:
ஓம் சந்த்ராயை நம:
ஓம் சந்த்ரஸஹோதர்யை நம:
ஓம் சதுர்புஜாயை நம: (60)
ஓம் சந்த்ரரூபாயை நம:
ஓம் இந்திராயை நம:
ஓம் இந்துசீதலாயை நம:
ஓம் ஆஹ்லாத ஜனன்யை நம:
ஓம் புஷ்ட்யை நம:
ஓம் சிவாயை நம:
ஓம் சிவகர்யை நம:
ஓம் ஸத்யை நம:
ஓம் விமலாயை நம:
ஓம் விச்வஜனன்யை நம: (70)
ஓம் துஷ்ட்யை நம:
ஓம் தாரித்ர்ய நாசின்யை நம:
ஓம் ப்ரீதிபுஷ்கரிண்யை நம:
ஓம் சாந்தாயை நம:
ஓம் ஸுக்லமால்யாம்பராயை நம:
ஓம் ச்ரியை நம:
ஓம் பாஸ்கர்யை நம:
ஓம் பில்வநிலயாயை நம:
ஓம் வராரோஹாயை நம:
ஓம் யசஸ்வின்யை நம: (80)
ஓம் வஸுந்தராயை நம:
ஓம் உதாராங்காயை நம:
ஓம் ஹரிண்யை நம:
ஓம் ஹேமமாலின்யை நம:
ஓம் தனதான்யகர்யை நம:
ஓம் ஸித்தயே நம:
ஓம் ஸ்த்ரைண ஸௌம்யாயை நம:
ஓம் சுபப்ரதாயை நம:
ஓம் ந்ருபவேஸ்மகதானந்தாயை நம:
ஓம் வரலக்ஷ்ம்யை நம: (90)
ஓம் வஸுப்ரதாயை நம:
ஓம் சுபாயை நம:
ஓம் ஹிரண்யப்ராகாராயை நம:
ஓம் ஸமுத்ர தனயாயை நம:
ஓம் ஜயாயை நம:
ஓம் மங்களாயை நம:
ஓம் தேவ்யை நம:
ஓம் விஷ்ணு வக்ஷ:ச்ஸ்தல
ஸ்திதாயை நம:
ஓம் விஷ்ணு பத்ன்யை நம:
ஓம் ப்ரஸன்னாக்ஷ்யை நம: (100)
ஓம் நாராயண ஸமாச்ரிதாயை நம:
ஓம் தாரித்ர்ய த்வம்ஸின்யை நம:
ஓம் ஸர்வோபத்ரவ வாரிண்யை நம:
ஓம் நவதுர்காயை நம:
ஓம் மஹாகாள்யை நம:
ஓம் ப்ரஹ்ம விஷ்ணு சிவாத்
மிகாயை நம:
ஓம் த்ரிகால ஜ்ஞான
ஸம்பன்னாயை நம:
ஓம் புவனேஸ்வர்யை நம: (108)

**ஸ்ரீலக்ஷ்மி அஷ்டோத்திர சதநாமாவளி சமாப்தம்**



13-02-2021 அன்று தி.தி.தே. சார்பில் சென்னை தி.நகரில் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு என புதிய ஆலயம் எழுப்ப நடந்த பூமி பூஜையில் பங்கு கொண்ட ஸ்ரீஸ்ரீஸ்ரீவிஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத்தலைவர், தி.தி.தே. செயலாட்சித்தலைவர்



22-02-2021 அன்று தி.தி.தே. சார்பில் உளுந்தூர்பேட்டையில் திருவேங்கடமுடையானுக்கு புதிய ஆலயம் எழுப்ப நடந்த பூமி பூஜையில் பங்கு கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள், தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள்




27-02-2021 அன்று தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுவில் பதவி அடிப்படையில் உறுப்பினராக பதவியேற்ற ஆ.மா. இந்து சமய அறநிலையத்துறை முதன்மை செயலாளர் டாக்டர் ஜி.வாணி மோகன் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு ஸ்வாமி சித்திரப்படத்தை வழங்கும் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி அவர்கள்



16-02-2021 அன்று ஆ.மா. ஸ்ரீபொட்டிஸ்ரீராமுலு நெல்லூர் மாவட்டத்தில் வஸந்த பஞ்சமியை முன்னிட்டு நடைபெற்ற சரஸ்வதி பூஜையில் பங்கு கொண்ட தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத்தலைவர், தி.தி.தே.செயலாட்சித் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள்



17-02-2021 அன்று நடைபெற்ற தி.தி.தே. “கல்யாணமஸ்து” முஹூர்த்த நிர்ணய நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ்.அவர்கள், தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி அவர்கள் மற்றும் எச்.டி.பி.பி. செயலாளர் பேராசிரியர் கே.ராஜகோபாலன் அவர்கள்



11-02-2021 அன்று புரந்தர தாசர் 174 வது ஆராதனை மஹோத்ஸவத்தின் அங்கமாக அலிபிரியில் உள்ள புரந்தரதாசர் விக்ரகத்திற்கு நடைபெற்ற புஷ்பாஞ்சலி நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தாஸ சாஹித்ய செயல்திட்ட சிறப்பு அலுவலர் திரு.பி.ஆர். ஆனந்ததீர்த்தாசாரி அவர்கள் மற்றும் பஜனை குழுவினர்

# ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயார்

– திருமதி பிரேமா வரதன்,

புதுதில்லி, 9899713565.



தாமரை மலர் மாலை அணிந்து கொண்டு, தாமரையைக் கையிலேந்தி, தாமரை மலரிலேயே வீற்றிருப்பதால் மலர் மகள் என்று போற்றப்படும் ஸ்ரீமஹாலக்ஷ்மி என்பவள் யார்? அவளுடைய பெருமைகள் என்ன? என்பதையெல்லாம் கொஞ்சம் அநுபவிப்போம் வாருங்கள்!

"லக்ஷ்மீ" என்னும் சொல் ***"லக்ஷ்யதே அநயா இதி லக்ஷ்மீ:"*** என்ற இலக்கணத்தின்படி அனைவரையும் தன் குளிர்ந்த பார்வைக்கு இலக்காக்குபவள் என்று பொருள்படும்.

வேதாந்தம் ***"ஹ்ரீச்ய தே லக்ஷ்மீ ச்ச பத்ந்யௌ"*** என்று திருமகளையும் மண் மகளையும் தன் மனைவியராக உடையவனே முழு முதற் கடவுள் என்று கூறுகிறது. ஆகவே திருவின் மணாளனே பரப்ரஹ்மம் என்பது தெளிவாகிறது. வேதம், யார் முழு முதற்கடவுள்? என்று தேடி அதனை விளக்க முற்பட்டு, நாராயணனின் திருமார்பில் ஸ்ரீமஹாலக்ஷ்மியைக் கண்டவுடன் இவனே "பரப்ரஹ்மம்" என்று அறுதியிட்டது. திருமகள் பரப்ரஹ்மத்துக்கு இன்றியமையாத அடையாளமாக உள்ளாள். ஆகவே தான் பெருமானுக்கும் "ச்ரிய:பதி, ஸ்ரீபதி" என்பவையான முக்கியமான திருநாமங்களாகக் கூறப்பட்டுள்ளன.

மீனை எங்கு தொட்டாலும் தண்ணீர் இருக்கும். அதுபோல் நாராயணனின் திருமேனியில் எங்கும் திருமகளே திகழ்கிறாள். பேயாழ்வார் திருக்கோவலூரில் பெருமாளைத் தரிசித்தபோது, அவன் திருமார்பில் விளங்கும் ஸ்ரீமஹாலக்ஷ்மியைத் தான் முதலில் சேவித்து, ***"திருக் கண்டேன் பொன்மேனி கண்டேன்"*** என்று பாடினார். திருமால் தன் கருணைக்குத் தூண்டுகோளான ஸ்ரீமஹாலக்ஷ்மியோடு சேர்ந்து நம் அனைவரையும் காக்கிறான் என்று எல்லா சாஸ்த்திரங்களும் கூறுகின்றன. நம்மைப் படைத்த ப்ரஹ்மம் திருமால். "மால்" என்றால் பேரன்பு பூண்டவன் என்று பொருள். ஸ்ரீமஹாவிஷ்ணு "திரு" என்று கொண்டாடப்படும் தன் பத்னியான ஸ்ரீமஹாலக்ஷ்மியிடம் பேரன்பு கொண்டவர். இதை பட்டர் ஸ்ரீரங்க ராஜ ஸ்தவத்தின் மூலம் (பூர்வ சதகம். ***"அதிஷ்டா னஸ் தம்பௌ... ... ரங்க ப்ரணயின:"*** – சுலோகம் 105) நமக்குக் காட்டுகிறார்.

அதாவது, திருவரங்கனுடைய திருபுஜங்களை இதில் அநுபவிக்கிறார். பெரிய பிராட்டியாராகிற (லக்ஷ்மீ) பெண்யானை எங்கும் சென்று விடாமல் தன்னுடனேயே இருப்பதற்காக, அவளைத் தன் திருமார்பில் தாங்கி, அவளுக்கு இருபுறமும் யானைக்கு உழல்தடியைப் போன்று அமைந்த புஜங்களாம்! என்னே பட்டரின் அநுபவம்!

ஸ்வாமி தேசிகன் மஹாலக்ஷ்மியைப் பார்த்துக் கேட்கிறார். (ஸ்ரீஸ்துதி–2) ஆவிர்பாவ: – அம்மா



கொண்டார் குசேலர். அவர் கிளம்பிய அந்த சமயம், ருக்மிணி பிராட்டி இவர் எந்த திசையிலிருந்து வந்தார்? என்று கண்ணனைக் கேட்க, கண்ணனும் அவர் இருப்பிடத்தை திருக்கையால் அடையாளம் காட்ட, அவளுடைய அருட்கடாட்சம் பட்டு, குசேலரின் அகமே குபேரபுரியாயிற்று.

இவ்வைபவத்தை ஸ்வாமி தேசிகன் *''ஆர்த்தத் ராண... ஸம்பதோகா:''* – (ஸ்ரீஸ்துதி 15) தாயே! லக்ஷ்மி தேவியே! உன்னை ஆச்ரயிப்பவர்களை ரக்ஷிப் பதையே வ்ரதமாகக் கொண்டு, அம்ருத மழை பொழி யும் மேகம் போல் அவர்கள் பால் உன் திருக்கண்கள்



லக்ஷ்மீ! உனக்குப் பிறப்பிடம் எது? யக்ஞ பூமியா? கலசமா? ப்ருகு வம்சமா? எங்கேயிருந்து தோன்றினாய்? நீயே சொல்...! உன் பெருமையை ஆயிரம் நா கொண்ட ஆதிசேஷனாலும் எடுத்து ரைக்க இயலாதபோது அடியேன் எம்மாத்திரம்! இருந்தும் உன் அனுக்ரஹத்தை வேண்டி உன்னைத் துதிக்கிறேன். "ஸ்ரீஸ்துதி" என்னும் பாமாலை சூட்டுகிறேன் தாயே! என்ற தேசிகரை கடாக்ஷிக்கிறாள் தாயார். காஞ்சீபுரத்தில் பேரருளாளனான அத்திகிரி வரதனின் பட்டமகிஷியான பெருந்தேவியான மஹா லக்ஷ்மி நம் தூப்புல் தேசிகனுக்கல்லால் வேறு யாருக்கு அருள் புரிவாள்...! ப்ரார்த்தித்தது ஞானி ஆயிற்றே!

ஸ்வாமி தேசிகனிடம் ஓர் எழை ப்ராம்மணன் த்ரவ்ய சகாயம் வேண்டிட, பெருந்தேவித் தாயாரான மகாலக்ஷ்மி, தேசிகரின் ஸ்ரீஸ்துதியால் உள்ளம் குளிர்ந்து, ஸ்வர்ண மழை பொழிந்தாள் என்பது ஜகத்தில் ப்ரஸித்தமன்றோ! இன்றும் காஞ்சிபுரத்தில் தாயார் சன்னதியின் பக்கத்தில் உள்ள சுவற்றில் இச்சரித்திரம் மிக அழகிய சித்திர ரூபமாக வரையப்பட்டிருப்பதைக் காணலாம். இவ்வோவியத்திலுள்ள கல்யாண ஸர்ப்பத்திற்கு மஞ்சள் குங்குமத்தினால் பொட்டு வைக்கும் கன்னிப்பெண் களுக்குத் தாயாரின் அனுக்ரஹம் கிடைப்பது திண்ணம்.

பரம தரித்திரரான குசேலர், ஒரு பிடி அவலை கிழிந்தத் துணியில் முடிந்து கொண்டு, தன் சிறு வயது நண்பனான கண்ணனைப் பார்க்க துவாரகை வருகிறார். ஏழை பங்காளனான கண்ணன், அன்புடனும் மிக்க மரியாதையுடனும் குசேலரை உள்ளே அழைத்துப் போய் உபசரிக்கிறார். மஹாலக்ஷ்மியான ருக்மிணி பிராட்டியும், அப்பிராம்மணோத்தமருக்குத் தன் திருக்கைகளால் விசிறுகிறாள். தங்களுடைய சிறு வயது கதைகளை யெல்லாம் கண்ணனும் தானுமாக நினைந்து கூறி மகிழ்ந்து, தான் என்ன கேட்க (கண்ணனிடம்) வந்தோம்? என்ற நினைவேயின்றி, கண்ணனிடம் விடை பெற்றுக்

நோக்கும் திசைகளிலெல்லாம் சகல ஐச்வர்யங்க ளும் நான், நான் என்று முன்னோக்கி ஓடி வருகின் றன. பெரியாழ்வார் குழந்தை கண்ணனை கேசவ, நாராயண முதலிய 12 திருநாமங்களை இட்டு அழைக் கிறார். (இத்திருநாமங்கள் மிக முக்கியமானவை பெரியாழ்வார் திருமொழி 2ம் பத்து, 3ம் திருமொழி) அதேபோல் மஹாலக்ஷ்மிக்கும் 12 திருநாமங்கள் உள்ளன. அவற்றைக் கீழே பார்ப்போம்!

**1வது திருநாமம் : "ஸ்ரீ" :**

ஜீவர்களுக்கும் பரமனுக்கும் இடையே ஒரு பாலமாக பிராட்டி செய்யும் இவ்வுதவியை விளக்குவதே "ஸ்ரீ" என்னும் திருநாமம். வடமொழியில் இப்பெயருக்கு 6 பொருள்கள் உண்டு.

1) ஶ்ரீயதே – ஜீவர்கள் அனைவராலும் தஞ்சமாகப் பற்றப்படுகிறாள். 2) ச்ரயதே – தான் நாராயணனைச் சரணமாகப் பற்றுகிறாள். 3) ச்ருணோதி – தன்னை அண்டிய ஜீவர்கள் தங்கள் குறைகளையும் பாபங்களையும் விண்ணப்பிக்கும்போது காது கொடுத்துக் கேட்கிறாள். 4)ச்ராவயதி – ஜீவர்களுக்காகப் பரிந்து பேசி அவர்களது வேண்டுகோளை பகவான் காது கொடுத்துக் கேட்கும்படி செய்கிறாள். 5) ச்ருணாதி – பெருமானை அடையத் தடங்கலாயிருக்கும் பக்தர்களின் பாபங்களைத் தன் அருளால் நீக்குகிறாள். 6) ஶ்ரீணாதி – இறுதியாய், ஜீவர்களைப் பெருமானோடு சேர்த்து வைக்கிறாள்.



பிராட்டி புருஷகாரம் செய்யாவிடில் ஜீவர்களும் திருந்த மாட்டார்கள். திருமாலும் அருளமாட்டான். சீதை அருகில் இல்லாதபோது தான் இராமன் தவறு செய்தோரை தண்டிப்பான். தாடகை, வாலி, இராவணன் போன்றோரைக் கொன்றபோது சீதை அருகில் இல்லை. அவள் இருந்த போது காக்கை அசுரன் தப்பிப்பிழைத்தான். ஶ்ரீமஹாலக்ஷ்மி நமக்காகச் செய்யும் இன்றியமையாத இத் திருப்பணியை உணர்ந்து அவளையே முதலில் சரணமாகப் பற்றுவோம்.

**2வது திருநாமம் : "அம்ருதோத்பவா"**

அமுதத்தோடு பாற்கடலில் தோன்றியவள். அதாவது, பாற்கடலைக் கடைந்து, மஹாலக்ஷ்மியை அடைவதற்காகவே எம்பெருமான் தேவர்களின் கோரிக்கையை ஏற்றானாம். *''விண்ணவர் அமுதுண, அமுதில் வரும் பெண்ணமுதுண்ட எம்பெருமானே!''* என்று போற்றுகிறார் திருமங்கை ஆழ்வார் (பெரிய திருமொழி 6–1–2).

**3-வது திருநாமம் : "கமலா"**

"க" என்றால் பரம்பொருள், "ம" என்றால் ஜீவன், "லா" என்றால் கொடுத்து வாங்குதல், ஜீவனைப் பரமாத்மாவுக்கு கொடுத்து, பரமனை ஜீவனுக்கு வாங்கிக் கொடுப்பதால் "கமலா" என்று அவளுக்குத் திருநாமம்.

**4-வது திருநாமம் : "சந்த்ர சோபனா"**

"சந்த்ர சோபனா" என்பது நிலவை மிஞ்சும் குளிர்ந்த ஒளியும், பேரெழில் கொஞ்சும் இன்முகமும் கொண்டவள்(அ)"நிலவுக்கே ஒளி ஊட்டுபவள்" என்பது பொருள்.

**5-வது திருநாமம் : "விஷ்ணு பத்நீ"**

அதாவது எங்கும் நிறைந்த இறைவனது அறத்திற்கு உறுதுணையானவள் என்பது இதன் பொருள்.

**6-வது திருநாமம் : "வைஷ்ணவி"**

அதாவது விஷ்ணுவைப் பின் தொடர்பவள்.

**7-வது திருநாமம் : "வராரோஹா"**

இதற்கு "உயர்ந்த இடத்தில் ஏறி அமர்ந்து கொள்பவள்" என்று பொருள். பாற்கடலைக் கடைந்த போது பெருமானின் திருமார்பில் ஏறி அமர்ந்தாள் பிராட்டி. அவளே ருக்மிணிப் பிராட்டியாகக் கண்ணனின் திருத்தேரிலும் ஏறி அவன் கை பிடித்தாள்.

**8-வது திருநாமம்: "ஹரி வல்லபா"**

அதாவது பெருமானின் பேரன்புக்கு இலக்கானவள்.

**9-வது திருநாமம் : "சார்ங்கிணீ"**

அதாவது வில் வீரனின் வீரபத்னி.

**10-வது திருநாமம் : "தேவதேவிகா"**

தேவனான ஶ்ரீராமனின் பெருந்தேவியான சீதை– காஞ்சீபுராதீச்வரியான பெருந்தேவி.

**11-வது திருநாமம் : "மஹாலக்ஷ்மி"**

*''பாக்யாத லக்ஷ்மி பாரம்மா....''* என்று அவளது அருட்பார்வையை வேண்டி, அவளைப் பெருமானுடன் நம் இல்லத்துக்கு அழைத்து வந்து எப்போதும் நம்முடன் இருக்கச் செய்வோம்.

**12-வது திருநாமம் : "லோக சுந்தரி"**

அதாவது உயர் பண்புகள் எனும் தன் அழகால் பெருமானுக்குப் பெருமை சேர்த்து உலகினை உய்விப்பவள்.

(நன்றி : 12 திருநாமங்கள் குறிப்பு : ஶ்ரீவேளுக்குடிக் கிருஷ்ணன் ஸ்வாமி.)

# 108 திவ்விய தேச வைபவம்







# திருச்சிரீவரமங்கலம்

– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு :**

எட்டு ஸ்வயம் வக்த க்ஷேத்ரங்களில் இதுவும் ஒரு க்ஷேத்ரம். (மற்றவை ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்ணம், திருப்பதி–திருமலை, சாளக்ராமம், நைமிசாரண் யம், புஷ்கரம், பத்ரிகாச்ரமம்). யுக ப்ரளயம் முடிந்து திருப்பாற்கடலில் மோனத்துயிலில் இருந்த பகவான், திரும்பவும் ச்ருஷ்டியைத் தொடங்கி னான். பிரம்மாவைப் படைத்து, எல்லா உலகங் களையும் படைக்குமாறு ஆணையிட்டான். ஆனால், பிரம்மாவுக்குக் கர்வம் வந்ததால், இரு அசுரர்க ளான, மதுகைடபர்களை உண்டாக்கி, பிரமனின் கர்வத்தை அழித்து அன்னபக்ஷியின் ரூபமாக மந்திரங்களை பிரம்மாவுக்கு உபதேசித்தான். மது, கைடபர்கள் எதிர்க்கவே, அவர்களை அழித்தான். அவர்கள் சிந்திய ரத்தத்தால் மாசு அடைந்த பூமி தேவி, தோதாத்ரி எனப்படும் இவ்விடத்துக்குவந்து, தாமரைத் தடாகக் கரையில் தவச்சாலை அமைத்துத் தபஸ் செய்ய, பகவான், நேரில் பிரசன்னமாகி, பூமி தேவியின் மாசைப் போக்கித் தன் தேவியாக ஏற்றுக் கொண்டான். ஆதிசேஷனும், காலவர் என்கிற பிராம்மணனும் இங்கு கடுந்தவம் செய்ய, அவர்கள் தவத்துக்கு இரங்கி இங்கு தோதாத்ரியில் நித்யவாஸம் செய்கிறான். ஆதி சேஷன் எப்போதும் பிரியாவரம் கேட்க, அவருக்கு வரம் அருளி அனந்த சயனனாக ஆனார். ப்ருகு மஹ ரிஷி, இங்குள்ள தாமரைப் புஷ்கரணிக் கரையில் தபஸ் செய்து, மஹாலக்ஷ்மியைக் குமாரத்தியாக அடைந்து, இவ்வூர் எம்பெருமானுக்கு விவாஹம் செய்து கொடுத்து, பெரும்பேறு பெற்றார். ஊர்வசி, திலோத்தமை – தேவமாதர்கள் இங்கு வந்து தவம் செய்து, பகவானுக்கு எப்போதும் சாமரம் வீசும் கைங்கர்யத்தைப் பெற்றனர். விகநஸ மகரிஷி, கருடனுக்கு, இந்த வானமாமலையில் மந்த் ரோபதேசம் செய்தார். உரோமசர் என்கிற ரிஷி தபஸ் செய்து, எம்பெருமானை இங்கேயே நிலையாக எழுந்தருளச் செய்தார் என்றும் இதனால் உரோமச க்ஷேத்ரம் என்று இது சொல்லப்படுகிறது என்றும் கூறுவர்.

திருப்பதி–திருமலையில் ஸ்ரீவரமங்கை என்று திருநாமத்தோடு எழுந்தருளி இருந்த தாயார், வானமாமலை ஜீயரின் கனவில் தோன்றி, தன்னை, வானமாமலையில் எழுந்தருளச் செய் என்று கட்டளையிட்டதாகவும், அப்படியே எழுந்தருளப் பட்ட தாயார் என்றும் கூறுவர்.

சிந்து தேசத்து அரசன், காட்டில் வேட்டை யாடும் போது, ஒரு புள்ளிமான், அரசனின்

இலக்குக்கு ஆளாகாமல், வெகு தொலைவு அரசனை இழுத்துச் சென்றதாகவும், அரசன் பசி, களைப்பு மிகுதியால், அருகே இருந்த குசானன் என்கிற ரிஷி யின் பர்ண சாலையில், பூஜைக்கு வைத்திருந்த தீர்த்தம், பிரசாதம் இவைகளை எடுத்துச் சாப்பிட்ட தாகவும், அவரால் நாயாக ஆகுமாறு சபிக்கப்பட்டு நாயாக அங்குமிங்கும் தேசம் தேசமாக அலைந்து, ஜாலவித்தை செய்பவனுடன் சேர்ந்து இவ்வூர் வந்து, சேற்றுத் தாமரைப் புஷ்கரணியில் நீராடி சாபம் தீர்ந்து, மறுபடியும் அரசனின் உருவத்தைப் பெற்றார் என்றும், அப்படிப்பட்ட புனித தலம் என்றும் கூறுவர்.

**சிறப்புகள்**

நம்மாழ்வார், எம்பெருமானின் ஸ்ரீசடாரியில் தனது வடிவத்தோடு எழுந்தருளி இருக்கிறார். நம்மாழ்வாருக்குத் தனி சன்னிதி இல்லை. மூலவ ருக்குச் செய்யப்படும் எண்ணெய்க் காப்புத் திருமஞ்ச னம் மிகச் சிறப்பு மிக்கது. இந்த எண்ணெய், ஒரு கிணற்றில் சேமிக்கப்படுகிறது. இது, அருந்துபவர்க ளுக்கு நோய் தீர்க்கும் அருமருந்தாக இன்றும் விளங் குகிறது. ஸ்ரீமணவாள மாமுனிகளால் நிலைப் படுத்தப்பட்ட அஷ்டதிக்கஜங்களில் ஒருவர் – வானமாமலை ஜீயராகி, வானமாமலை மடம் உருவாகி, ஜீயரின் ஆட்சியில் உள்ள ஸ்தலம். ஐப்பசி மூலம் திருநக்ஷத்திரத்தில் ஸ்ரீமணவாள மாமுனிகளின் மோதிரத்தைத் தான் அணிந்து கொண்டு, ஜீயர் ஸ்வாமிகள் பக்தர்களுக்கு தீர்த்தம் சாதிப்பது இன்றும் தொடர்கிறது.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | தோதாத்ரிநாதன் கிழக்கு நோக்கியமர்ந்த திருக்கோலம். |
| உத்ஸவர் | : | தெய்வநாயகன், |
| தாயார் | : | சிரீவரமங்கைத் தாயார். |
| தீர்த்தம் | : | இந்திர தீர்த்தம், சேற்றுத் தாமரைத் தீர்த்தம். |
| பிரத்யக்ஷம் | : | பிரம்மா, இந்திரன், உரோமச ரிஷி, ப்ருகு, மார்க்கண்டேயர், கருடன், ஊர்வசி, திலோத் தமை, சிந்து நாட்டு அரசன். |
| மங்களாசாஸனம் | : | நம்மாழ்வார். |

**விசேஷம் :**

ஸ்ரீநம்மாழ்வார், இந்த திவ்ய தேசத்து எம்பெருமானைப் பாடும் போது இந்தத் திவ்யதேசத்துப் பாசுரங்களைப் பாட வல்லார், பரமபதத்தில் நிலையாக இருக்கும் நித்யர்களுக்கு, ஆராதஅமுதமாய் வரவேற்கப் படுவர்... என்கிறார்.

**த்யானச்லோகம் :**

*"யஸ்மிந் அம்புஜலோசநோ மரபதி ப்ரத்யக்ஷ*
*திவ்யாக்ருதி:*
*பத்மாக்ஷ்யா ஸஹபூர்வ ஸாகர முகத் சைந்த்ரம்*
*ஸரோ நிர்மலம் ।*
*பத்மாகார விமாந வாஸரஸிகம் தேஜோமயம்*
*பாஸ்வரம்*
*நித்யம் ஸ்ரீவரமங்கலாக்ய நகரம் வந்தா மஹே*
*சாச்வதம்॥"*

**பாசுரம்**

*"நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்*
*ஆகிலும் இனி உன்னை விட்டு, ஒன்றும்*

## சாஸ்த்திர நீதிகள்–87

*அம்ருதம் சத் குணா பார்யா அம்ருதம் பால பாஷிதம் ।*
*அம்ருதம் ராஜ சன்மானம் அம்ருதம் மான போஜனம் ॥*

1. நல்ல குணம் உடைய மனைவி அமைந்தால் அம்ருதமாம்!
2. வயதான காலத்தில் பேரன், பேத்திகளுடன் வாழ்வதும் அமிர்தமாகும்.
3. படிப்புக்குத் தகுந்த ராஜா கொடுக்கும் மரியாதை போன்ற புகழும், அமிர்தமாகிறது.
4. கௌரவமாக வாழ்ந்து போஜனம் செய்வதும் அமிர்தம் எனப்படும்.

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.



# ஸ்ரீகோதண்ட ராமாலயம், திருப்பதி



**ஆலய அமைப்பு :**

சுற்றிலும் மதில் சுவர்களோடு கூடிய, மேற்கு திசை நோக்கிய இந்த ஆலய நுழைவுவாயிலை ஏழு கலசங்களுடன் கூடிய ஐந்து நிலை ராஜ கோபுரம் அலங்கரிக்கிறது. அடுத்துள்ள மஹாமண்டபம், முக மண்டபங்களில் ஸ்ரீமஹாவிஷ்ணு, கிருஷ்ணர், வேணுகோபாலர், நரசிம்மர், பரசுராமர், லட்சுமி நாராயணர், யோக நரசிம்மர், கோவர்த்தன கிரிதாரி ஆகியோரின் சிற்பங்கள் நுணுக்கமாக வடிக்கப்பட்டுள்ளன. மஹாமண்டபத்தின் மேற்குப் பக்கம் கருடன் சன்னதி உள்ளது.



இரண்டு தள, த்விதள விமானத்துடன் கூடிய கருவறை நுழைவு வாயிலில் துவாரபாலர்கள் காணப்படுகின்றனர். கருவறையில் ஸ்ரீராமர் சுமார் ஆறு அடி உயரத்தில் வலப்புறம் ஸ்ரீசீதாதேவியும், இடப்புறம் லக்ஷ்மணரோடு கம்பீரமாகக் காட்சி தருகிறார். அழகான உற்சவ விக்ரகங்களும் கருவறையில் வைக்கப்பட்டுள்ளன. உற்சவர் – ஸ்ரீராம பிரான் த்விபங்க (இரண்டு வளைவுகள்) நிலையில் வலது திருக்கரத்தில் அம்பும், இடது திருக்கரத்தில் வில்லும் ஏந்தியுள்ளார்.

*ஆற்றகின்றிலேன் அரவின் அணை அம்மானே!*
*சேற்றுத்தாமரை செந்நெல் ஊடுமலர் சிரீவர மங்கல நகர்*
*வீற்றிருந்த எந்தாய்! உனக்கு மிகையில்லேன் அங்கே.”*

– நம்மாழ்வார்

*“வெரீஇயுறச்சாதகர் எய் தக்கலர்களானோர் மெலிந்து*
*உடலின் ஆவிவிட அரற்றிச் சுற்றத்*
*தரீம முறவே அந்தத் தனுவைச் சேர்க்கச் சான்றவரை*
*இகழ்ந்தவர் என்று அனலருங்கண்ணர்*
*ஈய மொடு செம்பு உருக்கி நாவினுக்கு உய்க்கும் நரகம்*
*எல்லாம் அழிந்திடு நன்மாச் சோதி*
*சிரீவரமங்கல நகரில் திருவினோடும் சிறந்திருந்து*
*அமரும் தேவர் திருத்தாள் வாழி”*

– வரதராஜ பாகவதம்

*“வானோர் முதலா, மரம் அளவா, எப்பிறப்பும்*
*ஆனேற்கு அவதி இடல் ஆகாதோ - தேனேயும்*
*பூவரமங்கை, புவிமங்கை நாயகனே!*
*சீவரமங்கை அரசே!”*

– பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்

**நாமாக்கள்**

511. *ஓம் ஜய: நம:*
(அடியார்களிடம் தோற்றவனே)

*ஓம் க்ஷீரதாராயை: நம:*
(தம்மையும், பெருமாளையும் ஆராதிக்கும் யாகாதிகளுக்குத் தேவையான பாலை அதிகமாகத் தருபவளே)

512. *ஓம் ஸத்யஸந்த: நம:*
(பக்தர்களுக்கு அளித்த ப்ரதிக்ஞை தவறாதவனே)
*ஓம் க்ருதமய்யை: நம:*
(இப்படியே நெய்யையும் தருபவளே)

513. *ஓம் தாஸார்ஹ: நம:*
(யாதவ குலத்தில் கண்ணனாக அவதரித்தவனே)
*ஓம் ஜுஹ்வத்யை: நம:*
(பால், நெய் இவைகளைக் கொண்டு ஹோமம் செய்விப்பவளே)

514. *ஓம் ஸாத்வதாம்பதி: நம:*
(பாகவதர்களின் தலைவனே)
*ஓம் யக்ஞதக்ஷிணாயை: நம:*
(யக்ஞதேவதையான பகவானுக்கு உகப்பாக தக்ஷிணாதானம் செய்ய உபகரிப்பவளே)

515. *ஓம் ஜீவ: நம:*
(பாகவதர்கள் தனக்கு சேவை செய்ய அவர்களைக் காப்பவனே)

ஓம் யோகநித்ராயை: நம:

(உறங்குவான்போல யோகு செய்பவளே)

516. ஓம் விநயிதா: நம:

(பாகவதர்களை, ராஜாக்களைப்போல ரக்ஷிப்பவனே)

ஓம் யோகரதாயை: நம:

(பகவானுடன், ஜீவன்களைச் சேர்ப்பதில் ஈடுபாடு உடையவளே)

517. ஓம் சாக்ஷீ: நம:

(பாகவதர்களின் நடத்தைகளைக் கவனிப்பவனே)

ஓம் ப்ருஹ்மசர்யாயை நம:

(அறிவில்லா ஜீவனை ப்ரம்ம ஞானத்தால் பெரியவனாகச் செய்யும் வ்யாபாரங்களைச் செய்பவளே)

518. ஓம் முகுந்த: நம:

(முக்தியை அளிப்பவனே)

ஓம் துரத்ய யாயை: நம:

(பகவான் உட்பட, எவரையும் தம்மை மீற இயலாதபடி உயர்ந்து இருப்பவளே)

519. ஓம் அமிதவிக்ரம: நம:

(அளவிலா பராக்ரமம் உள்ளவரே)

ஓம் ஸிம்ஹபிஞ்சாயை: நம:

(சிங்கத்துக்குப் பிடரி மயிர் போல, பகவானுக்குப் பெருமை அளிப்பவளே)

520. ஓம் அம்போநிதி: நம:

(பாதாளத்தில் கூர்மமாக நின்று உலகைத் தாங்குபவனே)

ஓம் மஹாதுர்காயை நம:

(தன் அநுக்ரஹத்தைப் பெறாதவர் எவ்வளவு பெரியவரானாலும் அவர்களால் அடைய முடியாது பெருமை உள்ளவளே)

ஸ்ரீமதே ஸ்ரேஷ்ட வரதேவி சிரிவரமங்கை வல்லீ நாயிகா ஸஹிதாய ஸ்ரீதோத்ரிநாத பரப்ரஹ்மணே நம:

குறிப்பு : திருநெல்வேலி – நாகர்கோயில் செல்லும் சாலையில் சுமார் 30 கி.மீ. தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

திவ்ய தேச வைபவம் வளரும்...

## ஸ்ரீகோதண்ட ராமாலயம், திருப்பதி

### உற்சவங்கள் :

திருப்பதி ஸ்ரீகோதண்டராமர் ஆலயத்தில் பங்குனி மாதம் வருடாந்திர பிரம்மோற்சவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுவதோடு, ஸ்ரீராமநவமி, யுகாதி போன்ற உற்சவங்களும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. ஸ்ரீராம நவமிக்கு அடுத்த நாள் நடைபெறும் ஸ்ரீசீதாராம திருக்கல்யாணமும், பட்டாபிஷேக உற்சவமும் காண்பதற்கு மிக விமரிசையாக நடைபெறும். சனிக்கிழமைதோறும் ஊஞ்சல் உற்சவம் நடைபெறும். இராமச்சந்திரகுண்டா என்ற தெப்பக்குளத்தின் கிழக்குக் கரையில் உள்ள மண்டபத்திற்கு தனுர் மாதம் எனப்படும் மார்கழி மாதத்தின் கடைசி ஏழு நாட்கள் திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயத்திலிருந்து ஸ்ரீஆண்டாள் எனும் கோதை நாச்சியார் எழுந்தருளி சேவை சாதிக்கிறார். இவ்வுற்சவத்திற்கு முன்னர் திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாள் எழுந்தருளுவது குறிப்பிடத்தக்கது.

### ஆலய முகவரியும் திறந்திருக்கும் நேரமும் :

திருப்பதி ஸ்ரீகோதண்டராமஸ்வாமி ஆலயம் அதி காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை நடை திறந் திருக்கும். ஸ்ரீகோதண்ட ராமர் ஆலயத்திற்கு எதிரில் பிற்காலத்தில் கட்டப்பட்ட அனுமன் ஆலயமும் மிகவும் பிரசித்தியானது. திருப்பதி ரயில் நிலையத்திலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.





அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின்
அருளிச்செயல்–12

# கூறைப் புடவையின் முக்கியத்துவம்

பேராசிரியர்
எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

திருமாங்கல்ய தாரணத்திற்கு முன் உடுத்துகின்ற புடவைக்கு கூறைப்புடவை என்று பெயர். (சிலர் கூரை புடவை என்று எழுதி ஒரு வீட்டுக்கு பாதுகாப்பாக கூரை இருப்பது போல பெண்ணிற்கு இப்புடவை இருப்பதால் கூரை புடவை என்று கூறுவது சரியல்ல.)

கூறை என்பதற்கு புத்தாடை என்று ஒரு பொருள். திருமணத் திற்கான ஆடை என்று ஒரு பொருள். பெரியாழ்வார் இந்த கூறைப் புடவை பற்றி ஒரு பாசுரத்தில் மிக அழகாகப் பாடுகின் றார். பெரியாழ்வார் திருமகள் ஆண்டாள். எதையும் கொஞ்சம் முன்னாலேயே செய்து பார்த்துவிடும் சுபாவம் உள்ளவள்.

எம்பெருமானுக்கு மாலை சாற்றுவதற்கு முன், தான் மாலை சார்த்தி அழகு பார்த்துக் கொண்டாள். அதைத்தான் பகவானும் விரும்பினான். இதனாலேயே அவளுக்குச் "சூடிக் கொடுத்த சுடர்க் கொடி" என்ற திருநாமம் ஏற்பட்டது. கண்ணனெம் பெருமானையே கட்டிக் கொள்ள வேண்டும் என்று தேர்ந்தெடுத்த அவள், அந்தத் திருநாளுக்கு முன், அந்த எம்பெருமானாகிய காதலனை நினைத்து படுகின்ற அவஸ்தையை ஒரு அழகான பாசுரத்தில் பதிவு செய்கிறார்.

விரும்பிய கணவனை அடைய நினைக்கும் பெண்கள், திருமண நாளுக்கு முன், என்ன மன நிலையில் இருப்பார்கள் என்பதை இப்பாசுரம் தெரிவிக்கிறது.

*காறை பூணும் கண்ணாடி காணும் தன் கையில் வளை குலுக்கும்*
*கூறை உடுக்கும் அயர்க்கும் தன் கொவ்வைச் செவ்வாய் திருத்தும்*
*தேறித் தேறி நின்று ஆயிரம் பேர்த் தேவன் திறம் பிதற்றும்*
*மாறில் மா மணிவண்ணன் மேல் இவள் மால் உறுகின்றாளே*

– பெரியாழ்வார் திருமொழி.

வாங்கி வைத்திருக்கும் ஆபரணங் களை எல்லாம் மாற்றி மாற்றி போட்டுக் கொள்கிறாள். இது தனக்கு அழகாக இருக்கிறதா இல்லையா என்று கண் ணாடியில் பார்த்துக் கொள்கிறாள். கை களில் நிறைய வளையல்களை அணிந்து கொண்டு குலுக்கி குலுக்கி பார்த்து அந்த சத்தத்தைக் கேட்டு சிரிக் கிறாள்.

திருமணத்திற்கு என்று வாங்கி வைத்திருக்கக்கூடிய புத்தாடைகளை எடுத்து அணிந்து கொண்டு அழகு பார்க்கிறாள். (கூறை உடுக்கும்)

தன்னுடைய சிவந்த வாயை நிறம் இட்டு திருத்திக் கொள்கிறாள். பிறகு மெல்ல அவனை நினைத்து அவன் பெயரைச் சொல்லி பிதற்றுகிறாள்.

இந்த பிதற்றலுக்குக் காரணமாக இருக்கும் பொருள்களின் ஒன்று கூறைப்புடவை. கூறைப்புடவை பெரும் பாலும் பட்டுப்புடவையாக இருக்க வேண்டும் என்று கருதுகிறோம். உண்மையில் பட்டுப்புடவை அவசிய மில்லை. சாதாரண நூல் புடவை கூட போதும்.

இந்தக் கூறைப் புடவை கொடுப்பதற்கு முன்னால் மணப்பெண்ணுக்கு தலையில் தர்ப்ப வளையத்தை வைத்து, நுகத்தடி துளையில் ஒரு தங்க காசு வைத்து மந்திரங்களால் அபிஷேகம் செய்கின்ற முறை உண்டு. ஆனால் இதை எல்லோரும் பின்பற்றுவதில்லை. இந்த நுகத்தடி ஸ்நானம் முடிந்தவுடன் தான் கூறைப் புடவை உடுத்துதல் என்கிற நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

அந்த கூறைப் புடவையை வேத மந்திரங்களைச் சொல்லி ஆசீர்வாதம் செய்வார்கள். அந்தப் புடவையையும் திருமாங்கல்யத்தையும் பெரியவர்களும் சுமங்கலிகளும் கையால் தொட்டு ஆசீர்வாதம் செய்யும்படி எல்லோருக்கும் காண்பிப்பார்கள். ஆண்டாள் நாச்சியார் ஒரு பாசுரத்தில் இதை அழகாகச் சொல்கிறாள்.

*"இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாம் எல்லாம்*
*வந்திருந்து என்னை மகட் பேசி மந்திரித்து*
*மந்திரக் கோடி உடுத்தி மணமாலை*
*அந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழி நான்"*

இதில் இரண்டு செய்திகள் உண்டு. இந்த கூறைப்புடவைக்கு மந்திரக் கோடி என்று பெயர். இதனை மணமகனின் உடன் பிறந்தவள் மணமகளுக்குத் தந்து கட்டச் செய்து அழைத்து வர வேண்டும். அந்தரி என்பவள் கிருஷ்ணனுடைய தங்கை என்று சொல்வார்கள். அவள் வந்து ஆண்டாளுக்கு கட்டி விட்டாளாம்.



இந்த கூறைப்புடவையைக் கொடுக்கும் போது சொல்ல வேண்டிய மந்திரம் ஒன்று உண்டு. அது இந்திர தேவனை நோக்கி சொல்லப்படுகிறது. அதைத்தான் ஆண்டாளும், இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாம் எல்லாம் என்று தன்னுடைய பாசுரத்தில் சொன்னாள். "பரித்வாகிர்" என்று ஆரம்பிக்கும் அந்த மந்திரத்தின் பொருள் இதுதான்.

"இந்திர தேவனே! இந்த மணப்பெண் உடுத்தியிருக்கும் புதியதான இந்த புடவை, எப்படி அவளை சுற்றி பாதுகாப்பாக இருக்கிறதோ, அப்படியே உன்னை சுற்றி இப்போது எனது இந்த வேண்டுகோள்களும் நிற்க வேண்டும். நீ பெரியவர்களை கௌரவிப்பவன். அப்படிப்பட்ட உனக்கு ஏற்றவையாக எனது இந்த மந்திரம் இருக்கட்டும்.

இதற்குப் பிறகு மௌஞ்சி தாரணம் என்று சொல்லப்படுகின்ற தர்ப்பையினால் முறுக்கப்பட்ட கயிற்றை, மணப்பெண்ணின் இடுப்பில் சுற்றி கட்டி விடும் வழக்கம் உண்டு. இந்த மௌஞ்சி தாரணம் ஆன பிறகு தான் மணப்பெண்ணை அக்னியின் அருகே அழைத்துச் செல்ல வேண்டும்.

அப்பொழுது ஒரு அருமையான மந்திரம் ஒன்று உண்டு. *"பூஷா த் வேதோ நயது ஹஸ்தக்"* என்று தொடங்குகின்ற அந்த மந்திரத்தை மணமகன் மணப்பெண்ணை நோக்கி சொல்கின்றான். அதில் ஒரு அருமையான தகவல் இருக்கிறது அந்த மந்திரத்தின் பொருள் இதுதான்.

"ஏ! மணப்பெண்ணே, இப்போது அக்னி அருகே சென்று நாம் திருமணம் செய்து கொண்டபின்,



**ஆதிசங்கரர் அருளிய**
**பஜகோவிந்தம்-23**

*ரத்யா கர்ப்பட விரசித கந்த: புண்யா*
*புண்ய விவர்ஜித பந்த:।*
*யோகீ யோக நியோஜித சித்த: ரமதே*
*பாலோந் மத்தவ தேவ।।*

**யோகத்தில் முழுதாக மனத்தால் ஐக்கியமாகி விட்ட ஒருவன் "யோகியாகி விடுகிறான்". அத்தகைய யோகி, தெருவில் கிடைக்கும் கந்தல் துணியைக் கூட கட்டி இருப்பான். இத்தகைய யோகி, புண்யம் பாவம் இரண்டுமே இல்லாததொரு (கனியான) வழியை பின்பற்றுபவனாகவே தென்படுவான். பித்தனைப் போலவும், குழந்தையைப் போலவும் தனக்குத் தானே மகிழ்ச்சியில் திளைப்பான். (முழுவதுமாக யோகத்தில் ஈடுபட்டு நிற்கும் ஆத்மாவின் மன நிலை எப்படி இருக்கும் என்பதை விளக்குகிறார் ஆசார்யர்)**

**- திரு. சீதாராமன், சென்னை.**

என்னுடைய இல்லத்திற்கு பூஷா என்கிற தேவதை அழைத்து வருவார். அஸ்வினி தேவதைகள் தங்கள் ரதத்தின் மூலமாக உன்னை அழைத்து வருவார்கள்.

அங்கு எனது இல்லத்திற்கு நீ அரசியாக தன்னிச்சையாக செயல்படுபவளாக எப்படி இருப் பாயோ, அப்படி இருக்க வேண்டும்.

அங்கு நாம் செய்ய வேண்டிய இல்லற தர்மத்தைப் பற்றியும், அந்த தர்மத்தை காப்பாற்று கின்ற முறையைப் பற்றியும் ஆலோசனைகள் நடத்துவோம்."

திருமண மந்திரங்களை, அந்த மந்திரங்கள் சொல்லும் நுட்பமான அர்த்தங்களைப் புரியாமல் பலரும் பேசுகிறார்கள்.

பெண்ணை அடிமைப்படுத்தும் மந்திரங்கள் தான் திருமண மந்திரங்கள் என்று அந்த மந்திரங் களை முழுமையாக அறியாமல் சொல்பவர்கள் உண்டு.

ஆனால் இந்த மந்திரத்தின் பொருளை அறிந்து கொண்டால், ஒரு பெண்ணானவள் இல்லத்தின் அரசியாக தன்னிச்சையாகச் செயல்படும் தன்மை உள்ளவளாக இருப்பதற்கு எந்த தடையும் இல்லை என்று கூறுவது தெரியும்.

விவாக மந்திரங்களை தமிழில் அழகாக கூறிய பெரியாழ்வார், பெண் பிள்ளையான கோதைக்கு ஆண்டாள் என்கிற திருநாமம் இட்டார். ஆண்டாள் என்று சொன்னால் கண்ணனை ஆண்டாள். கண்ணனு டைய இல்லத்தை ஆண்டாள் என்று பொருள்.

இந்த மந்திரத்தை நோக்கும் போது இந்த உரிமையை ஆண்டாள் எடுத்துக் கொண்டாள் என்று தானே ஆகிறது. மனைவியை இல்லாள் என்று அழைப்பார் கள். கணவனை அப்படி அழைத்தால் பொருள் விபரீதமாகும். (இல்லான்–இல்லாதவன்). இப்போது கூறைப் புடவை கட்டிக் கொண்டு அக்னிக்கு சென்றாயிற்று.

இதற்குப் பிறகு மணப்பெண்ணை அபிமந்த் ரணம் செய்யும் சில மந்திரங்கள் ஆபஸ்தம்ப சூத்தி ரத்தில் உண்டு. இந்த மந்திரங்களைத் தான் மிகவும் சர்ச்சைக்குரிய மந்திரங்களாக பலரும் விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மந்திரங்களின் பொருளை நுட்பமாக ஆராய்ந்தால், அது மிக அழ கான மந்திரம் என்பது நமக்குத் தெரியவரும்.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்,
திருப்பதி

## திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

**ஸ்வாமி புஷ்கரணி :**

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலை யான் சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் தனது உடல் சுத்தத் துடன் மனசுத்தியும் ஆகிறது.

**ஆகாஸகங்கை :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையி லிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**பாபவினாசம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையி லிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**வைகுண்ட தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தும்புரு தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையி லிருந்து 16 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தி.தி.தே. வனத்தோட்டம் :**

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்தில் வனத்தோட்டம் வளர்க் கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

**புவியியல் வளைவு (சிலாதோரணம்) :**

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலாதோரணம் ஆலயத்தின் வடமேற்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது.

**நாதநீராஜன மண்டபம் :**

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்டபத்தில் சொற்பொழிவுகள், ஹரிகதை கள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சி கள் நடத்தப்படுகின்றன.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :**

அபூர்வமான புராண பொருட்களோடு மட்டு மல்லாமல் சித்திர, சிலை கைவண்ண கலை வேலைப்பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியூஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானை தியானித்து மனதில் ஏற்பட்ட மனச்சுமைகளை குறைத்துக் கொள்ளலாம்.

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

ஸ்ரீரங்க நாச்சியார் வாழித்திருநாமம் தொடர்ச்சி...

(மங்கையர்கள் திலதமென வந்த செல்வி) – திலதம் – திலகம் – நெற்றிப்பொட்டு, ஆபரணம். மங்கையர்களுக்கு ஆபரணம் என்று சிறப்பாகத் தோன்ற வந்த லக்ஷ்மி. செல்வி – தலைவி, லக்ஷ்மி, செல்வமுள்ளவள், புதல்வி. திலகம் – சிறந்தது என்ற பொருளில் பிராட்டியானவள் கருணைக்கோர் இருப்பிடமானவள். ஞானம் முதலான ஆறு குணங்கள் நிரம்பப்பெற்றவள், மேலான பிரகிருதி யாகச் சொல்லப்படுபவள் மற்றும் எம்பெருமானின் மேலான ஒரு சக்தி என்று ஸநத்குமார ஸம்ஹிதை எண் 109 அருளுவது காணலாம்.

(எங்கள் எழில் சேனைமன்னர்க்கு இதமுரைத் தாள்) எல்லா உலகங்களையும் நெறிபட நிர்வகிக்கும் கடமை எம்பெருமானுடையதானாலும் அதனை சேனை முதலியார் ஏற்றுக்கொண்டு தமது திருவிரல் முத்திரையினாலேயே உலகங்களை அடக்கி ஆளு பவராகையாலே *"எழில் சேனை மன்னர்"* என்றபடி. திருவிரல் முத்திரையை இன்றும் திருவரங்கத்தில் சேனை மன்னர் திருக்கோலங்களில் காணலாம். பிரம்மோற்சவ திருநாள்களில், திருமுளையின் போது தாயார் ஸந்நிதிக்கு சேனை முதலியார் மண் எடுக்க எழுந்தருளுவர்.

*"வானவர் வானவர் கோன்"* (திருவா. 3.3.2) என்று ஆழ்வார் அருளியதற்கு ஏற்ப பரமபதவாஸிகளுக்குத் தலைவர் என்பர் வாதிகேசரி சீயர். "ஹிதம்" தமிழில் "இதம்" ஆயிற்று. நன்மை என்று பொருள். நன்மை யாவது எம்பெருமானே உபாயம். இதனை துவய மந்திரத்தின் முதல் வாக்யம் உணர்த்துகிறது. குருபரம்பரா விவரணத்தில் அருளியபடியே ஹரிக்கு எப்போதும் இனியவரான சேனை மன்னருக்குத் தாபம் புண்ட்ரம் முதலான ஸம்ஸ்காரங்களை முன் னிட்டுக் கொண்டு மூலமந்த்ரம், துவயம் முதலான இதத்தைப் பெரிய பிராட்டியார் உரைத்தது காண லாம்.

மேலும், *"லக்ஷ்மீ நாத ஸமாரம்பாம்"* என்ற தனியனுக்கு உரை வழங்கிய பிள்ளைலோகம் சீயர், "ஸமாரம்பாம்" என்று இவர்கள் தொடக்கமாக குருபரம்பரையைச் சொல்லுகையாலே, ஸ்ரீவிஷ்வக் சேந ஸம்ஹிதையிலே பகவானாலே ப்ரபத்தி உபதேசம் பண்ணப்பட்டதாகச் சொல்லப்படுமவர் என்றும், பூவளரும் திருமகளாலே அருள் பெற்று



அத்தாலே *''ஸ்ரீமதி விஷ்வக்ஸேநே''* என்னும்படி கைங்கர்ய ஸ்ரீயையுடைய சேனை முதலியார் என்பர். எனவே சேனை முதலியாருக்கு இதம் உரைத்தவள் பெரிய பிராட்டியார் என்றதாயிற்று.

(இருபத்தஞ்சுட்பொருள் மால் இயம்புமவள்) – மூன்று ரகசியங்களுள் துவயம் என்பது *''ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே| ஸ்ரீமதே நாராயணாய நம:||''* என்று இரண்டு வாக்யமாய், இருபத்தைந்து எழுத்துக்கள் கொண்டதாகும். அதன் உட்பொருளாவது "திருமகளோடு கூடிய நாராயண னுடைய திருவடிகளைச் சரணமாகப் பற்றுகிறேன்" என்ற முதல் வாக்ய பொருளுக்குச் சேர ஸ்ரீமந் நாராயணனே உபாயமாவான் என்பதாகும். இதனை சேனைமுதலியாருக்கு பெருமையுடன் உபதேசம் செய்தாள் என்றபடி. மால் – இங்கு பெருமை என்று பொருள்.

(செங்கமலச்செய்ய அரங்கம் செழிக்க வந்தாள்) செங்கமலம் – செந்தாமரை, செய்ய – சிவப்பு. தாமரைக்கு சிவப்பானது *''திருமுகமாய்ச் செங்கமலம்''* (பெரியா. திரு.4.8.3) என்று பெரியாழ்வார் அருளி யதற்கு ஏற்ப பெரிய பெருமாளுடைய திருமுகத் துக்குப் போலியாய் இருக்கிறது என்று மாமுனிகள் உரைப்பர். மேலும் *''புதுநாண்மலர்க் கமல எம்பெருமான்''* (பெரியா.திரு.4.9.4) என்பதற்கு ஏற்ப அப்போது அலர்ந்த செவ்வித் தாமரைப்பூவானது உலகுக்குக் காரணமான ஸர்வேச்வரனுடைய விரும்பத்தக்கதான திருவயிற்றில் உள்ள தாமரைக்கு ஒப்பானது என்பர் மாமுனிகள். திருவரங்கமானது *''உரம் பெற்ற மலர்க்கமலம் உலகளந்த சேவடிபோல் உயர்ந்து காட்ட''* (பெரிய.திரு.4.9.8) என்பதற்குச் சேர சேற்றுவாய்ப்பாலே உரம் பெற்றிருக்கிற தாமரைப் பூவானது திருவுலகளந்தருளினபோது மேலே எடுத்த திருவடிகளைப் போலே கிளர வளர்ந்து பிரகாசிக் கிறது என்று மாமுனிகள் சுவைபட உரைப்பர். அது மட்டுமின்றி அன்னமானது புருஷ அன்னத்தோடே சிவந்த தாமரைப் பூவின் மேலே ஏறி இருந்து அசைத்து ஊசலாடுகின்றன என்பதற்குச் சேர *''சேவலொடு பெடை அன்னம் செம்கமலமலர் ஏறி ஊசல் ஆடி''* (பெரியா.திரு.4.9.9) என்கிறார் பெரியாழ்வார். இத்தகைய செழுமை தங்கிய அரங்கத்தில் செரு வாளும் புள்ளாளனாய், மண்ணாளனாய், கொற்ற வாளையுடையவனாய், நான்கு வேதங்களையும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# திருப்பதியில் தரிசிக்க வேண்டிய ஆலயங்கள்

**ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில் :**

இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமாநு ஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சியளிக் கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்தசாரதி மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக் கோயிலில் இடம் பெற்றுள்ளனர்.

☎ *0877–2264592.*

**ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் :**

இக்கோயில் திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக் கோயில் ஸ்ரீராமர் லக்ஷமணர் மற்றும் சீதை இலங்கையிலிருந்து திரும்பி வரும்போது திருப்பதிக்கு வந்ததின் நினைவாக எழுப்பப்பட்டதாகும். ☎ *0877–2264584.*

**ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி கோயில் :**

இங்கு அமைந்திருக்கும் சிவன் கோயில் திருப்பதி நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கபிலமஹரிஷி யால் இங்குள்ள சிவலிங்கம் தோற்று விக்கப்பட்டதால் இந்த மூலவருக்கு கபிலேஸ்வரர் என்று பெயர் வந்தது. இங்கு உள்ள தீர்த்தமும் கபிலதீர்த்தம் என்றே அழைக்கப் படுகிறது. ☎ *0877– 2264587.*

**அலர்மேல்மங்காபுரம் (திருச்சானூர்) :**

இது திருப்பதிக்கு 5 கி.மீ. தொலை வில் அமைந்துள்ளது. இதுவும் பழமை வாய்ந்த புனிதத் திருத்தலமாகும். திருவேங்கடவனின் தேவியான ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவராக இக் கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

☎ *0877–2264586.*

ஆளுமவனாய், கொடையாளனாய், இரவு பகலாகிய காலங்களுக்குத் தலைவனாய் இருக்கும் பெரிய பெருமாள் பெரிய பிராட்டியாரை திவ்ய மஹிஷியாக உடையவர் என்றபடி.

மேலும், பட்டர் *''ஸ்ரீரங்க மங்கள விஜ்ரும்பண வைஜயந்தி''* (ஸ்ரீகுண.ர.33) என்று அருளுபவர். அதாவது ஸ்ரீரங்கத்தில் நன்மைகளை செழிப்புறச்செய்யும் கொடிபோன்றவள் பிராட்டி என்றபடி.

(அரங்கம் செழிக்க வந்தாள்) பட்டர் ஸ்ரீகுணரத்ன கோசத்தில் (23) *''ஸ்ரீரங்கேச்வர கேஹலக்ஷ்மி''* என்று அருளியதற்கு ஏற்ப பிராட்டியானவள் ஸ்ரீரங்கநாதன் கோயிலை அழகுபடுத்துபவள் என்றது காண்க. இல்லாள் இன்றேல் இல்லம் வெறியாடுமாதலின் "கேஹ லக்ஷ்மி" என்று விளித்ததாகக் கூறுவர் உரையாசிரியர்.

(சீரங்க நாயகியார் திருவடிகள்) – பட்டர் ஸ்ரீகுணரத்ன கோசத்தில் பிராட்டியின் திருவடிகளைப் பல சுலோகங்







களில் பலபடியாக அநுபவிக்கிறார் – *''மாலதீம்ருதுபதம்''* (53) என்கிறபடியே ஜாதிப்பூ போல மெல்லிய திருவடி என்றும், வேதாந்தங்கள் பேசும் சிறப்பை உடையது பிராட்டியின் திருவடிகள் என்றும் உரைப்பர்.

மேலும், பிராட்டி திருவடிகள் துகைத்தாலும் எம்பெருமான் வைஜயந்தி என்னும் வனமாலை வாடுவதில்லையாம். அப்படிப்பட்ட திருவடிகள். அடிக்கடி பனிநீர் தெளித்தாற்போலே தேனே மலரும் திருப்பாதத்தால் துகைக்கத் துகைக்கப் புதுமை பெற்று மேலும் சோபிக்கின்றனவாம் என்றும் சுவைபட உரைப்பர்.

தாமரையில் இருப்பவளாகையால் அதன் துகள் பாதத்தின் அடித்தலத்தை உறுத்தக் கூடியதாகவே இருக்கும் தாமரை இதழின் ப்ரகாரம் மணம் மென்மை முதலியன.

அவற்றைப் பிராட்டியின் இணை அடிகள் உடையனவாயிருக்கின்றன. தாமரை இதழை ஒத்த இணையடி என்றவாறு. சேர்த்தி அழகு கருதி "பாதயுக்மம்" என்கிறார். பிராட்டி திருவடியின் இருப்பைச் சொல்லும்போது *''ஏகம் பாதாம்புஜம் ந்யஞ்ச்ய பரம் ஆகுஞ்ச்ய''* என்று பட்டர் ஸ்ரீகுணரத்ன கோசத்தில் (38) அருளியபடியே வலது திருவடியை தொங்க விட்டும், இடது திருவடியை மடித்தும் வைத்து வீற்றிருக்கிறாள்.

தாம் வணங்குவதற்கே பிராட்டி இவ்வாறு வீற்றிருக்கிறாள் என்பதற்குச் சேர *''மம நதிக்ஷமம்''* என்று பட்டர் அருளியது காண்க.

இப்படிப்பட்ட பெருமைகளையுடைய பெரிய பிராட்டியாரைத் தினந்தோறும் ஸ்ரீவைஷ்ணவர்கள் அனுஸந்திக்கும் குருபரம்பரையில் ஆரோஹண க்ரமத்தில் பெரிய பெருமாளுக்கு அடுத்ததாக *''ஸ்ரீயை நம:''* என்று அருளுவது வழக்கம். அத்தகைய பெரிய பிராட்டியாரான ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளுக்கு பல்லாண்டு பாடுவோமாக.

வாழித்திருநாமம் வளரும்...

# திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருமலையில் பக்தர்கள் செய்யக்கூடியன

- ✓ திருமலைக்கு வரும் முன்னர் உங்களுடைய இஷ்ட அல்லது குல தெய்வத்தை வழிபடுங்கள்.
- ✓ கோயிலுக்குள் அமைதியைக் காத்து உங்களுக்குள்ளேயே 'ஓம் ஸ்ரீவேங்கடேசாய நம:' என்று மனனம் செய்யுங்கள்.
- ✓ கோயிலுக்குள் உள்ளபொழுது ஏழுமலையானை தியானியுங்கள்.
- ✓ திருமலையில் பாபவிநாசனம் மற்றும் ஆகாச கங்கை போன்ற அரிய தீர்த்தங்களை பார்த்து மகிழவும்.
- ✓ திருமலையில் இருக்கும்வரை பழைய சம்பிரதாயங்களுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் மதிப்பளியுங்கள். உடன் வரும் யாத்திரிகர்களிடையே சமய உணர்வுகளை மேம்படுத்துங்கள்.
- ✓ உங்கள் காணிக்கைகளை உண்டியில் மட்டுமே செலுத்துங்கள்.
- ✓ திருமலையைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுங்கள்.
- ✓ திருமலையானை தரிசனம் செய்யும்பொழுது பாரம்பரிய ஆடைகளையே அணியுங்கள்.
- ✓ கொரோனா தொற்று பரவலை தடுக்கும் விதமாக தவறாமல் முகக்கவசத்தினை பயன்படுத்தவும். சமூக இடைவெளியை பின்பற்றவும்.

## திருமலையில் பக்தர்கள் செய்யக்கூடாதன

- ✗ உங்களுடன் அதிகமான நகைகளையோ, பணத்தையோ எடுத்து வரவேண்டாம்.
- ✗ ஏழுமலையானைத் தரிசிப்பதற்குத் தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் திருமலைக்கு வராதீர்கள்.
- ✗ தரிசனத்திற்காக அவசரப்படாதீர்கள். வாய்ப்பு வரும்வரை க்யூவில் நின்று செல்லுங்கள்.
- ✗ சம்பிரதாயங்கள் அனுமதிக்காத பட்சத்தில் கோயிலுக்குள் வராதீர்கள்.
- ✗ திருமலையில் எல்லா மலர்களும் இறைவனுக்கே உரியன. ஆகையால் மலர்களை சூடாதீர்கள்.
- ✗ தண்ணீரையும், மின்சாரத்தையும் வீணாக்காதீர்கள்.
- ✗ புதியோரை தங்கும் அறையில் அனுமதிக்காதீர்கள். புதியோரிடம் அறை சாவிகளை ஒப்படைக்காதீர்கள்.
- ✗ எம்பெருமான் தரிசனம் மற்றும் தங்குவசதிக்காக தளாலிகளை அணுகாதீர்கள்.
- ✗ தெருவில் விற்கும் போலி பிரசாதங்களை வாங்காதீர்கள்.
- ✗ கோயில் வளாகத்திற்குள் துப்புதல் போன்ற அருவருப்பான செயல்களைச் செய்யாதீர்கள்.
- ✗ நான்கு மாடவீதிகளிலும் காலணிகளைப் பயன்படுத்தாதீர்கள்.
- ✗ கோயிலுக்குள் அலைபேசி, புகைப்படக்கருவி முதலான மின்னணுக்கருவிகளை, ஆயுதங்களைக் கொண்டு வர வேண்டாம்.
- ✗ பல்வேறு வகையான அரசியல் கூட்டங்கள், சுவரொட்டிகள், போராட்டங்கள், உண்ணா விரதங்கள், சாலை மறியல், கடையடைப்புகள் முதலானவைகள் திருமலையில் செய்தல் கூடாது.

– செயலாட்சித் தலைவர்

# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

# முப்புர அசுரர்களை அழித்தது



தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி-9676695443

பரமபக்தரான பிரகலாதரின் சரித்திரத்தையும், இரண்யகசிபுவின் வதத்தைப் பற்றியும், ஸ்ரீநரசிம்மரின் லீலைகளையும் வர்ணித்த நாரத முனி, இக்கதைகளை எவரொருவர் மனதை ஒருமுகப்படுத்திக் கேட்கிறார்களோ அவர்கள் தவறாமல் வைகுந்தத்தை அடைவார்கள் எனக் கூறினார். பின்னர் தர்ம ராஜாவைப் பார்த்து "தர்மராஜா! தேவாதி தேவனான ஸ்ரீகிருஷ்ணர் சாதாரண மனிதனைப் போன்று உங்கள் வீட்டில் இருந்து வருவதினால் நீங்கள் மிகவும் பாக்கியசாலிகள். இதையறிந்தே மகாமுனிகளும், ரிஷிகளும் பலரும் தங்கள் வீட்டிற்கு எப்பொழுதும் வருவதும் போவதுமாய் இருக்கிறார்கள். ஸ்ரீகிருஷ்ணர் உங்களுக்கு நண்பராகவும், உங்கள் நலம் விரும்பியாகவும், உறவாகவும், ஆத்மாவாகவும் இருந்து வருகிறார்.

உண்மையில் நீங்கள் அவரை வணங்கி போற்றும் நிலையில் இருந்தாலும், தேவாதி தேவனாகிய அவர் ஒரு சமயம் உங்களுக்கு சேவகனாகவும் மற்றொரு சமயம் குருவாகவும் இருந்து வருகிறார். பிரம்மாருத்ரர் முதலானவர்களாலும் ஸ்ரீகிருஷ்ண தத்துவத்தை முழுமையாக வர்ணிக்க இயலாது. இவ்விதமான உரையாடல் நாரதருக்கும் தர்மராஜாவிற்கும் இடையில் நடந்தது. இது ஸ்ரீமத்பாகவதத்தில் ஏழாம் ஸ்கந்தத்தில் கூறப்பட்டுள்ளது. நாரதர் பிரகலாதர் வரலாற்றைக் கூறி முடித்தப்பின்பு மற்றொரு சரித்திரமான முப்புர அசுரர்களை அழித்த கதையைத் தர்மராஜாவுக்குக் கூறத் தொடங்கினார்.

ஒரு சமயம் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் ஸ்ரீகிருஷ்ணரின் கருணையால் தேவர்களின் கை ஓங்கியது. போரில் தேவர்கள் அசுரர்களை வென்றனர். தோற்று ஓடிய அசுரர்கள் மாயாவியான மயனைச் சென்றடைந்தனர். நடந்தவைகள் அனைத்தையும் அவனிடம் எடுத்துக்கூறி தங்களுக்கு உதவும்படி வேண்டினர். அதற்கு சம்மதித்த மயன் பொன், வெள்ளி, இரும்பு ஆகியவைகளைக் கொண்டு மூன்று புரங்களை உண்டாக்கினான். அவைகள் மூன்றும் விமானங்கள் போன்ற தோற்றம் உடையதாக இருந்தன. அந்த விமானத்தோற்றம் உடைய முப்புரங்களையும் பெற்று வலுப்பெற்ற அசுரர்கள் மீண்டும் மூன்று உலகங்களிலும் வாழும் அனைவரையும் துன்பப்படுத்தத் தொடங்கினார்கள்.

துன்பத்திற்கு ஆளான தேவர்கள் பரம சிவனிடம் சென்று தங்கள் நிலையை எடுத்துச் சொல்லி காப்பாற்றும்படி வேண்டினர். அப்பொழுது சிவபெருமான் அவர்களுக்கு அபயம் தந்து, அந்த முப்புரங்களின் மீதும் தன்னுடைய பாசுபதாஸ்திரத்தை பிரயோகித்தார். அந்த அஸ்திரத்திலிருந்து வெளிப்பட்ட பானங்கள் முப்புரத்தையும் எரித்து அழித்தன. அசுரர்கள் மடிந்தனர். தன்னுடைய சக்திக்குச் சவாலாக விளங்கியதைக் கண்டு மாயாவி மயன் மிகவும் வருந்தினான். உடனே இறந்து போன அசுரர்கள் அனைவரையும் தான் நிர்மானித்திருந்த அமிர்த பானத்தில் கொண்டு போய் போட்டான். அமிர்தம் அவர்கள்



உடலில் பட்டவுடனே அசுரர்கள் எல்லோரும் மீண்டும் உயிர் பெற்று எழுந்தனர். அமிர்தத்தின் பிரபாவத்தினால் அவர்கள் வஜ்ஜிரத்தைக் காட்டிலும் திடமான உடல் பெற்றவர்களாக விளங்கினர். மீண்டும் சிவபெரு மானிடம் போரிட வந்தனர். இதைக் கண்டு சிவபெருமான் மனங்கலங்கினார். இதைக் கண்ட ஸ்ரீவிஷ்ணு, மாயாவி மயன் உண்டுபண்ணிய இந்த அசுர உற்பத்தியைத் தடுத்து நிறுத்துவதற்கு உபாயம் ஒன்றை ஆலோசித்தார். அந்த உபாயத்தின் படி மகாவிஷ்ணு பசுவின் வடிவத்தை எடுத்துக் கொண்டார். பிரம்ம தேவர் அந்த பசுவின் கன்றாக உருவம் கொண்டார். இருவரும் சேர்ந்து முப்புரத்திற்குள் நுழைந்தனர். விஷ்ணு அந்த அமிர்த பானத்தை முழுவதையும் குடித்து விட்டார். அசுரர்கள் பசுவையும் கன்றையும் பார்த்த போதிலும், பகவானின் மாயையில் சிக்கிக் கொண்ட அவர்கள் அதை தடுத்து நிறுத்த முயற்சிக்க வில்லை.

பசுவும் கன்றும் அமிர்தத்தைக் குடித்து விட்டது என்று மயன் அறிந்தவுடன், விதியை யாராலும் வெல்ல முடியாது என்று அசுரர்களைப் பார்த்துக் கூறினான். அப்பொழுது தேவாதி தேவனாகிய ஸ்ரீகிருஷ்ணர் தன் சக்தியின் மூலமாக இரதம், சாரதி, கொடி, குதிரைகள், யானைகள், வில் அம்புகள், கவசங்கள் முதலான ஆயுதங்களை சிவபெருமானுக்கு வழங்கினார். அதன் மூலமாக மிகவும் உற்சாகம் அடைந்து, சிவபெருமான் அசுரர்களுடன் போரிட்டு அவர்களை அழித்ததோடு வில்லிலிருந்து அம்புகளைப் பறக்க விட்டு, அவர்களு டைய முப்புரங்களையும் எரித்து அழித்தார். அப் பொழுது தேவர்களும், ரிஷிகளும், பித்ரு தேவதைகள், சித்தர்கள் மற்றவர்களும் ஜெய ஜெய என்று கோஷம் எழுப்பியவாறு சிவபெருமான் மீது மலர் மாரிப்பொழிந் தனர். இவ்வாறாக சிவபெருமான் முப்புரத்தை சாம்ப லாக்கி பெருமை பெற்றார். பின்னர் அவர் பிரம்மா முத லான தேவர்களால் பூஜிக்கப்பட்டு பிறகு கைலாசத் திற்குப் புறப்பட்டுச் சென்றார். ஸ்ரீகிருஷ்ணரால் நடத்தப் பட்ட அற்புதமான லீலைகளைச் சான்றோர்கள் மூலம் கேட்பதினால் கேட்போர் அனைவரும் புனிதத் தன்மை அடைவார்கள் என்று நாரதர் தர்மராஜாவிடம் கூறினார்.

பிரகலாதனின் சரித்திரத்தையும் முப்புரம் அழித்த வரலாற்றையும் நாரத முனிவரின் வாயிலாகக் கேட்டறிந்த தர்மராஜா, மானிடர்களுக்கு உரிய சாதாரண தர்மங்கள் பற்றியும், வர்ணாசிரம தர்மங்கள் பற்றியும் கேட்டறிய விரும்பினார்.

நாரத முனி மானிடர்களுக்குப் பரமகுரு என்பதை தர்ம ராஜா நன்கு அறிவார். மானிடர்களுக்கு பக்தி யோகத்தைக் கற்றுத் தருவதற்காகவே நாரத முனி பக்தி சூத்திரங்களை உண்டாக்கினார். உண்மையில் சொல்லப் போனால் மானிடன் தர்மத்தைப் பற்றியும், சம்பூர்ண வாழ்வைப் பற்றியும் அறிய வேண்டுமென்றால் அது நாரத முனிவரின் உபதேசத்தாலேயே பெற வேண்டும். தர்மராஜா இந்த ஞானத்தைப் பெற்றிருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். நாரதமுனி முதலில் உலக உயிர்களை எல் லாம் காப்பவராகிய ஸ்ரீகிருஷ்ணரை வணங்கி, பின்பு தான் நாராயணனிடமிருந்து கேட்டறிந்த சனாதன தர்மத்தை விவரிக்கத் தொடங்கினார்.

தேவாதி தேவனாகிய ஸ்ரீஹரியே எல்லா வேதங்க ளுக்கும் சாரமாக விளங்குபவர். எல்லா தர்மங்களுக்கும் ஆதாரமாகத் திகழ்பவர். இதையே தர்மமாகக் கொள்ள வேண்டும். இதை ஆதாரமாகக் கொண்டே மனம், ஆத்மா, உடல் மற்றும் எல்லாமும் மகிழ்ச்சி அடைகின் றன. சத்தியம், கருணை, தவம் (முக்கிய நாட்களில் உபவாசம் இருத்தல்) தினமும் இருவேளை நீராடுதல், பொறுமை, நல்லது கெட்டது இரண்டையும் பிரித்தறிதல், மனவுறுதி, புலனடக்கம், அகிம்சை, பிரம்மசரியம், தானம், மகிழ்ச்சி, சாதுக்களுக்கு சேவை செய்தல், தேவையில்லாத சிந்தனைகளை மெதுவாக விட்டு விடுதல், அவசியமான காரியங்கள் மீது கவனத்தைச் செலுத்துதல், மௌனமாகவும் கம்பீரமாகவும் இருத்தல், தேவையில்லாத பிரசங்கம் செய்யாதிருத்தல், உயிர்கள் அனைத்துக்கும் (மானிடர்கள், விலங்கினங்கள்) சமான மாக உணவளித்தல், ஒவ்வொரு உயிரையும் (முக்கிய மாக மனிதர்கள்) இறைவனின் வடிவமாகப் பார்த்தல், இறைவனைப் பற்றிய கருத்துக்களைக் கேட்பதும், போற்றுவதும், எப்பொழுதும் அவன் நாமத்தினையே உச்சரித்துக் கொண்டிருத்தல், சேவை, அர்ச்சனை,



வணங்குதல், இறைவனுக்கு எப்பொழுதும் அடியேனாக இருந்து வருதல் முதலானவைகள் மானிடர்கள் அனுசரிக்க வேண்டிய தர்மங்களாகும். இந்த விதமான குணங்கள் உடைய மானிடர்கள் தேவாதி தேவனைக் கண்டு அவன் திருவடியை அடைவார்கள். அந்தணர்கள், க்ஷத்திரியர்கள், வைஷ்யர்கள் முதலானவர்கள் தங்களுடைய வம்சாசரங்கள் மூலமாகவும் நடவடிக்கைகள் மூலமாகவும் உண்மையாக இருந்து இறைவனை ஆராதிப்பதும், வேதங்களைக் கற்பதும், தானம் செய்வதும், மனவுறுதியுடன் இருத்தலும், புலனடக்கம் கொண்டிருத்தலும், தவமும், மன்னிக்கும் குணமும், ஞானம் கருணை முதலான குணங்களும் அந்தணருக்கு உரியதாகும்.

போரில் வீரமும், அஞ்சாத குணமும், தேஜஸ்சும், கட்டுப்பாடும், மன்னித்தலும், அந்தணர்களைக் காத்தலும், சத்தியத்தைக் காத்தலும் க்ஷத்திரியர்களின் குணங்களாகும். தேவர்கள், குருக்கள், விஷ்ணு இவர்கள் மேல் பக்திக் கொண்டு இருத்தல், அறம் பொருள் இன்பம் இவைகளைக் காக்க முயற்சித்தலும், குருவின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்தலும், நல்ல வழிகளில் செல்வத்தைச் சேர்க்க முயற்சிப்பதும் வைஷ்யர்களின் குணங்களாகும்.

கணவனை வணங்குவதும், அடக்கமாக இருப்பதும், கணவனின் உறவினரிடத்தும் நல்ல விதமாக நடந்து கொள்வதும், கணவன் செய்கின்ற விரதங்களுக்குத் துணையாக நிற்பதும் போன்ற இந்த நான்கு நியமங்களையும் பதிவிரதையான ஒரு பெண் கடைபிடிக்க வேண்டியதாகும்.

பொறுமையானவளாகிய பெண் எல்லாவிதமான சூழ்நிலைகளையும் எதிர் கொள்பவளாகவும் இருத்தல் வேண்டும். வீட்டுக் கடமைகளை சரியாக நிறைவேற்றுபவளாகவும் சத்தியத்தைக் கடைபிடிப்பவளாகவும், மனம், மொழி, மெய் என்னும் முக்கரண சுத்தி உடையவளாகவும் இருத்தல் வேண்டும். இவ்விதமாக கணவனை அநுராகத்துடன் சேவித்தல் வேண்டும்.

லக்ஷ்மி தேவியைப்போல கணவனைப் போற்றி வரும் பெண் பக்தனான கணவனோடு தானும் வைகுண்டத்திற்குச் சென்று என்றும் நித்தியவளாக ஆகின்றாள் என்று நாரதமுனி வர்ணித்தார்.

# வால்மீகி புரம் ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி

ஸ்ரீராமபிரான் மீதுள்ள பற்றின் காரணமாக திரேதாயுகத்தில் ஜாம்பவான் இவ்வாலயத்தை அமைத்ததாகவும், பின் சோழர்கள், விஜய நகர மன்னர்கள் காலத்தில் விரிவாக்கத் திருப்பணிகள் செய்யப்பட்டன.

**ஆலயம் திறந்திருக்கும் நேரம் :**

ஸ்ரீபட்டாபிராமர் ஆலயம் அதிகாலை 5.30 மணிக்கு சுப்ரபாத சேவையுடன் வழிபாடுகள் துவங்கி இரவு 8.00 மணி வரை பக்தர்களின் தரிசனத்திற்காக ஆலயம் நடை திறந்திருக்கும்.

**ஆலய இருப்பிடம் :**

ஆந்திர மாநிலம், சித்தூரிலிருந்து 92 கி.மீ. தொலைவிலும், திருப்பதியிலிருந்து சுமார் 93 கி.மீ. தொலைவிலும் வால்மீகிபுரம் உள்ளது. சித்தூர் மற்றும் திருப்பதியிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன.

**ஆலய முகவரி :**

ஸ்ரீபட்டாபி சீதாராம ஆஞ்சநேய ஸ்வாமி ஆலயம், வால்மீகிபுரம், சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம் 517 277. தொலைபேசி எண். 08586 –272023.





மொழி கற்போம்

# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## पञ्चमः पाठः பாடம்-5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| एकः | = ஒருவன் | प्रातः | = அதிகாலை | अस्तु | = இருக்கட்டும், ஆகட்டும் |
| अनेके | = அதிகம் பேர் | सायम् | = அந்திவேளை | कति | = எத்தனை, எவ்வளவு பேர் |
| एधि | = இருங்கள் | नक्तम् | = இரவு | असानि | = நான் இருக்கின்றேன் |

### வினாக்கள்

१. तत्र कति सन्ति?
२. एकः अद्य प्रातः तत्रासीत्।
३. सः तत्रास्तु।
४. त्वम् अद्य सायम् अत्र एधि।
५. सायं तत्र अनेके आसन्।
६. अहं तत्र असानि।
७. ते सर्वे नक्तं तत्र न सन्ति।
८. यूयं अद्य नक्तं कुत्रास्त?
९. वयं सर्वे अत्रास्म।
१०. कति अत्रासन्?

1. அங்கு எத்தனை உள்ளன? (எவ்வளவு பேர் உள்ளனர்?)
2. ஒருவன் இன்று அதிகாலை அங்கு இருந்தான்.
3. அவன் அங்கு இருக்கட்டும்.
4. நீ இன்று அந்திவேளை இங்கு இரு.
5. அதிகாலை அங்கு அதிகம் பேர் இருந்தனர்.
6. நான் அங்கு இருக்கின்றேன்.
7. அவர்கள் அனைவரும் இரவு அங்கு இல்லை.
8. நீங்கள் இன்று இரவு எங்கு இருந்தீர்கள்?
9. நாங்கள் அனைவரும் இங்கு இருந்தோம்.
10. எத்தனை பேர் இங்கு இருந்தீர்கள்?

### விடைகள்

1. நீ இன்று இரவு அங்கு இரு.
2. இன்று அதிகாலை அங்கு எத்தனை பேர் இருந்தனர்?
3. அங்கு ஒருவன் இருந்தேன்.
4. நீங்கள் அங்கு இருந்தீரா?
5. நாங்கள் இங்கு இல்லை.
6. அதிகம் பேர் அங்கு இருந்தனர்.
7. நான் இங்கேயே இருக்கின்றேன்.
8. அவன் தற்போது எங்கு உள்ளான்?
9. அவன் இங்கு இல்லை.
10. நீ எப்பொழுது இருந்தாய்?

१. त्वम् अद्य नक्तं तत्र एधि।
२. अद्य प्रातः तत्र कति आसन्?
३. तत्र एकः आसीत्।
४. यूयं तत्र आस्त किं?
५. वयं अत्र नास्म।
६. अनेके तदा तत्र आसन्।
७. अहम् अत्र असानि।
८. सः इदानीं कुत्रास्ति?
९. सः अत्र नास्ति।
१०. त्वं कदा आसीः?

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி
தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா



ஆயுர் வேதம்

# சூரிய கிரணங்கள்

தெலுங்கு மூலம் :
டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் :
திருமதி வி.உஷா, 99850 02156

*"தர்மார்த்த காம மோக்ஷாணாம் ஆரோக்யம் மூலமுத்தமம்"* என்ற வாக்கிற்கு ஏற்றபடி நமக்கு ஆரோக்கியத்தை அருளும் கடவுள் சூரிய பகவான், உலகத்தில் உள்ள எல்லா உயிர்களுக்கும் சக்தியை வழங்குவது சூரியன். சூரியனை வழிபடும் முறைக்கு சௌமாரம் என்று பொருள். சூரியன், சிவபெருமானின் வலது கண்ணாக இருப்பதாக புராணங்கள் தெரிவிக்கின்றன. சூரியனை சிவனோடு ஒப்பிட்டு சிவ சூரியன் என்றும், விஷ்ணுவோடு ஒப்பிட்டு சூரிய நாராயணர் என்றும் அழைக்கிறது புராணம்.

*"சுவதி ப்ரேரயதி ஜனான் கர்மண்யேதி சூர்ய:"* என்ற வாக்கியத்தில் அனைத்து உயிர்களையும் காக்கக் கூடியவன் சூரியன் என்பது பொருள். அந்த சூரிய பகவானின் கிரணங்களால் நம்முள் உற்சாகம், உயிர் சக்தி, மானசீக சக்தி பெற்று பணிபுரிய உதவுகின்றது.

பண்டைய காலத்தில் மக்கள் தூங்கி எழுந்தவுடன் சூரியனை வணங்கினர். சந்த்யா வந்தனம் செய்தனர். படிப்பறிவு இல்லாத பாமரர்களும் குளித்தவுடன் சூரியனை வழிபட்டனர். சூரியன் நம் கண் முன் தெரியும் கண்கண்ட தெய்வமாவார். அப்படிப்பட்ட சூரிய பகவானை வணங்கிய பின்னரே தம் வேலைகளை செய்யத் துவங்குவர்.

சூரியனின் ஒளியால் வரக்கூடிய கதிர்கள் மிகவும் ஆனந்தமானது. அவைகளில் புறஊதாக்கதிர்களாலும் உடலில் உள்ள கொழுப்பின் உதவியாலும் வைட்டமின் "டி" சக்தி உற்பத்தியாகிறது.

தகுந்தளவு "வைட்டமின் டி" சத்து நம் உடலில் இல்லையென்றால் பல விதமான வியாதிகள் நமக்கு ஏற்படும். மூட்டு வலிகள், தசைவலி, சோர்வு, தூக்கமின்மை, குழந்தையின்மை போன்ற பல வியாதிகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. மேலும், எலும்பு சம்பந்தப்பட்ட வியாதிகள், சரும வியாதிகள், இரத்தக்கொதிப்பு, நீரிழிவு, அதிக எடை போன்ற நோய்களும் ஏற்படும். வெள்ளை அணுக்கள் சரியாக பணிபுரியாது. செரிமான சக்தியும் குறையும். மறதி, கண்பார்வை, முடி வளர்ச்சி, சரும அழகு ஆகியவையும் குறையும்.

ஆகையால், சூரிய ஒளி மிக மிக அவசியம். இவைகளை நாம் மனதிற்கொண்டு நம் பெரியோர். சில ஆசாரங்கள், சாம்பிரதாயங்கள் ஏற்பாடு செய்தனர். இவற்றிற்கு பின் எத்தனையோ உபயோகங்கள் மறைந்துள்ளன என்பதை நினைவிற் கொண்டு நாள்தோறும் சூரியபகவானை வணங்கி உடல் ஆரோக்கியத்தைப் பெற்று இன்பமான வாழ்வை வாழ்வோம்.

இளம் குழந்தைகளுக்கு நல்லெண்ணெய் பூசி காலை நேரத்தில் தோன்றும் இளங்கதிரவனின் கிரணங்கள் விழும்படி வெளியே படுக்க வைக்க வேண்டும். அதன் மூலம் குழந்தைகள் வைட்டமின் "டி" பெற்று ஆரோக்கியமாகவும் உற்சாகமாகவும் இருப்பர்.

போகிப் பண்டிகை மாலை சூரியனின் வடிவம் நிறம் கொண்ட சூரியனுக்கு பிடித்த இலந்தைப் பழத்தை குழந்தைகளுக்கு தலை மேல் போட்டு ஆசிர்வதிப்பர். அதன் மூலம் சூரியனின் சக்தியை குழந்தைகள் பெறுவர் என்பது நம் முன்னோர்களின் நம்பிக்கை.

கோடைக்காலம் ஆரம்பத்தில் காலை முதல் மாலை வரை காற்றாடி, பட்டம் பறக்க விடுதல்

போன்ற பழக்கம் இருந்தது. அச்சமயத்தில் எள், வெல்லம் கலந்த இனிப்பு பண்டத்தையும் குழந்தைகளுக்குத் தருவர். இதன் மூலம் உடலில் வெப்பம் சேராமல் தடுப்பது மட்டுமின்றி, எள்ளில் கொழுப்புச் சத்து கால்ஷியம் போன்ற சத்துகளும் கிடைக்கப் பெறும்.

அது மட்டுமின்றி போகிப்பண்டிகை அன்று பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற பழமொழிக்கேற்ப பழையவற்றை நாம் மாட்டு சாணி (வறட்டி), பசும் நெய் போன்றவற்றால் எரிக்கிறோம். அவை எரியும் போது வெளிவிடும் புகையில் சில்வர் அயோடைட், நைட்ரஜன் போன்ற வாயுக்களால் கோடைகாலங்களில் நமக்கு சில வியாதிகள் வராமல் தடுக்கின்றன.

அவ்வாறே இரதசப்தமி நாள் அன்று சூரிய உதயத்தின்போது ஏழு எருக்கை இலைகளை தலை மேல், புஜங்களின் மேல் மற்றும் கைகளின் மேல் வைத்துக் கொண்டு தலைக்குளியல் செய்வது நம் பண்பாடு. தலை மேல் வைத்துக்கொள்ளும் இந்த எருக்கன் இலை சூரிய சக்தியை உள்ளிழுத்து நம் உடம்பிற்கு உள்ளே அனுப்புகிறது. இதனால் கோடை காலத்தில் வெப்பத்தை தாங்கிக் கொள்ளும் சக்தி நமக்கு உண்டாகிறது.

இவ்வாறு பல வகையில் பயன்படக் கூடிய சூரிய சக்தியை நாம் பயன்படுத்திக் கொண்டு நல்வாழ்வு பெற வேண்டும் என்று எத்தனையோ சித்தர்கள் நமக்குக் கூறியுள்ளனர்.

தற்போதுள்ள நாகரீக உலகத்தில் விழிப்புணர்வு இல்லாமல் எவ்வளவோ பேர், சூரிய சக்தியை புறக்கணித்து தூரமாகின்றனர் என்றும் கூறலாம்.

அனைத்து உயிர்களையும் காத்து நோயற்ற வாழ்வை அளிக்கும் சூரிய பகவானை நாள்தோறும் வணங்கி சிறந்த ஆரோக்கியமான வாழ்வைப் பெறுவோம்.

*''சர்வ து:கோ பசாந்தாய - சர்வ பாப ஹராயச*
*சர்வ வியாதி வினாசாய - பாஸ்கராய நமோ நம:''*

– பவிஷ்யோத்தர புராணம்.

# வால்மீகிபுரம் ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி



**ஆலய நிர்வாகம்**

**முறையான பராமரிப்பின்றி இருந்த வால்மீகிபுரம் ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி ஆலய நிர்வாகத்தை திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஏற்றுக் கொண்ட பின்னர் இவ்வாலயம் நன்கு பராமரிக்கப்பட்டு, அனைத்து உற்சவங்களும் மிகச்சிறப்பான வகையில் நடைபெற்று கொண்டு வருகின்றது.**

**உற்சவங்கள்**

**பாஞ்சராத்ர ஆகம முறைப்படி தினப்படி பூஜை, உற்சவங்கள் நடைபெறும் இந்த வால்மீகிபுரம் ஸ்ரீபட்டாபி சீதாராமஸ்வாமி ஆலயத்தில் ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் ஸ்ரீராமநவமிக்கு மூன்று நாட்களுக்கு முன்பாக கொடி ஏற்றப்பட்டு ஸ்ரீராம நவமிக்குப் பின்னர் ஐந்து நாட்கள் வரை, ஒன்பது நாட்களுக்கு பிரம்மோத்ஸவம் வெகு விமரிசையாக நடைபெறுகிறது. பிரம்மோற்சவத்தின் ஆறாவது நாள் திருக்கல்யாணம் முடிந்து ஸ்ரீபட்டாபி சீதாராமர் கருட வாகனத்தில் திருவீதி உலா வர, ஏழாவது நாள் ரதஉற்சவம் நடைபெறுகிறது. மேலும் ஒவ்வொரு மாதம் புனர்பூசம் நட்சத்திர நாளன்று திருக்கல்யாணம், சிராவண பஞ்சமி, சஷ்டி மற்றும் சப்தமி நாட்களில் பட்டாபிஷேக உற்சவம், ஐப்பசி மாதம் திரயோதசி, சதுர்த்தசி மற்றும் பௌர்ணமி ஆகிய மூன்று நாட்களுக்கு பவித்ர உற்சவம் ஆகியவை மிக விமரிசையாக நடைபெறுகின்றன.**

நீதிக்கதை



# ஞானம் பிறந்த கதை

திரு. பா.பூ. பாலாஜி ஷர்மா,
பாப்பாரப்பட்டி, 86670 21332.

இவ்வுலகில் நிலையானது என்று எதுவுமே இல்லையா? தமிழிலே ஒரு செய்யுள் உண்டு. அதன் ஒரு வரி, "இந்நிலத்து மன்னுதல் வேண்டின் இசை நடுக" என்று அமையும். அதாவது இவ்வுலகில் புகழ் ஒன்றே நிலையானது. நாம் மறைந்த பிறகும் அது நம்மைப் பற்றி பேசும். வான்மீகி, அவர் எழுதிய நூலால் அவர் புகழால் வாழ்கிறார். அது போல கம்பன் அவர் எழுதிய இராமாய ணத்தால் அவர் புகழ் பரவி நிற்கிறது. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். மனம், வாக்கு, காயம் என இம் மூன்றில் எவற்றின் மூலமாவது நாம் இச்சமுதாயத்திற்கு எதையாவது நல்லது செய்ய வேண்டும். அவற்றின் மூலம் நமக்கு புகழ் கிடைக்கும். ஆனால், அதையும் "கிருஷ்ணார்ப்பணம்" எனச் சொல்லி இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும் பக்குவம் வேண்டும். பாகவதத் திலிருந்து ஒரு நிகழ்வை சொல்கிறேன் கேளுங்கள்.

சுகபிரம்மர் தம் தந்தையான வியாசரை நோக்கி, "தந்தையே! எனக்கு ஞானம் பிறந்து விட்டதாக ஒப்புக் கொள்கிறீர்களா?" எனக் கேட்கிறார். சுகா! ஞானம் பிறக்க வேண்டுமானால் குருவினுடைய அருள் தேவை என வியாசர் சொல்கிறார். தந்தையே! நீங்களே எனக்கு குரு! ஆகவே தாங்கள் தான் எனக்கு ஞானம் பிறந்திருக்கிறதா இல்லையா என அறிவுறுத்த வேண்டும்! என்கிறார் சுகமுனிவர். வியாசர் தன் மகனைப் பார்த்து, நான் சொல்வதை விட மிதிலை மன்னரும் சிறந்த ஞானியுமான ஜனகரே இதற்கான பதிலை சொல்ல வல்லவர். நீ அவரைச் சென்று கேட்பாயாக என ஆசிர்வதித்து அனுப்புகிறார். சுகமுனியும் ஜனகரைச் சந்திக்கிறார். "தாங்கள் யார் என அறியலாமா? என்ன விஷயமாக வருகிறீர்கள்?" என ஜனகர் கேட்கிறார்.

அடியேன் சுகர். என் தந்தை வேதம் வகுத்த வியாசர். நான் ஞானவானாகி விட்டேனா? என அறியும் நோக்கில் வந்தேன். தங்களிடம் அறிந்து வரும்படி என் தந்தையே அனுப்பினார் என்றார்.

"அப்படியா அரண்மனைக்குள் வரும் போது என்னவெல்லாம் பார்த்தீர்கள்?" என ஜனகர் கேட்டார்.

"தூண்கள், படிக்கட்டுகள், மாடங்கள், மதில்கள், கதவுகள் என பலவற்றை பார்த்தேன். ஆனால், யாவும் சர்க்கரை துண்டங்களாக பார்த்தேன். மேலும், வரும் பாதையில் காவலர்களைக் கண்டேன். அவர்களும் சர்க்கரையாய் காட்சியளித்தனர். அவ்வளவு ஏன்? பேசும் நானும் தாங்களும் சர்க்கரைத் துண்டங்களாய் காட்சியளிக்கிறோம்" என்றார் சுகர்.

"சுகப்பிரம்மரே! தாங்கள் ஏற்கனவே ஞானியாகத் தான் இருக்கிறீர்கள்! நீங்கள் செல்லலாம்" என விடை கொடுத்தார் மகாஞானி ஜனகர். ஆம்! இவ்வுலகில் நாம் வாழும் வீடும், கட்டிடங்களும் மனிதர்களாகிய நாமும் ஒரு நாள் சர்க்கரையாய் கரைந்து காணாமல் போகப்போகிறோம். யார் இதை உணர்ந்து நடந்து கொள்கிறார்களோ அவர்கள் யாவரும் ஞானிகள் தான். இந்த உலகத்தில் எது தான் மிஞ்சுவது? இந்த சமுதாயத்திற்கு நாம் எதையாவது நல்லது செய்ய வேண்டும். அது உங்கள் மனதை மகிழ்ச்சியாக்கும். மேலும், "இவ்வுலகம் உள்ளளவும் அதை பேசிக் கொண்டிருக்கும்" அது மட்டும்தான் நிலையானது.

சுகப்பிரும்மம் போன்று நாமும் ஞானிகள் ஆக முடியவில்லையெனினும் இவ்வுலகை பார்க்கும் பார்வையையாவது சற்றே விசாலமாக்குவோம்.


சித்திரக்கதை
அர்ஜுனன் தபசு
கதை மூலம்:
டாக்டர் கே. ரவிச்சந்திரன்
தமிழாக்கம்:
திரு. வ.ஓ. சுரேஷ்
சித்திரம்:
திரு. து. சிவாஜி
அர்ஜுனன், இந்திரனை வணங்குகிறான்.
இந்திர தேவா! எனக்கு திவ்ய அஸ்திரங்களை வழங்குங்கள்
அர்ஜுனா உனக்கு அஸ்திரங்கள் எதற்கு? புண்ணிய லோகத்தையே அளிக்கிறேன். மகிழ்ச்சியாய் இரு.
என் சகோதரர்கள் காட்டில் துன்பமுடன் இருக்க, நான் மட்டும் மகிழ்ச்சியுடன் இருப்பதா? இறப்பிற்கு பிறகும் என் புகழ் நிலைத்து இருத்தல் வேண்டும். அவ்வளவுதானே தவிர மகிழ்ச்சிக்காக இகழ்ச்சி வேண்டாம்.
மகனே! உன் வேண்டுதல் நிறைவேற முதலில் சிவபெருமானை தரிசித்தல் வேண்டும். உடனே சென்று சிவபெருமானை தரிசனம் செய்து கொள்.
பரமேஸ்வரா! அர்ஜுனன் கடுமையான தவம் செய்கின்றான். அவன் கோரிக்கையை நிறைவேற்றுங்கள்.
மகரிஷிகளே! கவலைப்படாதீர்கள். அர்ஜுனனின் கோரிக்கையை நான் நிறைவேற்றுகின்றேன்.
ரிஷிகள் சென்ற பின்பு சிவனும் பார்வதியும் வேடுவன் வேடுவச்சி வேடம் பூண்டனர். இருவரும் அர்ஜுனன் தவம் புரியும் இடத்திற்கு வந்தடைந்தனர்.
மூகன் எனும் அரக்கன் அர்ஜுனனைக் கொல்ல பன்றி உருவில் அங்கு வந்தான். அர்ஜுனன் வில் பானம் எடுத்துக் கொண்டு பன்றியைக் கொல்ல சென்றான்.
அப்பன்றியை நான் கொல்கிறேன். நீ கொன்று விடாதே!
உன் பேச்சினை நான் ஏன் கேட்க வேண்டும்?
அர்ஜுனனும், வேடுவனும் பன்றினை தம் அம்பினால் கொன்றனர்.
இருவரின் அம்பும் பட்டவுடன் அந்த அரக்கன் தன் சுய வடிவினை அடைந்தான்.


யார் நீ? ஆள் நடமாட்டமில்லா இவ்வனத்திலே ஒரு பெண்ணுடன் எதற்காக சுற்றிக் கொண்டிருக்கிறாய்? இந்த அசுரனை நான் கொல்லும் போதே நீயும் ஏன் அம்பு எய்தாய்? இது வேட்டைக்கான தர்மமல்ல.
ஆள் நடமாட்டமில்லா இவ்வனத்திலே நீ ஏன் அமர்ந்துள்ளாய்? நீ பார்ப்பதற்கு நாகரீகமானவனாக, சுந்தரனாக உள்ளாய். இப்பன்றியை முதலில் கொன்றது நானே. நான் கொன்ற பிறகே நீ அம்பு எய்தினாய். வலிமையானவன் என்ற திமிரால் இருக்காதே. வலிமையானவன் என்றால் என்னுடன் போருக்கு வா.
அப்படியே ஆகட்டும்
இதை விட நன்றாக யுத்தம் பண்ண இயலாதா?
அமோகமாக உள்ள என் அஸ்திரங்களையே குறைத்து மதிப்பிடும் இவ்வேடுவன் சாதாரண மானிடன் அல்ல. மாயவேடத்தில் இருக்கும் மாயாவியாக இருத்தல் வேண்டும்.
அக்னி தேவன் வழங்கிய அஸ்திரமும் தீர்ந்து விட்டது. காண்டீபமும் மாயமானது. அர்ஜுனன் நிராயுதபாணியானான்.
அர்ஜுனன் வேடுவனைத் தாக்கினான். வேடுவனும் அர்ஜுனனைத் தாக்கினான். வேடுவன் தாக்கியவுடன் அர்ஜுனன் சுய நினைவு இழந்தான்.
அர்ஜுனன் சுய நினைவு திரும்பி எழுந்து நீராடி விட்டு, மண்ணால் செய்யப்பட்ட சிவலிங்கத்தின் மீது பூக்களை வைத்து சிறிது நேரம் தியானம் செய்தான். பிறகு வேடுவனை பார்த்த போது லிங்கம் மீது தான் வைத்த பூ வேடுவன் தலையிலும் காணப்பட்டது.
எம்பெருமானே! எனக்கு அருள் புரியவே இவ்வடிவில் வந்தீரா!
அர்ஜுனா! உன் போன்ற மாவீரன் மூவுலகிலும் இல்லை. உன் பக்தியை ஏற்று என் திவ்யாஸ்திரங்களை உனக்கு அளிக்கிறேன். இதன் வாயிலாக எதிரிகளை வெல்வாயாக.
தன்யனானேன் தேவதேவா! திவ்யஸ்வரூபரான தங்களை தரிசித்தது என் பாக்யமே பாக்யம். என் தவமும் பூஜையும் நிறேவேறியது.
சுபமஸ்து அர்ஜுனா!
அடுத்த இதழில் மற்றொரு கதையைப் பார்த்து படித்து மகிழ்வோம்!
முற்றும்.

## வினா விடை

1. அத்தியூர் என்று போற்றப்படும் திவ்ய தேசம் எது?
   அ) திருக்கச்சி ஆ)திருமோகூர் இ) திருக்கோளூர்
2. அபிஷேகவல்லி என்னும் திருநாமத்துடன் தாயார் சேவை சாதிக்கும் திவ்யதேசம் எது?
   அ) திருமோகூர் ஆ) திருமெய்யம் இ) திருக்கண்ணமங்கை
3. சதுரங்ககோல விமானம் அமைந்துள்ள திவ்யதேசம் எது?
   அ) திருநறையூர் ஆ) திருவல்லவாழ் இ) திருப்புட்குழி
4. பஞ்சரங்கம் என்று போற்றப்படும் திவ்ய தேசம் எது?
   அ) திருஇந்தளூர் ஆ) திருமோகூர் இ) திருக்கச்சி
5. யோகநரசிம்மர் என்னும் திருநாமத்துடன் பெருமாள் சேவை சாதிக்கும் திவ்ய தேசம் எது?
   அ) திருக்கடிகை ஆ)திருமெய்யம் இ) திருநறையூர்

6) தொண்டரடிப்பொடியாழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்யதேசம் எது?
   அ) திருநறையூர் ஆ) திருவரங்கம் இ) திருமெய்யம்

7) துருவனுக்கு பெருமாள் அருள் செய்த திவ்யதேசம் எது?
   அ) திருக்கச்சி ஆ) ஸ்ரீபெரும்புதூர் இ) திருநாகை

**விடைகள்**
1) அ, 2) இ, 3) ஆ, 4) அ, 5) அ, 6) ஆ, 7) இ

தொகுப்பு : திரு. என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...

*Edited and Published on behalf of T.T.Devasthanams by **Prof. K.Rajagopalan**, Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. P. Ramaraju,** M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati - 517 507.*

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

## 21-04-2021 முதல் 29-04-2021 வரை



21-04-2021 புதன் கிழமை
பகல்:துவஜாரோஹணம்
இரவு:சேஷ வாகனம்

22-04-2021 வியாழக்கிழமை
பகல்:வேணுகான அலங்காரம்
இரவு:ஹம்ஸ வாகனம்

23-04-2021 வெள்ளிக்கிழமை
பகல்:வடபத்ரசாயி அலங்காரம்
இரவு:சிம்ம வாகனம்

24-04-2021 சனிக்கிழமை
பகல்:நவநீத கிருஷ்ண அலங்காரம்
இரவு:ஹனுமத்சேவை

25-04-2021 ஞாயிற்றுக்கிழமை
பகல்:மோகினி சேவை
இரவு:கருட சேவை

26-04-2021 திங்கட்கிழமை
பகல்:சிவதனூர்பாண அலங்காரம்
இரவு:வரவேற்பு, கல்யாணோத்ஸவம்
யானை வாகனம்

27-04-2021 செவ்வாய்க்கிழமை
பகல்:திருத்தேர்

28-04-2021 புதன் கிழமை
பகல்:காளிங்கமர்தன அலங்காரம்
இரவு:குதிரை வாகனம்

29-04-2021 வியாழக்கிழமை
பகல்:சக்ர ஸ்நானம்
இரவு:துவஜாவரோஹணம்

# திருப்பதி

# ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி

# பிரம்மோத்ஸவம்

**2021 மார்ச் 04 முதல் 13 வரை**

